www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

மார்ச் 2010
ரூ. 7.00




## விலைவாசி உலகத்தரமானது!
## பட்டினி நிரந்தரமானது!

படிப்பகம்

www.padippakam.com



# "மக்கள் மீதான போர்தான் அரசு தொடுத்துள்ள நக்சல் ஒழிப்புப் போர்!"

## - புரட்சிகர அமைப்புகள் நடத்திய பிரம்மாண்டமான பொதுக்கூட்டம்

மாவோயிஸ்டுகளுக்கு எதிராக அறிவிக்கப்பட்டிருக்கும் "ஆபரேசன் கிரீன்ஹன்ட்" என்பது மாவோயிஸ்டுகள் மீதான போர் மட்டுமல்ல; மக்கள் மீது அரசும் ஆளும் வர்க்கமும் தொடுத்திருக்கும் போர் - என்பதை அம்பலப்படுத்தும் பொதுக்கூட்டம், கடந்த பிப்ரவரி 20-ஆம் தேதியன்று மாலை சென்னை-எம்.ஜி.ஆர் நகர் மார்க்கெட் பகுதியில் வெற்றிகரமாக நடைபெற்றது.

ம.க.இ.க; வி.வி.மு; பு.மா.இ.மு; பு.ஜ.தொ.மு. ஆகிய அமைப்புகள், நூற்றுக்கணக்கான தெருமுனைப் பிரச்சாரங்கள், ஆலைவாயிற்கூட்டங்கள், பேருந்து-ரயில் பிரச்சாரங்கள் மூலம் தமிழக மக்கள் மத்தியில் இப்பிரச்சாரத்தைக் கொண்டு சென்றிருந்தன. 1.5 இலட்சம் துண்டறிக்கைகள், 10,000 வெளியீடுகள் (அருந்ததி ராய் எழுதிய "இந்தியாவின் இதயத்தின் மீதான போர்" என்ற கட்டுரை), ஆபரேசன் கிரீன் ஹன்டை அம்பலப்படுத்தி பல்வேறு பத்திரிகையாளர்களும் எழுதிய ஆங்கிலக் கட்டுரைகளின் தொகுப்பு நூல், சென்னையிலும் கர்நாடக மாநிலத்திலும் விநியோகிக்கப்பட்ட ஆங்கில, இந்தி துண்டு பிரசுரங்கள், பல்வேறு மாவட்டத் தலைநகரங்களில் நடத்தப்பட்ட அரங்கக் கூட்டங்கள் - என கடந்த 50 நாட்களாக நடைபெற்ற இந்தப் பிரச்சாரத்தின் வீச்சுக்கும் விளைவுக்கும் பொதுக்கூட்டத்தில் திரண்டிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களின் கூட்டம் சான்று கூறியது.



சிறப்புரையாற்றிய ஆந்திரமாநில புரட்சிகர எழுத்தாளர் சங்கத்தைச் சேர்ந்த தோழர் வரவரராவ்

புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணியின் மாநிலத் தலைவர் தோழர் முகுந்தனின் தலைமையில், தியாகிகளுக்கான வீரவணக்கப் பாடலுடன் எழுச்சிகரமாகத் தொடங்கியது பொதுக்கூட்டம். முதலில் பேசிய பெங்களூரு உயர்நீதி மன்ற வழக்குரைஞர் பாலன், ஒரிசா, ஜார்கண்டு மாநிலங்களில் புதைந்திருக்கும் அரிய கனிம வளங்களைப் பட்டியலிட்டுக் கூறினார். மனித குலத்துக்கு என்றென்றைக்கும் தேவைப்படுகின்ற கனிம வளங்களை, அடுத்த 50 ஆண்டுகளுக்குள் பன்னாட்டு நிறுவனங்கள் சுரண்டி எடுத்துவிட்டால், எதிர்காலத்தில் நம் தேவைக்கு அவர்களிடம் கையேந்தி நிற்க நேரிடும் என்ற அபாயத்தைச் சுட்டிக் காட்டினார். ஒரு இலட்சம் கோடி ரூபாய்க்கும் மேல் மதிப்பு கொண்ட கவுந்தி வேடியப்பன் மலையில் இருக்கும் கனிவளங்களை ஜிண்டால் நிறுவனத்துக்குத் தாரை வார்த்துவிட்டு, விற்பனைத் தொகையில் 0.02% மட்டுமே தமிழக அரசு ராயல்டியாகப் பெற இருக்கிறது என்பதைக் கூறி, இந்த மறுகாலனியாக்கக் கொள்ளை என்பது எங்கோ ஒரிசா மாநிலத்தில் மட்டும் நடப்பது அல்ல என்பதையும் விளங்கச் செய்தார்.




சிறப்புரையாற்றிய ஆந்திர மாநில புரட்சிகர எழுத்தாளர் சங்கத்தைச் சேர்ந்த தோழர் வரவரராவ், மாவோயிஸ்டு அமைப்புக்கு எதிராக அறிவிக்கப்பட்டிருக்கும் இந்தப் போரின் பின்புலத்தில் இருக்கும் ஏகாதிபத்திய நலனை அம்பலப்படுத்தினார். பிர்சா முண்டா முதல் அல்லூரி சீதாராமராஜு வரையில் பல பழங்குடித் தலைவர்கள் காலனியாதிக்கத்தை எதிர்த்து வீரம் செறிந்த போராட்டங்களை நடத்தியிருக்கின்றனர். ஆனால், நக்சல்பாரி இயக்கம் தோன்றிய பின்னர், பழங்குடி மக்கள் மார்க்சிய-லெனினிய சித்தாந்தத்தால் வழிநடத்தப்படுவதால், அவர்கள் இப்போது தாங்கள் கொள்ளையிடப்படுவதைத் தடுப்பதற்காக மட்டும் போராடவில்லை, அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காகவும் போராடுகிறார்கள் என்று விளக்கினார். ஏகாதிபத்திய உலகமயமாக்கல் காலத்தில் அரசு நிறுவனத்தில் ஏற்பட்டு வரும் மாற்றங்களைப் பற்றிக் குறிப்பிட்ட அவர், உலக வங்கி அதிகாரியாக இருந்த மன்மோகன்சிங்கும், பன்னாட்டு நிறுவனங்களின் வழக்குரைஞரான ப.சிதம்பரமும், முன்னாள் சி.ஐ.ஏ. தலைவரான ஜார்ஜ் புஷ்ஷும் அரசியலில் ஈடுபடாமலேயே அதிபர், அமைச்சர் பதவிகளைக் கைப்பற்றிக் கொள்வது உலகு தழுவிய போக்காக எழுந்துள்ளதையும், அனைத்திந்தியக் கட்சிகளான பா.ஜ.க, காங்கிரசு, மார்க்சிஸ்டு கட்சி போன்றவை மட்டுமின்றி, பிராந்தியக் கட்சிகளான தி.மு.க. முதல் அகாலி தளம், அசாம் கனபரிசத் முதலான கட்சிகளும் கூட ஏகாதிபத்திய உலகமயமாக்கத்துக்கு ஆதரவான கட்சிகளாக மாறியிருப்பதையும் குறிப்பிட்டார். மாவோயிஸ்டு செயலர் கணபதி, பேச்சுவார்த்தைக்குத் தயார் என்று சமீபத்திய பேட்டியொன்றில் அறிவித்திருப்பதைச் சுட்டிக் காட்டிய தோழர்

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்



படிப்பகம்

www.padippakam.com

# முல்லைப் பெரியாறு: கருணாநிதி மறைக்கும் உண்மை

முல்லைப் பெரியாறு பிரச்சினையில் இதோ இறுதித் தீர்ப்பு வந்து விடும், அதுவும் தமிழகத்துக்குச் சாதகமாகவே இருக்கும் என்ற தோரணையில் விசாரணையை நடத்திக் கொண்டிருந்த உச்சநீதி மன்றத்தின் ஐந்து நீதிபதிகள் அடங்கிய அரசியல் சட்ட அமர்வுப் பிரிவு, கடந்த மாதம் திடீர்த் திருப்பமாக கேரள அரசுக்குச் சாதகமாக அடி எடுத்து வைத்து விட்டது.

முல்லைப் பெரியாறு சம்பந்தப்பட்ட எல்லாப் பிரச்சினைகளையும் ஆய்வு செய்து ஆறு மாதத்தில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஓய்வு பெற்ற உச்சநீதி மன்ற நீதிபதி ஏ.எஸ்.ஆனந்த் தலைமையிலான ஐவர் குழு என்ற அதிகார அமைப்பு ஒன்றை அறிவித்துள்ளது. இந்தக் குழுவிற்கு இரண்டு வாரத்துக்குள் தங்கள் பிரதிநிதிகளை நியமிக்கும்படி கேரளா மற்றும் தமிழ்நாடு அரசுகளை உச்சநீதி மன்றம் கேட்டுக் கொண்டுள்ளது. இந்த ஐவர் குழுவில் தமிழக அரசு பங்கேற்காது என்று தி.மு.க. பொதுக்குழு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. ஒரு அரசு உத்தரவு போட்டு அரசு வழக்கறிஞர் மூலமாக உச்சநீதி மன்றத்திடம் தெரிவிப்பதற்குப் பதிலாக கட்சிப் பொதுக்குழுத் தீர்மானம் போட்டிருப்பதே கருணாநிதியின் அரசியல் நரித்தனத்தைக் காட்டுகிறது.

உண்மையில் உச்சநீதி மன்றத்தின் ஏற்பாட்டை ஏற்று ஐவர் குழுவில் பங்கேற்பதே, அந்த ஏற்பாடு அறிவிக்கப்படுவதற்கு முன்பே கருணாநிதி எடுத்துவிட்ட முடிவாகும். ஐவர் குழுவில் பங்கேற்பது என்ற முடிவை முதலில் பகிரங்கமாக அறிவித்துவிட்டால், ''கருணாநிதி துரோகம் செய்துவிட்டார்'' என்று ஜெயலலிதா, வைகோ, விஜயகாந்த், போலி கம்யூனிஸ்ட் ஆகிய எதிர்த்தரப்பு அடையாளம் காட்டிவிடும்.

அதற்குப் பதிலாக ஐவர் குழுவில் பங்கேற்பதில்லை என்று முதலில் கட்சியில் மட்டும் தீர்மானம் போடுவது; 'செத்தகட்சி - சாவாத கட்சி' என்ற லாவணி அரசியல்படி எதிர்க்கட்சிகள் ''அந்த முடிவு தவறானது, தமிழக அரசு ஐவர் குழுவில் பங்கேற்க வேண்டும்'' என்று பேசுவார்கள்; இதையே சாக்காக வைத்து எதிர்த்தரப்பின் வற்புறுத்தல் காரணமாக ஐவர் குழுவில் பங்கேற்பதாக அரசுபூர்வ முடிவெடுப்பது என்பதுதான் கருணாநிதியின் அரசியல் திட்டம் (யுக்தி). இந்தத் திசையில்தான் கருணாநிதி தனது அரசியல் லாவணிக் கச்சேரியை வழிநடத்திச் செல்கிறார்.

இது, அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக கருணாநிதி மீது சுமத்தப்படும் அபாண்டமான பழியா? ''ஐவர் குழுவில் பங்கேற்பதில்லை'' என்று இப்போது கட்சித் தீர்மானம் போட்டிருக்கும் கருணாநிதியின் சம்மதத்தோடுதான் ஐவர் குழு அமைப்பது என்ற ஏற்பாடு செய்யப்பட்டது; கருணாநிதி மட்டுமல்ல; எதிர்க்கட்சிகளும் இந்த உண்மையை மூடி மறைக்கிறார்கள். இத்தனைக்கும் இந்த உண்மை செய்தி ஏடுகளில் பகிரங்கமாக வெளி வந்த பின்னும் ஓட்டுக்கட்சிகள் இந்தப் பித்தலாட்ட லாவணியைத் தொடர்ந்து நடத்துகின்றன.

''தமிழ்நாட்டோடு கலந்தாலோசனை செய்து கேரளா அரசு சமர்ப்பித்த நகல் ஆணையை உச்சநீதி மன்ற நீதிபதிகளின் அமர்வுப் பிரிவு பரிசீலித்த பிறகு இதை (ஐவர் குழு அமைப்பது என்ற ஏற்பாட்டை) நாளை முறைப்படியான ஆணையாக அறிவிக்கும்'' என்று (பார்க்க: ''இந்து'' நாளேடு, பக்.1, பிப். 18, 2010) உச்சநீதி மன்றம் தெரிவித்தது.

ஆக, கேரள அரசு தயாரித்த நகல் ஆணையைத்தான், தமிழக அரசின் ஆலோசனையோடும், ஒப்புதலோடும்தான் ஐவர் குழு அமைப்பது என்று உச்சநீதி மன்றத்தில் முடிவானது. அந்த ஆணையிலேயே, ''முல்லைப்

தொடர்ச்சி 11-ஆம் பக்கம்

புதிய ஜனநாயகம்
மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

தொகுதி: 25 இதழ்: 5
மார்ச் 2010

உள்நாடு
தனிஇதழ்: ரூ. 7.00
ஆண்டுசந்தா: ரூ. 90.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: ரூ.750.00

தொடர்பு முகவரி:
புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

தொலைபேசி: 94446 32561

படிப்பகம்

www.padippakam.com

# விலைவாசி உலகத்தரமானது பட்டினி நிரந்தரமானது

**விலைவாசி உயர்வு தவிர்க்க முடியாதது என்பதுதான் ஆட்சியாளர்களின் கருத்தோட்டம்.**

அன்றாட அத்தியாவசிய உணவுப் பொருட்களை வாங்குவதற்குச் சந்தைக்கு வரும் ஏழை-எளிய மக்கள் விலைவாசியைக் கேட்டு அதிர்ச்சி அடைந்தும் கொதித்துப் போயும் கிடக்கிறார்கள். அரிசி, கோதுமை, பருப்பு வகைகள், சமையல் எண்ணெய், சர்க்கரை, பால், காய்கறிகள் முதலிய இன்றியமையாப் பொருட்களின் விலைகள் செங்குத்தாக எகிறிக் கொண்டே போகிறது. சந்தையில் கிலோ 13 ரூபாயாக இருந்த அரிசி 28 ரூபாயாக, அதாவது இரண்டு மடங்குக்கு மேலாகி விட்டது. 8 ரூபாயாக இருந்த கோதுமை 15 ரூபாயாகி விட்டது. 17 ரூபாயாக இருந்த சர்க்கரை 47 ரூபாயாகிக் கசக்கிறது.

கடந்த 11 ஆண்டுகளிலேயே மிக அதிக அளவாக 2009 டிசம்பர் கணக்குப்படி உணவுப் பொருட்களின் பணவீக்கம் 19.75 சதவீதத்தை எட்டிய பிறகு, எதிர்க்கட்சிகளும் செய்தி ஊடகங்களும் புலம்பத் தொடங்கின. நாடாளுமன்றத்துக்குள்ளேயும் வெளியேயும் நடத்தும் வழக்கமான பம்மாத்துக்களால் மக்கள் ஆதரவைப் பெற்றுவிடலாம் என்று எதிர்க்கட்சிகள் நம்புகின்றன.

நாட்டின் பொருளாதாரத்தை நாலுகால் பாய்ச்சலில் முன்னேற்ற விரும்பி ஆட்சியாளர்கள் மேற்கொண்ட பொருளாதார நடவடிக்கைகள் ஏதோ எதிர்பாராத காரணங்களால் தற்செயலாகவோ, தானாகவோ பணவீக்கம், விலைவாசி உயர்வு என்ற நெருக்கடிக்குள் பொருளாதாரத்தைச் சிக்க வைத்து விட்டன என்பதாகச் செய்தி ஊடகங்கள் புலம்புகின்றன. அதேசமயம், மன்மோகன் சிங் - மாண்டேக் சிங் கும்பலின் தலைமையிலான பொருளாதாரப் புலிகள் தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு நிலைமையைச் சரி செய்து விடுவார்கள் என்று செயற்கையான நம்பிக்கையூட்டப்படுகின்றன.

தற்போது நிலவும் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் பணவீக்கம் - விலைவாசி உயர்வு என்ற நெருக்கடி எதிர்பாராத காரணங்களால் தானாகவோ, தற்செயலாகவோ ஏற்பட்டுவிட்ட பிரச்சினை அல்ல. பொருட்களின் விலையைக் கேட்டவுடன் தெருமுனையில் உள்ள சில்லரை விற்பனையாளர் வேண்டுமென்றே திடீரென்று அதிக விலை வைத்து விற்கிறார் என்று பாமர மக்கள் கருதுவதைப் போன்று இது நடக்கவில்லை. உண்மையில் விலைவாசி உயர்வு என்பது தமது ஆட்சியையோ, தாம் கட்டியமைக்கத் திட்டமிட்டுள்ள பொருளாதாரத்தையோ, தாம் அக்கறைப்படும் மக்கள் பிரிவினரின் நலத்தையோ பாதிக்கும் ஒரு பிரச்சினையாகக் கருதி ஆட்சியாளர்கள் அஞ்சிவிடவில்லை. குட்டையில் நீந்திக் களிக்கும் எருமை மாடுகளை, சாக்கடையில் படுத்துப் புரளும் பன்றிகளைப் போலத்தான் மன்மோகன் - மாண்டேக் சிங் கும்பலுக்கு விலைவாசி உயர்வு என்பது ஒரு பிரச்சினையே இல்லை. விலைவாசி உயர்வு என்பது தமது எஜமானர்களுக்கும் தமக்கும் ஆதாயம் தரத்தக்கதாகவே இவர்கள் கருதுகிறார்கள்.




விலைவாசி உயர்வைக் கண்டித்து நாடெங்கும் நடந்து வரும் உழைக்கும் மக்களின் போராட்டங்களை, ஆட்சியாளர்கள் எறும்புக் கடியைப் போல அலட்சியப்படுத்தியே வருகிறார்கள்.

எனவேதான், உணவுப் பொருட்களின் விலைவாசி உயர்வால் ஏழை, எளிய மக்கள் பரிதவிக்கையில் கூட 30 இலட்சம் டன் சர்க்கரையை ஏற்றுமதி செய்வதற்கு மன்மோகன் சிங் அரசு அனுமதித்திருக்கிறது. இந்த ஏற்றுமதிக்கான சலுகையாக பல கோடி ரூபாய்களை மத்திய அரசு பெருமுதலாளிகளுக்கு மானியமாக வழங்கியிருக்கிறது. அதேசமயம், விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்காக என்று சொல்லிக் கொண்டு, அதைவிடக் கூடுதலான விலையில் சர்க்கரை இறக்குமதிக்கும் ஏற்பாடு செய்துள்ளது. ஒவ்வொரு தனிநபரும் 50,000 டன் வரை உணவு தானியத்தை இருப்பு வைத்துக்



படிப்பகம்

www.padippakam.com




உணவுப் பாதுகாப்பு உரிமைச் சட்டத்தை உடனடியாக நிறைவேற்றக் கோரி, டெல்லியில் நடந்த பொதுக்கூட்டம்.

கொள்ள அனுமதி அளித்திருப்பதன் மூலம், உணவுப் பொருட்களைப் பதுக்கி வைப்பதற்கும், சந்தையில் விலையை ஏற்றுவதற்கும் சட்டப்படி அனுமதி அளித்துள்ளது. அம்பானி, பிர்லா போன்ற முதலாளிகள் சில்லரை விற்பனையில் நுழைந்த பிறகு இந்த சலுகையின் மூலம் கொள்ளை இலாபமடிப்பதற்குச் சட்டபூர்வ அனுமதி அளித்துள்ளது.

அம்பானி, பிர்லா போன்ற தரகு முதலாளிகள் பெருமளவு சில்லரை வணிகத்தில் நுழைந்து ஏகபோக ஆதிக்கத்தை நிறுவத் தொடங்கிய பிறகு, உணவு தானியங்கள், பருப்பு வகைகளில் மட்டுமல்லாது, சமையல் எண்ணெய், சர்க்கரை, காய்கறி-பழம் ஆகியவற்றிலும் உற்பத்தியாளர்களிடமிருந்து நேரடிக் கொள்முதல் செய்வது, புறநகர்ப் பகுதிகளில் குளிர்பதன வசதிகளுடன் பிரம்மாண்டக் கிடங்குகளில் சேமித்து வைத்து ஏகபோகமாக்கிக் கொள்ளையடிக்கின்றனர்.

இதைத் தடுக்காத அரசு, விவசாய உற்பத்தியாளர்கள் பல ஆண்டுகளாகக் கோரியும் உணவுப் பொருட்கள் சேமிப்புக் கிடங்குகளை அமைத்துக் கொடுக்க மறுத்தே வருகிறது. ஒவ்வொரு அறுவடைக்குப் பிறகும் 70,000 டன்கள் உணவு தானியங்கள் வீணாகிப் போகின்றன. சென்னை கோயம்பேடு மையக் காய்கறி-பழச்சந்தையில் மட்டும் நாள்தோறும் ஆயிரக்கணக்கான டன்கள் அழுகி நாறிக் குப்பையில் கொட்டப்படுகின்றன. சில்லரை வணிகத்தில் ஈடுபட்டுள்ள ஏகபோக தரகு முதலாளிகள் மட்டுமல்ல, விவசாய விளைபொருட்களை சந்தைக்குக் கொண்டு வந்து குவிக்கும் சரக்கு உந்து, (லாரி) ஏகபோக முதலாளிகள், தரகு பெரு வணிகர்கள் ஆகியோரின் பகற்கொள்ளைக்குப் பிறகு, எல்லாச் சுமையும் நுகர்வோர்களாகிய ஏழை-எளிய மக்கள் மீதுதான் சுமத்தப்படுகிறது.

''இனி அரசு ஆதரவுகள், மானியங்கள், நியாயவிலை விற்பனைகள் என்று எதுவும் இருக்கக் கூடாது; சந்தைகளே எல்லாவற்றையும் தீர்மானிக்க வேண்டும், சந்தைக்கான தொழில் போட்டி, உற்பத்தி, விநியோகம்தான் ஆட்சி நடத்தவேண்டும்; இதுதான் இந்த நாட்டின் தொழிலையும், உற்பத்தி-விற்பனையையும் உலகத் தரத்துக்கு உயர்த்துவதற்கான பாதை'' என்று மன்மோகன் - மாண்டேக் சிங் ஆகிய ஆளும் கும்பல் மட்டுமல்ல, எல்லா எதிர்க்கட்சிகளும் ஒருமனதாக நம்புகின்றன. மொத்தத்தில், அமெரிக்காவின் வால் மார்ட் போன்ற பன்னாட்டு நிறுவனங்கள் இந்தியச் சந்தையில் முழு மூச்சில் புகுந்துவிட்டால் போதும் எல்லாம் சரியாகிவிடும் என்பதுதான் இவர்களின் எண்ணம்!

மத்தியிலோ, மாநிலங்களிலோ எங்கு, எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் இந்தக் கொள்கையைத்தான் கடைப்பிடிக்கின்றன. குறிப்பாக, காங்கிரசு மற்றும் பா.ஜ.க. ஆகிய இரண்டு கட்சிகளும் இந்தக் கொள்கையை உறுதியுடன், இன்னும் சொல்வதானால் ''வெறி''யுடன் அமல்படுத்துகிறார்கள். இந்தப் பாதையிலிருந்து தாங்கள் விலகிப் போய்விடமாட்டோம் என்று இவர்கள் தங்கள் எஜமானர்களுக்கு மீண்டும் மீண்டும் உறுதியளிக்கிறார்கள். அவர்களது சிந்தனை, செயல், அறிவிப்பு எல்லாவற்றிலும் இதுதான் வெளிப்படுகிறது.

இப்படிச் செய்வதற்காக ஆட்சியாளர்கள் ஒரு போதும் கூச்சப்படுவதோ, தயங்குவதோ கிடையாது. தங்களுக்கு வாக்களித்து ஆட்சிக்குக் கொண்டு வருபவர்கள் என்ன எண்ணுவார்களோ என்று அஞ்சுவதும் கிடையாது. ஏனென்றால், ஆட்சியாளர்கள் எப்போதும் எண்ணுவதும் பேசுவதும் உலகச் சந்தையில் போட்டி, உலகத் தரத்துக்கு தொழில் - உற்பத்தி! உலகத்தரம், உலகச் சந்தையில் போட்டி எனும்போது, உலகிலுள்ள பெரும்பாலான ஆசிய, ஆப்பிரிக்க, தென்அமெரிக்க ஏழை நாடுகளை மனதில் கொள்வதில்லை.

மிகமிக முன்னேறிய, பணக்கார நாடுகளாகச் சொல்லப்படும் அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளைத்தான்! இதன் பொருள் என்ன? தொழிலும் உற்பத்தியிலும் மட்டுமல்ல, சந்தையிலும் நுகர்விலும் கூட உலகத் தரத்தை எட்டவேண்டும் என்பதுதான்! இதெல்லாம் உலகத் தரம் என்கிறபோது, சந்தையிலும் நுகர்விலும் மட்டும் இந்தியத் தரம் என்பதை ஆட்சியாளர்கள் எப்படி ஏற்றுக் கொள்வார்கள்? இந்த நாட்டின் மக்கள் தொகை 100 கோடி என்றால், அவர்களில் 10 கோடிப் பேரையாவது உலகத் தரம், உலகச் சந்தை பொருட்களைப் பாவிப்பதற்கான நுகர்வாளர்களாக்கு என்பது மட்டும்தான் ஆட்சியாளர்களின் குறிக்கோளாக உள்ளது.

எனவேதான், கடந்த சில ஆண்டுகளில் மட்டும், 10 கோடி ''இந்திய மக்களின்'' வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு, அவர்களின் வாங்கும் சக்தியைப் பன்மடங்கு



படிப்பகம்

அதிகரிக்கும் நடவடிக்கையில் இந்திய ஆட்சியாளர்கள் முக்கியக் கவனம் செலுத்தினர். ஏற்கெனவே கூட்டுப் பங்கு நிறுவனங்களின் பணியாளர்களின் ஊதியம் சராசரி இந்தியரின் வருமானத்தைவிட ஆயிரம் மடங்கு அதிகம். அரசு மற்றும் அரசுத் துறை நிறுவனங்களின் ஊழியர்களுக்கு விலைவாசி-வீட்டு வாடகை போன்ற சந்தை விலையேற்றத்துக்கு ஈடாக அவ்வப்போது கிரமமாக ஊதியம் உயர்த்தப்பட்டு வந்தது. இது போதாதென்று, இப்போது அரசு மற்றும் அரசுத் துறை தொழில்-வர்த்தக நிறுவனங்களின் ஊழியர்களது ஊதியம் பன்மடங்கு உயர்த்தப்பட்டு விட்டது.

ஆகக் கூட்டிப்பாருங்கள். கூட்டுப்பங்கு நிறுவன அதிகாரிகள், பணியாளர்கள்; அரசு மற்றும் அரசுத்துறை தொழில்-வர்த்தக நிறுவன அதிகாரிகள், ''ஊழியர்கள்''; ஏற்கெனவே கொழுத்துப் போயுள்ள தரகு முதலாளிகள் - தரகு வர்த்தகர்கள், கிராமப்புற முதலாளிய விவசாய உற்பத்தியாளர்கள், மற்றும் ஏற்றுமதி-இறக்குமதிக்கான உற்பத்தி வர்த்தகங்களில் ஈடுபட்டுள்ள முதலாளிகள், அவர்களின் பணியாளர்கள்; பல்வேறு சேவைத்துறை முதலாளிகள், பணியாளர்கள்; தொழில்முறை அரசியல் தலைவர்கள், பிரமுகர்கள், கிரிமினல் குற்றக் கும்பல்கள் இவர்கள் அனைவருமாக, இவர்களின் குடும்பத்தோடு ஒரு 10 கோடிப் பேராவது உலகத்தர வாழ்க்கையும், வாங்கும் வசதியும் படைத்தவர்களாக இந்த நாட்டில் இருக்கிறார்கள். அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைவாசி உயர்வு இந்தப் பிரிவினரைப் பாதிப்பதே இல்லை. அம்பானி, பிர்லாக்களின் ''சூப்பர் மார்க்கெட்''களில் என்ன விலை வைத்தாலும், உலகத் தரத்திற்கு டப்பாக்களில், பெட்டிகளில் அடைக்கப்பட்ட பன்னாட்டு நிறுவனப் பொருட்களையே பாவிக்கிறார்கள்.

இந்த 10 கோடி இந்திய மேட்டுக்குடியினருக்கான சந்தையைப் பற்றி மட்டுமே மன்மோகன் சிங் - மாண்டேக் சிங் கும்பல் அக்கறைப்படுகிறது. எனவேதான், அது மிகவும் திமிரோடு பேசுகிறது. விலைவாசி உயர்வு என்பது ''தவிர்க்கமுடியாதது''; ''நிச்சயமான ஒன்று'' என்று நாடாளுமன்றக் கூட்டத்தில் அரசுத் தலைவர் ஆற்றிய உரையில் பகிரங்கமாகவே பிரகடனப்படுத்தியிருக்கிறது. இந்தியச் சந்தையை உலகச் சந்தையுடன் இணைப்பது, சந்தையே அத்தியாவசிய உணவுப் பொருட்கள் உட்பட அனைத்து நுகர்பொருட்களின் விலையைத் தீர்மானிப்பது என்றான பிறகு, விலைவாசி உயர்வு என்பது தவிர்க்க முடியாதது, எதிர்பார்க்க வேண்டியதுதான்.

10 கோடி இந்திய மேட்டுக் குடியினரின் வருவாயைப் பெருக்கி, வாங்கும் சக்தியை உயர்த்திய மன்மோகன் சிங் - மாண்டேக் சிங் கும்பல் மீதி விவசாயிகள், தனியார்துறைத் தொழிலாளர்கள், அமைப்புசாரா உழைப்பாளர்கள் மற்றும் நடுத்தர வகுப்பினரை உள்ளடக்கிய 90 கோடி இந்திய மக்களுக்கு என்ன செய்தது? இவர்களின் மலிவான உழைப்புச் சக்தியை மட்டுமல்ல, இம்மக்களடங்கிய பரந்து விரிந்த சந்தையிலும் கொள்ளையிடுவதற்கான சகல வசதிகளையும் ஏகாதிபத்திய ஏகபோக பன்னாட்டு நிறுவனங்களுக்கும் இந்திய ஏகபோகத் தரகு முதலாளிகளுக்கும் செய்து கொடுத்துள்ளது.



**10 கோடி இந்திய மேட்டுக் குடியினரின் வருவாயைப் பெருக்கி, வாங்கும் சக்தியை உயர்த்திய மன்மோகன் சிங்–மாண்டேக் சிங் கும்பல் மீதமுள்ள 90 கோடி இந்திய உழைக்கும் மக்களுக்கு என்ன செய்தது?**

2008 ஆம் ஆண்டு 30 கோடி ரூபாய் இலாபம் ஈட்டிய 33 சர்க்கரை உற்பத்தி முதலாளிகள் 2009-ஆம் ஆண்டு மட்டும் 900 கோடி ரூபாய் இலாபம் ஈட்டியிருக்கின்றனர்; அவர்களின் இலாபம் 2,900 சதவீதம்அதிகரித்திருக்கிறது. 2007 மற்றும் 2008 ஆகிய இரண்டு ஆண்டுகளில் நமது நாட்டிலிருந்து சர்க்கரையை ஏற்றுமதி செய்யச் சொல்லி டன்னுக்கு 2350 ரூபாய் மத்திய மற்றும் மராட்டிய அரசுகள் மானியமாக வழங்கின. 2008 டிசம்பரில் ஏற்றுமதிக்குத் தடைவிதித்த மத்திய அரசு, அதன்பிறகு சர்க்கரை பற்றாக்குறை ஏற்பட்டபோது சர்க்கரை இறக்குமதி செய்யச் சொல்லி பல ஆயிரம் கோடி ரூபாய் இறக்குமதி செய்வதற்கு சுங்க வரி தள்ளுபடி செய்தது. ஆக, இரண்டு வகையிலும் மத்திய வேளாண் மற்றும் உணவு அமைச்சர் சரத்பவார் பிரதிநிதித்துவப்படுத்தும் சர்க்கரை ஆலை கும்பல் ஆதாயம் அடைந்து கொள்ளையடித்தது.

மிகை உற்பத்தியின் போது அரசே கிடங்குகளில் சேமித்து வைப்பது, பற்றாக்குறையின் போது சேமிப்பை விடுவித்து விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துவது என்ற ''பொது நலப் பொறுப்பு'' எதையும் அரசு மேற்கொள்ள வேண்டியதில்லை; எல்லாம் தனியார் கவனித்துக் கொள்வார்கள் என்பதுதான் அரசின் புதிய பொருளாதாரக் கொள்கை. இந்தக் கொள்கை வருவதற்கு முன்



படிப்பகம்

www.padippakam.com

பிருந்தே தனியார்-பெரு வர்த்தக முதலாளிகள் மிகை உற்பத்தியின்போது பதுக்கி வைப்பதையும், பற்றாக் குறையின் போது பன்மடங்கு விலைவைத்து விற்பதை யும் செய்து வந்தார்கள். முன்பு சட்டவிரோதமாகக் கருதப்பட்ட இந்த நடவடிக்கைகளை இப்பொழுது அரசே துணை செய்து ஊக்குவிக்கிறது.

சந்தையில் 'நிலவும்'' போட்டியே விலைவாசியைக் கட்டுப்படுத்திவிடும் என்ற முதலாளிய பொருளாதார வாதிகளின் வாதத்தை இத்தகைய நடவடிக்கைகளும் ஏக போக நிலையும் பொய்ப்பித்து விடுகின்றன. இவ்வளவு விலைவாசி உயர்வுக்கு மத்தியில் கூட பெட்ரோலிய பொருட்களின் விலையை அரசு அவ்வப்போது உயர்த் தியதோடு, இனி சந்தைப் பெருமுதலாளிகளே தீர்மா னித்துக் கொள்வதற்கு விட்டு விடுவது; அரசு கட்டுப் பாட்டில் இருந்து உரவிலையையும் விற்பனையாளர் களே தீர்மானிப்பது என்றும் முடிவு செய்து விட்டது. அதற்கு முன்பாக அரசே விலையையும் உயர்த்திவிட் டது. அரசு நிறுவனங்கள் உட்பட ஒருசில நிறுவனங்கள் ஏகபோக நிலையில் உள்ள இந்தத் தொழில்களில் வரை முறையற்ற கொள்ளைக்குத்தான் இது வழிவகுக்கும்.

உலக சராசரிக்கும் குறைவாக இந்தியாவில் விளை பொருட்கள் கிடைக்கும் நிலையை மாற்றி, உலகச் சந்தையின் நிலைக்கு விலைவாசியை ஏற்றி விடுவது என்பது தான் ஆட்சியாளர்களின் நோக்கமாக உள்ளது. கடும் எதிர்ப்பின்றி அதை எப்படிச் சாதிப்பது என்பதற் குத்தான் பல்வேறு நாடகமாடுகிறார்கள். இதுதவிர, தொழில் துறையும், சேவைத்துறையும் மட்டுமல்ல, பங் குச் சந்தையிலும் நிதி ஆதிக்கத்துக்கு வசதி செய்து கொடுத்துள்ள இந்திய அர, சமீப ஆண்டுகளில் விவ சாய விளைபொருட்கள், அத்தியாவசிய உணவுப் பொருட்களிலும் ஊகவணிகம், முன்பேர வணிகம், ஆன்-லைன் வணிகம் ஆகியவற்றிலும் சூதாட்டம் மற்றும் நிதி ஆதிக்கம் செலுத்துவதற்கும் எல்லாவசதி களையும் செய்து கொடுத்துள்ளது.

ஆகவே, விலைவாசி உயர்வு என்பது பல்வேறு வகை யிலும் அரசே ஊக்குவித்து வரும் திட்டமிட்ட சமூக விரோதச் செயலாகும். ஆனால், அதுபற்றித் தாமும் கவ லைப்படுவதாக அனைத்துக் கட்சி ஆட்சியாளர்களும் பித்தலாட்டம் செய்கிறார்கள் என்பதுதான் உண்மை!

● ஆர்.கே.

# நெருப்பைப் பஞ்சால் அணைக்க முடியுமா?

திருப்பூர் மாவட்டம் உடுமலையில் குணா பவுல்ட்ரி ஃபார்ம் என்ற நிறுவனம் கால்நடைத் தீவனம் மற்றும் கறிக் கோழிகளை உற்பத்தி செய்து வருகிறது. இந்நிறுவனத்தில் பணிபுரியும் ஓட்டுநர்கள், தமிழகமெங்கும் கறிக்கோழிகளை யும் தீவனங்களையும் உரிய காலத்திற்குள் கொண்டுசென்று இரவு பகலாகப் பாடுபட்டு வந்தபோதிலும், எவ்விதச் சட்ட பூர்வ உரிமைகளுமின்றிக் கொத்தடிமைகளாக நடத்தப்பட்டு வந்தனர்.

குமுறிக் கொண்டிருந்த தொழிலாளர்கள், கடந்த 2007-ஆம் ஆண்டின் இறுதியில் சி.ஐ.டி.யு. சங்கத்தில் திரண்டனர். சந்தா, வெண்மணி நினைவுநாள் விழா நிதி, அகில இந்திய மாநாட்டுக்கான நிதி என்றெல்லாம் பல்லாயிரக்கணக்கில் தொழிலாளர்களிடமிருந்து வசூலித்த சி.ஐ.டி.யு. சங்கம், சேம நல நிதி முதலானவை உரிய முறையில் தொழிலாளர் கணக் கில் சேமிக்கப்படுகிறதா என்று தொழிலாளர்கள் கோரியபோதெல்லாம் இழுத்தடித்து வந்தது. நிர்வாகத்துடன் பேச் வார்த்தைக்குத் தொழிலாளர் பிரதிநிதிகளை அழைத்துச் செல்லவும் மறுத்தது. இச்சங்கத் தலைமையின் அலட்சியப் போக்கைக் கண்டு வெறுப் புற்ற தொழிலாளர்கள் பு.ஜ.தொ.மு.வுடன் தொடர்பு கொண்டு, கடந்த 7 மாதங் களாகத் தொழிலாளர்களை அமைப்பு ரீதியாகத் திரட்டிப் புதிய சங்கக் கிளையைத் தொடங்கும் பணிகளில் ஈடு பட்டனர்.




அதன் தொடர்ச்சியாக 20.12.09 அன்று உடுமலை யில் வரதராசபுரம் மற்றும் சடையகவுண்டன் புதூர் ஆகிய இடங்களில் பு.ஜ.தொ.மு. சங்கத்தின் பெயர்ப் பலகைகளைத் திறந்து சங்கக் கொடியேற்ற முடிவு செய்யப்பட்டது. இதைக் கண்டு ஆத்திரமடைந்த நிர்வாகம், 30.12.09 அன்று சங்க முன்னணியாளர்களான 4 தொழிலாளர் களை இடமாற்றம் செய்து பழிவாங்கியது. நிர்வாகத்தின் பழி வாங்கலை முறியடிக்க வேண்டுமானால், புதிய போர்க்குண மிக்க சங்கத்தில் இணைந்து போராடுவதைத் தவிர வேறு வழி யில்லை என்பதை உணர்ந்த தொழிலாளர்கள், கடந்த 31.1.10 அன்று வரதராசபுரம் மற்றும் சடையகவுண்டன் புதூரில் சங் கப் பலகைகளைத் திறந்து கொடியேற்றி, பு.ஜ.தொ.மு. சங் கக் கிளை தொடக்க விழாவை எழுச்சியோடு நடத்தினர். அதை தொடர்ந்து, அன்று மாலை உடுமலை காந்தி சதுக்கத் தில் நடந்த பொதுக்கூட்டத்தில் சங்கத்தின் முன்னணியாளர் களும் பு.ஜ.தொ.மு. மாநிலச் செயலர் தோழர் ப.தங்கரா வும் உரையாற்றினர்.

கொடியேற்றல் மற்றும் பொதுக்கூட்டத்தில் தொழிலாளர் கள் கலந்து கொள்ளக்கூடாது என்று அச் றுத்திய நிர்வாகம், போலீசை வைத்தும் மிரட்டிப் பார்த்தது. முன்னணியாளர்களை இடமாற்றம் செய்து பழிவாங்கியது. ''சி.ஐ.டி.யு. சங்கத்தில் இருந்தால் உங்களுக்கு எந்தப் பாதிப்பும் வராது. பு.ஜ.தொ.மு.வில் சேராதீர் கள்!'' என்று நைச்சியமாகப் பேசி மிரட்டிப் பார்த்தது. இத் துணை மிரட்டல்களையும் துச்சமாக மதித்துத் தொழி லாளர்கள் வர்க்க உணர்வு டன், போர்க்குணமிக்க சங் கத்தில் ஓரணியாகத் திரண்டு அடக்குமுறை-பழிவாங்கல் களுக்கு எதிராகப் போராடி வருகின்றனர்.

— பு.ஜ.செய்தியாளர், உடுமலை.



படிப்பகம்

www.padippakam.com

# கிராமப்புற மருத்துவர்கள்:
# பஞ்சு மிட்டாய்த் திட்டம்!

**தனியார்மயத்தைத் திரும்பப் பெறாமல், மருத்துவர்களின் எண்ணிக்கையை மட்டும் அதிகரிப்பதால் முழுப்பலன் கிட்டாது.**

விவசாயம் போண்டியாகி, பெரும்பாலான கிராமங்கள் காலியாகிக் கொண்டிருக்கும் வேளையில், கிராமப்புற மக்களுக்கு மருத்துவ வசதி அளிப்பதற்காகப் புதிய திட்டமொன்றை அறிவித்திருக்கிறது, மைய அரசு. இதன்படி, கிராமப்புறங்களில் நிலவும் மருத்துவர்களின் பற்றாக்குறையை ஈடுகட்டுவதற்காகவே ''கிராமப்புற நலவாழ்வு பட்டப் படிப்பு'' (Bachelor of Rural Health Course) என்ற பெயரில் புதிய அலோபதி (ஆங்கில) மருத்துவக் கல்வித் திட்டத்தை நாடெங்கும் தொடங்கத் திட்டம் தீட்டப்பட்டு வருகிறது.

''சில குறிப்பிட்ட வகை நோய்களுக்கு மட்டும் சிகிச்சை அளிக்கும் வண்ணம் உருவாக்கப்பட்டுள்ள இந்த மூன்றரை ஆண்டு கால அலோபதி மருத்துவப் பட்டப் படிப்பைப் புதிதாகத் தொடங்கப்படும் மருத்துவப் பள்ளிகள் (மருத்துவக் கல்லூரிகள் அல்ல) வழங்கும்; கிராமப்புறங்களில் பிறந்த, +2 அறிவியல் பாடப் பிரிவில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் மட்டும் இப்பட்டப்படிப்பில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்; இந்தக் கிராமப்புற நலவாழ்வு பட்டப்படிப்பு (BRHC) அரசு மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரிகளில் வழங்கப்பட்டு வரும் எம்.பி.பி.எஸ்., பட்டப் படிப்புக்கு ஈடாகாது; இப்பட்டப் படிப்பை முடிக்கும் மருத்துவர்கள் அரசால் அறிவிக்கப்படும் கிராமப்புறங்களில் மட்டுமே மருத்துவ சேவை வழங்க அனுமதிக்கப்படுவார்கள்; இந்தக் கிராமப்புற நலவாழ்வு மருத்துவர்கள் உடனடியாக மேல்படிப்பு படிப்பதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது'' என இந்தப் புதிய பட்டப்படிப்பு பற்றி பல விதிகள் மைய அரசால் உருவாக்கப்பட்டுள்ளன.

இந்திய மருத்துவக் கழகம் (Indian Medical Association) உள்ளிட்டப் பல்வேறு மருத்துவர் சங்கங்களும், பயிற்சி மருத்துவர்களும், மருத்துவக் கல்லூரி மாணவர்களும் இந்தக் கிராமப்புற மருத்துவக் கல்வியை எதிர்க்கின்றனர். ''நகர்ப்புற மக்களுக்கு எம்.பி.பி.எஸ்., எம்.டி., போன்ற உயர்கல்வி படித்த மருத்துவர்கள்; கிராமப்புற மக்களுக்கு மருத்துவ சேவை வழங்க இந்த அரைகுறை மருத்துவர்கள் என்ற பாகுபாடு திணிக்கப்படுகிறது; எம்.பி.பி.எஸ்., படித்துவரும் மாணவர்கள் மற்றும் அப்படிப்பைப் படித்து முடித்துவிட்டு அரசு வேலைக்காகக் காத்திருப்போரின் வாய்ப்புகளை இப்புதிய திட்டம் பறித்துவிடுகிறது'' என்பன உள்ளிட்டப் பல்வேறு காரணங்களை முன்வைத்து இத்திட்டத்தை இவர்கள் எதிர்த்து வருகின்றனர்.

ஆந்திர மாநிலம் - கோதி என்ற ஊரில், போதிய படுக்கை வசதிகள் அற்று இயங்கி வரும் தாய்-சேய் நல மருத்துவமனை: அரசின் அலட்சியம்.
(கோப்புப்படம்)



கிராமப்புற மக்களுக்கு ஓரளவுக்காவது தரமான மருத்துவ சேவை கிடைக்க வேண்டும் என்றால், துணை, ஆரம்ப, சமூக சுகாதார மையங்களின் கட்டமைப்பு பலமாக இருக்க வேண்டும். ஆனால், மைய அரசு தேசிய ஊரக மருத்துவ சேவைத் திட்டத்தின் மூலம் (National Rural Health Mission) கிராமப்புற மக்களுக்கு மருத்துவ சேவை வழங்குவதில் தனியாரைப் பங்கேற்க அனுமதிப்பது; அரசு ஆரம்ப நலவாழ்வு நிலையங்களில் பயனாளிகள் கட்டணம் வசூலிப்பது (தமிழகத்தில் எழுந்த எதிர்ப்பின் காரணமாக இக்கொள்ளை நடைமுறைக்கு வரவில்லை) போன்ற நடவடிக்கைகளின் மூலம் கிராமப்புற மருத்துவ சேவையைத் தனியார்மயமாக்கும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இப்படிப்பட்ட நிலையில் அரசு கிராமப்புற மக்களின் மீது காட்டும் இந்தத் திடீர் கரிசனம் நம்மைத் திடுக்கிடத்தான் செய்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

மைய அர 2008-ஆம் ஆண்டு வெளியிட்ட ஒரு புள்ளிவிவரத்தின்படி, இந்தியாவெங்கும் 1,46,036 துணை நலவாழ்வு மையங்களும், 23,458 ஆரம்ப நலவாழ்வு மையங்களும், 4,276 சமூக நலவாழ்வு மையங்களும் இயங்கி வருகின்றன. எனினும், இது போதுமானதல்ல. 2001-ஆம் ஆண்டு வெளியான ஒரு கணக்கெடுப்போடு இந்த எண்ணிக்கையை ஒப்பிட்டால்கூட, இன்னும் 20,486 துணை நலவாழ்வு மையங்களையும், 4,477 ஆரம்ப நலவாழ்வு மையங்களையும், 2,337 சமூக நலவாழ்வு மையங்களையும் புதிதாக உருவாக்க வேண்டும்.

புதிய நலவாழ்வு மையங்களைக் கட்டுவது பற்றி மூச் விட மறுக்கும் மைய அர , உடனடியாகக் கிராமப்புற மருத்துவர்களை உருவாக்க வேண்டும் என வரிந்து கட்டிக் கொண்டு நிற்கிறது. இதற்கு, நலவாழ்வு மையங்களில் மருத்துவர்கள் மற்றும் துணை நிலை மருத்துவ ஊழியர்கள் பற்றாக்குறையாக இருப்பதைக் காரணமாகக் காட்டுகிறது. நலவாழ்வு மையங்களில் காலியிடங்களை நிரப்பப் புதிதாக ஒரு படிப்புத் திட்டத்தையே ஆரம்பிப்பது விநோதமாக இருக்கிறது. ஏனென்றால், இது வெண்ணெயைக் கையில் வைத்துக் கொண்டு நெய்க்கு அலைவது போன்றதாகும்.

புதிதாகப் படித்துவரும் கிராமப்புற மருத்துவர்களை நலவாழ்வு மையங்களில் நியமிக்க வேண்டும் என்றால், அதற்கு இன்னும் மூன்றரை ஆண்டுகள் காத்திருக்க வேண்டும். இந்த மூன்றரை ஆண்டுகளுக்குள் இந்தியாவெங்கும் ஏறத்தாழ 40,000-க்கும் மேற்பட்ட மாணவர்கள் எம்.பி.பி.எஸ்., பட்டப்படிப்பை அர மருத்துவக் கல்லூரிகளில் படித்து முடித்துவிட்டு வெளியே வந்து விடுவார்கள். தனியார் மருத்துவக் கல்லூரிகளில் படித்து முடிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையையும் சேர்த்தால் இந்த எண்ணிக்கை ஏறத்தாழ 90,000-ஐத் தொட்டு விடும். இதுவொருபுறமிருக்க, வேலைவாய்ப்பகங்களில் பதிவு செய்துவிட்டு அர வேலைக்காகக் காத்திருக்கும் மருத்துவர்களும் கணிசமான எண்ணிக்கையில் உள்ளனர். இவர்களுள் ஒரு நாலாயிரம் மருத்துவர்களை நிரந்தர ஊழியர்களாக ஆரம்ப நலவாழ்வு மையங்களில் நியமித்தாலே, மருத்துவர்கள் பற்றாக்குறையைச் சமாளித்து ஓரளவுக்காவது உருப்படியான மருத்துவ சேவையைக் கிராம மக்களுக்குக் கொடுத்துவிட முடியும். ஆனால், அரசோ எம்.பி.பி.எஸ்., படிப்புக்கு ஈடாகாத இரண்டாம் தர மருத்துவர்களை உருவாக்கி, அவர்களைப் பதவியில் அமர்த்தத் திட்டம் போடுகிறது.

''எம்.பி.பி.எஸ். படித்த மருத்துவர்கள் கிராமப்புறங்களில் சேவை செய்ய மனதார விரும்புவதில்லை; ஆரம்ப நலவாழ்வு நிலையங்களில் நியமிக்கப்படும் மருத்துவர்கள் பணிக்கு ஒழுங்காக வராமல் டிமிக்கி கொடுப்பதும் அதிகமாக இருக்கிறது'' எனக் காரணங்களை அடுக்கி வருகிறது, அர . இப்படிப் புலம்பும் அர , தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி ''டிமிக்கி''க் கொடுக்கும் மருத்துவர்கள் மீது பாரதூரமான நடவடிக்கை எடுப்பதில்லை. மாறாக, இதனைத் தனது பொறுப்பைத் தட்டிக் கழிப்பதற்கே பயன்படுத்தி வருகிறது.

அதேசமயம், தமது ஊதிய உயர்வு, பணி பாதுகாப்புக்குப் போராடும் மருத்துவர்களோ, கிராமப்புற-நகர்ப்புற மக்களின் மருத்துவத் தேவைகளை அர திட்டமிட்டு புறக்கணிப்பதையும், தனியார்மயமாக்குவதையும் எதிர்த்துப் போராடுவதில்லை. மேலும் பணிக்கு வராமல் ''டிமிக்கி'' கொடுப்பதை நலவாழ்வு மையங்களில் / அர மருத்துவமனைகளில் வசதிகள் போதாமல் இருப்பதைக் காட்டி நியாயப்படுத்துகின்றனர். இதனால் அர மருத்துவர்கள் மீது மக்கள் அதிருப்தியடைந்திருப்பதைப் பயன்படுத்திக் கொண்டு, கிராமப்புற மருத்துவர்கள் என்ற புதிய படிப்பை நியாயப்படுத்த முயலுகிறது, அர . பல்வேறு சமயங்களில் கம்பவுண்

## வலது-இடது போலிகளின் இரட்டை நாக்கு!

**ச**மூக சமத்துவத்திற்கான மருத்துவர்கள் சங்கம், அர அனைத்து மருத்துவர்கள் சங்கம், சமாதானம் மற்றும் முன்னேற்றத்திற்கான மருத்துவர்கள் சங்கம் ஆகிய மூன்று அமைப்புகளும் இணைந்து இக்கிராமப்புற மருத்துவக் கல்வித் திட்டத்தை எதிர்த்து சென்னை நகரில் 21.02.2010 அன்று கருத்தரங்கமொன்றை நடத்தின. இக்கருத்தரங்கிற்கு வலது கம்யூனிஸ்டு கட்சியின் தேசியச் செயலர் ராஜாவும், இடது கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த டி.கே ரங்கராஜனும் அழைக்கப்பட்டிருந்தனர். டி.கே.ரங்கராஜன் அவசரமாக பெங்களூரு சென்றுவிட்டதால், கருத்தரங்கை வாழ்த்தி செய்தி அனுப்பியிருப்பதாகக் கூறப்பட்டது. கருத்தரங்கில் சிறப்புரையாற்றிய சி.பி.ஐ.-இன் தேசியச் செயலர் ராஜா, பார்வையாளர்கள் இத்திட்டத்தை ஆழமாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக, தனியார்மயம் இந்தியாவில் புகுத்தப்பட்டது குறித்து ஆங்கிலத்தையும் தமிழையும் கலந்துகட்டி நீண்ட உரையாற்றினார். மேலும், தி.மு.க. அர இத்திட்டத்தைத் தமிழகத்தில் அனுமதிக்க மாட்டோம் எனக் கூறியதைப் பாராட்டிவிட்டு, இதே கருத்தை டெல்லியிலும் சொல்ல முடியுமா? எனச் சவால் விட்டார். இப்படிச் ''சவடால்'' அடித்துப் பேசிய அவர் ஒன்றைச் சொல்லாமல் விட்டுவிட்டார்.

அவர் மறந்து போனதை, அவருக்குப் பின் பேசிய ஏ.ஐ.டி.யு.சி.-யைச் சேர்ந்த ஏ.எம். கோபு போன்ற ''பெரியவர்களும்'', கருத்தரங்க அமைப்பாளர்களும் கூட ட்டிக் காட்டவில்லை. அதனால் நினைவுபடுத்த வேண்டிய பொறுப்பு நம்மீது விழுந்து விட்டது.

சி.பி.ஐ.-யும், சி.பி.எம்.-மும் அண்ணன் தம்பிகளாக இணைந்து கொண்டு ஆளும் மேற்கு வங்க மாநிலத்தில் அலோபதி மருத்துவத்தில் மூன்றாண்டு பட்டயப் படிப்பைத் தொடங்குவதற்கான சட்டம் டிசம்பர் 16, 2009 அன்று 'இடதுசாரி' கூட்டணி அரசால் நிறைவேற்றப்பட்டுள்ளது (ஃபிரெண்ட் லைன், பிப்.26. 2010, பக்.117). தனியார்மயத்தை விளக்குவதற்கு அமெரிக்கத் தலைநகர் வாஷிங்டனில் நடந்த விஷயங்களைக்கூட மறக்காமல் புட்டு வைத்தவருக்கு, கொல்கத்தாவில் நடந்த விஷயம் தெரியவில்லை என்றால், நம்பும்படியாகவா இருக்கும்? அவரது இந்த நினைவு மறதியை மருத்துவ மொழியில் ''செலக்டிவ் அம்னீசியா'' என்று அழைக்கலாம். அரசியல் மொழியில், நாகரிகமாகச் சொல்வதென்றால், இரட்டை வேடம் எனக் கூறலாம்.

•



படிப்பகம்

டர் கூட இல்லாமல் கிடக்கும் நலவாழ்வு மையங்களில் ஒரு ''மருத்துவர்'' இருந்தால், அது கிராம மக்களுக்குப் பெரிய விஷயம்தானே!


அர , எம்.பி.பி.எஸ். படித்த மருத்துவர்கள் மீது வைக்கும் குற்றச்சாட்டுகளை ஒதுக்கித் தள்ளிவிட முடியாதென்றாலும், இவையெல்லாம் இரண்டாம்பட்சமானவைதான். எம்.பி.பி.எஸ்., படித்த மருத்துவர்களை பணியில் அமர்த்தினால் அவர்களுக்கு அதிகச் சம்பளம் கொடுக்க வேண்டும்; அதற்குப் பதிலாக கிராமப்புற மருத்துவர்களை உருவாக்கிவிட்டால், அவர்களைக் குறைவான சம்பளத்திற்குப் பணியில் அமர்த்த முடியும். இதன்மூலம், மருத்துவ சேவைக்கு ஒதுக்கப்படும் அர சின் நிதியைக் கணிசமாகக் குறைக்க முடியும் என்ற இலாப-நட்டக் கணக்குதான் உண்மையான காரணம்.

அர மருத்துவமனைகளிலும் கிராமப்புற நலவாழ்வு மையங்களிலும் ஒப்பந்தக் கூலிகளாகவும், மாதச் சம்பளம் ரூ. 8,000/- என்ற தொகுப்பூதியம் அடிப்படையிலும் எம்.பி.பி.எஸ்., படித்த மருத்துவர்களை நியமிக்க வேண்டும் என்பதுதான் தற்பொழுது அரசின் கொள்கை. பா.ம.க. அன்புமணி மைய அரசில் நலவாழ்வுத் துறை அமைச்சராக இருந்தபொழுது, கிராமப்புற நலவாழ்வு மையங்களில் மருத்துவர்களை நிரந்தரமாக நியமிப்பதற்குப் பதிலாக, கட்டாய கிராமப்புற சேவை என்ற திட்டத்தின் மூலம் எம்.பி.பி.எஸ்., மாணவர்களின் பயிற்சிக் காலத்தை மேலும் ஓராண்டுக்கு நீடித்து, அவர்களைக் கிராமப்புற அர மருத்துவமனைகளுக்கு அனுப்பி பற்றாக்குறை பிரச்சினையைத் தீர்க்கும் வெகு புத்திசாலித்தனமான நடவடிக்கையை எடுக்க முயன்றார். பயிற்சி மருத்துவ மாணவர்களும், மருத்துவர்களும் இந்த இரண்டு திட்டங்களையும் எதிர்த்து வருகின்றனர். இந்த எதிர்ப்பை ஒரேயடியாக முறியடித்துவிடும் நோக்கமும் இந்த இரண்டாம்பட்ச மருத்துவர்களை உருவாக்கும் திட்டத்தில் உண்டு.

அர மட்டுமின்றி, தனியாரும் இந்தப் புதிய மருத்துவப் படிப்பை வழங்கும் பள்ளிகளைத் திறந்து கொள்ளலாம்; இப்படிப்பிற்கு மாநில மருத்துவக் கவுன்சிலின் அனுமதியைப் பெற்றாலே போதும் எனச் சலுகைகள் காட்டப்பட்டுள்ளன. பிஸியோதெரபி, பார்மஸி போன்ற துணை மருத்துவப் படிப்புகளுக்கு மாணவர்கள் மத்தியில் மவு குறைந்துபோய், பல தனியார் கல்லூரிகள் இப்படிப்புகளை மூடிவருகின்றன. அவர்களுக்கெல்லாம் பம்பர் குலுக்கலில் பரி கிடைத்தது போல இப்படிப்பு அமையும்.

சோசலிச சீனாவில் 1960-களில் கிராமப்புற மக்களுக்கு மருத்துவ சேவை வழங்க வெறுங்கால் மருத்துவர்கள் (Barefoot Doctors) என்ற திட்டம் செயல்படுத்தப்பட்டதை 2010-இல் எடுத்துக்காட்டி, ஆதரவு தேட முயலுகிறது, மைய அர . சீனாவில் 1960-களில் பயிற்சி பெற்ற மருத்துவர்கள் பற்றாக்குறை இருந்ததால், வெறுங்கால் மருத்துவர்கள் திட்டம் செயல்படுத்தப்பட்டது. பின்னாளில், மருத்துவக் கல்வி விரிவுபடுத்தப்பட்ட பின், அம்மருத்துவர்கள் மைய மருத்துவ நீரோட்டத்துடன் இணைக்கப்பட்டனர். ஆனால், இந்தியாவிலோ, தற்பொழுது ஆரம்ப நலவாழ்வு மையங்களில் நிரந்தரமாக நியமிக்கும் அளவிற்கு ஆங்கில மருத்துவர்கள் மட்டுமின்றி, சித்தா, யுனானி, ஹோமியோபதி போன்ற இதர மருத்துவர்களின் எண்ணிக்கையும் அதிகமாகவே இருக்கிறது; மேலும், துணை நலவாழ்வு மையங்களில் நிரந்தரமாக நியமிக்கக்கூடிய அளவிற்கு துணை மருத்துவம் படித்து முடித்திருப்போரின் எண்ணிக்கையும் இருக்கிறது. இவர்களை நிரந்தரமாகப் பணியில் அமர்த்தும் எண்ணம்தான் அரசிடம் இல்லை.

தற்பொழுது இந்தியாவில் 1676 பேருக்கு ஒரு மருத்துவர் என்ற நிலைதான் இருப்பதாகவும், இந்த நிலையை மாற்றி அமைக்கவே இத்திட்டத்தைக் கொண்டு வருவதாகவும் அர தம்பட்டம் அடித்துக் கொள்கிறது. நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சி கண்டால் ஏழைகளின் வாழ்க்கைத் தரம் உயர்ந்துவிடும் என்பதில் எந்தளவிற்கு உண்மையுண்டோ, அதுபோலத்தான் மருத்துவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தினால் கிராமப்புற மக்களுக்கு மருத்துவ வசதி கிடைத்துவிடும் என்பதும் கவர்ச்சிகரமான பொய்யாகும்.



உயிர் காக்கும் மருத்துவக் காப்பீடு திட்டத்தைத் தொடங்கி வைக்கும் மத்திய நலவாழ்வு அமைச்சர் குலாம்நபி ஆசாத் மற்றும் தமிழக முதல்வர் மு.கருணாநிதி; மருத்துவ சேவையைக் கமுக்கமாகத் தனியார்மயமாக்கும் சதி. (கோப்புப்படம்)

இதுவொருபுறமிருக்க, இந்தத் திட்டம் ஏற்கெனவே சத்தீஸ்கர் மாநில அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டுத் தோல்வியில் முடிந்துவிட்டதாகக் கூறப்படுகிறது. இதன்படி பார்த்தால், இந்தத் திட்டம் ஆரம்ப நலவாழ்வு நிலையங்களில் மருத்துவர் பற்றாக்குறை இல்லை என்ற நிலையை, கிராமப்புறங்களில் இம்மருத்துவர்கள் ''கிளினிக்''குகளைத் திறந்து வைத்துக் கொண்டு கல்லா கட்டும் நிலையை வேண்டுமானால் உருவாக்கலாம். ஆனால், இத்திட்டத்தால் கிராமப்புற மக்களுக்கு உரிய சிகிச்சை கிடைத்துவிடும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் கிடையாது.

● ரஹீம்



படிப்பகம்

www.padippakam.com

# நூதனக் கல்விக் கொள்ளை தி.க. வீரமணியின் 'சாதனை'!

அண்மையில் நாடெங்கிலும் 44 நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களின் தகுதி நீக்கப்பட்டுள்ளன. இவற்றுள் 17 தனியார் பல்கலைக்கழகங்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவை. இவற்றுள் ஒன்றுதான், தி.க. வீரமணியின் ''பெரியார் மணியம்மை பல்கலைக் கழகம்''.

இந்த கல்வி வியாபார நிறுவனத்தை 2007 ஏப்ரலில் ஆய்வு செய்த பல்கலைக் கழக மானியக் குழுவால் நியமிக்கப்பட்ட ஆய்வுக் குழுவினர், 'இது கல்வி நிறுவனம் போலவே இல்லை, தன்னார்வத் தொண்டு நிறுவனம் போல உள்ளது' என்று கூறி அங்கீகாரம் தர மறுத்தனர். பின்னர் பல 'அற்புதங்களை' வீரமணியார் நடத்தி அங்கீகாரத்தை 'வாங்கினார்'.

நிகர்நிலையாவதற்கு முன்னர், இக்கல்லூரியின் நிர்வாகப் பிரிவு இடங்களுக்கு அரசு நிர்ணயித்த கட்டணம் 62 ஆயிரம்தான். ''எங்கள் கல்லூரியில் சேர்ந்தால் லேப்டாப் இலவசம்'' என அறிவித்து ஆள்பிடித்த வீரமணி கும்பல், ஆண்டுக் கட்டணமாக வசூலித்து வந்ததோ ரூ. 1.35 இலட்சம். இக்கல்லூரி நடத்திய நுழைவுத் தேர்வை எழுதியவர்கள் 400 பேர்கள் மட்டும்தான். ஆனால், சேர்ந்த மாணவர்களோ இரண்டாயிரம் என்பதிலிருந்தே அதன் 'நாணயத்தை'ப் புரிந்து கொள்ளலாம். நிர்வாகத்தில் வீரமணி, அவர் மனைவி, மகன் என - குடும்பமே ஆண்டு அனுபவிக்கும் சொத்தாகத்தான் அது இருந்து வருகிறது. மேலும் இக்கல்லூரிக்குத் தேவையான நிலத்தைக் கூட அடியாட்கள், ஆள்கடத்தல், சித்திரவதைகள் மூலம்தான் பறித்தெடுத்தது, இக்கும்பல்.

தகுதி நீக்கம் செய்யப்பட்ட நிகர்நிலைப் பல்கலைக் கழகங்களின் முதலாளிகள் பணமூட்டைகளுடன் உச்ச நீதிமன்றம் சென்று தடையாணையும் பெற்றுவிட்டனர். நிகர்நிலைப் பல்கலைக்கழக முதலாளிகளின் கூட்டமைப்பில் இருக்கும் ஜெகத்ரட்சகன், ஏ.சி.சண்முகம் போன்றவர்களுக்கு தோன்றாத யோசனை வாய்க்கப் பெற்ற 'தமிழர் தலைவர்', ''இது மக்கள் பல்கலைக்கழகம்... இதனைக் காக்க வழக்கு நிதி தாரீர்'' என இப்போது வசூலில் இறங்கிவிட்டார். ரூ. 5 லட்சத்தைத் தாண்டிச் சென்று கொண்டிருக்கிறது, இந்த வசூல் வேட்டை. பிக்பாக்கெட் அடித்து மாட்டிக் கொண்டவன் தனது வழக்குச் செலவுக்குக்கென்று, பறிகொடுத்தவர்களிடமே இன்னொருமுறை பிக்பாக்கெட் அடிப்பதைப் போல, முன்னாள்-இந்நாள் மாணவர்களிடம் மட்டுமின்றி, தனது நிறுவனப் பணியாளர்களின் மாதச் சம்பளத்தில் 10 சதவீதத்தையும் இப்போது வழக்கு நிதிக்கெனப் பிடுங்கிக் கொண்டது, இந்த மோசடிக் கும்பல்.

கல்வி இலவசமாகக் கொடுக்கப்படவேண்டும் எனும் நோக்கத்தைக் கொண்டவர், தந்தை பெரியார். அவரின் வாரிசாக தம்பட்டம் அடித்துக் கொள்ளும் வீரமணியோ, தனது ''விடுதலை'' நாளேட்டின் தலையங்கத்தில் ''அரசு, அனைத்துத் தனியார் கல்வி நிறுவனங்களையும் எடுத்துக் கொள்ளலாம் என முடிவு செய்துவிடுமானால், தாராளமாகச் செய்து கொள்ளட்டும்'' என்று யோக்கியவானைப் போல எழுதுகிறார். பின் எதற்காக வழக்காட வேண்டும்? ஏன் கட்டாய வசூல் நடத்த வேண்டும்?

● மணி

---

தலையங்கம் தொடர்ச்சி

பெரியாறு நீர்மட்டத்தை உயர்த்துவது என்ற 2006-ஆம் ஆண்டு உச்சநீதி மன்றத் தீர்ப்பை கேரள அரசு அமலாக்க மறுப்பது, அதற்கு எதிராக கேரள அரசு சட்டமியற்றியது, தற்போதுள்ள அணையின் பாதுகாப்பு பற்றி கேரள அரசு அச்சமெழுப்புவது; புதிய அணை கட்டுவது என்ற கேரள அரசின் முடிவு; எல்லாவற்றையும் ஐவர் குழு பரிசீலிக்கும்.

இவ்வளவு ஆண்டுகள் 'போராடி' வழக்குகள் நடத்தி, ''தற்போதைய முல்லைப் பெரியாறு அணை பாதுகாப்பானது தான், அதன் நீர்மட்டத்தை 142 அடி வரை உயர்த்திக் கொள்ளலாம்'' ஆகிய உரிமைகளை உச்சநீதி மன்றத் தீர்ப்பின்படியே நிலைநாட்டிய பிறகு, பெற்ற உரிமைகளைக் காப்பாற்றிக் கொள்வதற்குப் பதில் கேரள அரசின் அடாவடி எத்தணிப்புகளுக்கு உடன்படும் நிலைக்குத் தமிழகத்தை தாழ்ந்துபோக வைத்துவிட்டது கருணாநிதி அரசு.

காவிரிப் பிரச்சினையிலும் இதேநிலைதான். 17 ஆண்டுக்குள் கோடிக்கணக்கில் வழக்குரைஞர்களுக்குக் கொட்டிக் கொடுத்து 'போராடி' - வாதாடி நடுவர் மன்றத்தில் ஓரளவு சாதகமான தீர்ப்புப் பெற்றும், அந்த நிலையையும் பறிகொடுத்து விட்டது.

நடுவர் மன்றத் தீர்ப்புக்கு எதிராக உச்சநீதி மன்றத்திலேயேகூட மேல்முறையீடு செய்ய முடியாது என்ற சட்டத்தையே மீறி, காவிரிப் பிரச்சினையில் கர்நாடக அரசினுடைய மேல்முறையீட்டையும்; உச்சநீதி மன்றத் தீர்ப்பையே அமலாக்க மறுத்து, உச்சநீதி மன்றத்தையே அவமதிக்கும் கேரள அரசின் மேல் முறையீட்டையும் விசாரணைக்கு ஏற்பதன் மூலம் காலங்கடத்தும் கர்நாடக, கேரள அர களுக்குத் துணை போகிறது, உச்சநீதி மன்றம். காவிரிப் பிரச்சினையிலும் முல்லைப் பெரியாறு பிரச்சினையிலும் மத்தியிலுள்ள நீதி-நிர்வாக அமைப்பு முழுவதுமே தமிழகத்துக்கு எதிராக நிற்கிறது; மாநிலங்களிலுள்ள ஓட்டுக்கட்சிகள் எல்லாமே தெரிந்தே துரோகத்தனம் செய்கின்றன. ●



படிப்பகம்

www.padippakam.com

# நுண் கடன்... மீப்பெரும் கொள்ளை!

**தனியார் நிதி நிறுவனங்கள் அடித்தட்டு மக்களைச் சுரண்டுவதற்கான கருவியாக நுண்கடன் திட்டம் உருவெடுத்து வருகிறது.**

நுண்கடன் என்ற பெயரில் பத்தாயிரம் ரூபாய் முதல் இரண்டு லட்சம் ரூபாய் வரை கடன் கொடுக்கும் நிதி நிறுவனங்கள் கடந்த சில ஆண்டுகளாக நாடு முழுவதும் வகை தொகையின்றிப் பெருக ஆரம்பித்துள்ளன. பொருளாதார மந்தம் உலகைப் பிடித்தாட்டும் இன்றைய சூழலில், முதலீட்டாளர்களைக் கவர்ந்திழுக்க இவர்கள் வெளிநாடுகளில் செய்யும் விளம்பரங்களில், ''பத்தாயிரம் ரூபாய் உங்களுக்கு ஒரு பொருட்டாக இல்லாமல் போகலாம்; ஆனால் அதனை நுண்கடனாகக் கொடுப்பதன் மூலம் நீங்கள் இந்தியாவின் பின்தங்கிய பகுதியில் இருக்கும் ஒரு குடும்பத்தைக் கரை சேர்க்க முடியும். உங்கள் பணம், நிச்சயமாக உங்களிடமே திரும்ப வரும் - அதுவும், அதற்கு உண்டான வட்டியுடன்!'' என விளக்கி இந்தியாவின் வறுமையையே இவர்கள் மூலதனமாக மாற்றுகின்றனர்.

தற்போது இவற்றில் பல நிறுவனங்கள் பங்குச் சந்தையில் தங்களை இணைத்துக் கொண்டு விட்டதால், இவற்றின் பங்குகளை வாங்க உலகளாவிய பெரும் நிதியாதிக்கக் கும்பல்கள் போட்டி போடுகின்றன. இது போன்ற நிறுவனங்களில் முதலீடு செய்வது மிகவும் பாதுகாப்பானது, அசலும் வட்டியும் திரும்பக் கிடைப்பது உறுதி என்பது மட்டுமல்லாமல், இது போன்ற நிதி நிறுவனங்களைக் கட்டுப்படுத்துவதன் மூலம் 50,000 கோடி ரூபாய் மதிப்புள்ள கிராமப்புறக் கடன் சந்தையையே கட்டுப்படுத்த முடியும் என்பதால், இவற்றில் முதலீடு செய்ய ஏகாதிபத்திய நிதியாதிக்கக் கும்பல்கள் போட்டி போடுகின்றன. கடந்த 2004-இல் 400 கோடி ரூபாய் அளவுக்கு இருந்த நுண்கடன்களின் மதிப்பு, 2009-ஆம் ஆண்டில் மட்டும் ஆயிரம் கோடி ரூபாய்க்கும் மேலாக அதிகரிக்கும் அளவுக்கு அத்துறை விரிவடைந்துள்ளது.

பெயரில் பெண்களைக் கொண்டு கட்டப்படும் குழுக்கள் மூலம் இதனை இவர்கள் சாதித்துக் கொள்கின்றனர்.

வங்கதேசத்தைச் சேர்ந்த முகம்மது யூனுஸ் 1983-இல் அறிமுகப்படுத்திய இத்திட்டம், கந்து வட்டியின் பிடியில் சிக்கித்தவிக்கும் பின்தங்கிய நாட்டுப்புற ஏழை மக்களைக் காப்பாற்றவும், வங்கிகள் வழங்கும் கடனுதவிகளைப் பெற முடியாத நிலையில் உள்ளவர்களும் கடன் பெறவும் உதவுவதாகப் பெருமையுடன் குறிப்பிடப்பட்டது. கிராமப்புற பெண்களின் முன்னேற்றமும், தற்சார்பும், விழிப்புணர்வும் பெருகி வருவதாக புள்ளிவிவரங்கள் அடுக்கப்பட்டது. இதற்காக யூனுஸுக்கும் அவரது ''கிராமின்'' வங்கிக்கும் சில ஆண்டுகளுக்கு முன்பு நோபல் பரிசுகூட வழங்கப்பட்டது. வங்கதேசத்தில் ஏறத்தாழ 75 இலட்சம் ஏழைப் பெண்கள் பயனடைந்துள்ளார்கள் என்று கூறி இத்திட்டத்தை முதலாளித்துவ வாதிகள் ஏற்றிப் போற்றினார்கள்.



ஏழ்மையே மூலதனம்: மதுரையில் கடந்த ஜனவரி 10-ஆம் தேதியன்று திறக்கப்பட்டுள்ள கனரா வங்கியின் நுண்கடன் திட்டக் கிளை.

இவ்வாறு அந்நிய நாடுகளிலிருந்தும் உள்நாட்டு தரகு முதலாளித்துவ நிதி நிறுவனங்களிடமிருந்தும் வந்து குவியும் பெரும் நிதியைச் சிறிது சிறிதாகப் பிரித்து, தகுதியான ஆட்களைக் கண்டறிந்து கடன் கொடுத்து, கறாராக வட்டியையும் அசலையும் வசூலித்துக் கொடுக்கும் பொறுப்பை, தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஏற்றுள்ளன. மகளிர் சுய உதவிக் குழுக்கள் என்ற

இந்தியாவில் மகளிர் சுய உதவிக்குழுக்களைத் தொடங்கியபோது, நுண்கடன்களைப் பெற்று ஊதுவத்தி, மெழுகுவர்த்தி தயாரித்தல் போன்ற சிறுதொழில்கள் தொடங்குவது எனப் படம் காட்டினார்கள். பத்தாயிரம் ருபாய் கடன் பெற்ற குழுக்கள் பல லட்சம் சம்பாதித்துவிட்டதாக வெற்றிக் கதைகளைப் பரப்பினார்கள். பின்னர் மெதுவாக இவர்களது நீலச் சாயம் வெளுக்க



படிப்பகம்

www.padippakam.com

**உள்நாட்டு – வெளிநாட்டு நிதி நிறுவனங்கள் நுண்கடன் துறையில் இறங்கியிருப்பதால், அடாவடி வசூலும் ரவுடித்தனமும் தற்கொலைகளும் மேலும் அதிகரிக்கும்.**

ஆரம்பித்தது. மகளிர் சுய உதவிக் குழுக்களின் மூலம் சிறுதொழில் தொடங்குவதெல்லாம் தற்போது முற்றிலுமாக நிறுத்தப்பட்டு, முற்று முழுதாக அனைவரும் கந்து வட்டித் தொழிலில்தான் ஈடுபடுகின்றனர். எந்த நோக்கத்தைக் கூறி இத்திட்டம் தொடங்கப்பட்டதோ, அந்த நோக்கமே இன்று புஸ்வாணமாகிவிட்டது.

திருமணத்துக்கான செலவு முதலாக வீட்டு உபயோகப் பொருட்கள் வாங்குவது வரை எல்லா அவசரச் செலவுகளுக்கெனவும், காய்கறி வியாபாரம், சாப்பாட்டுக் கடை, மளிகைக் கடை போன்ற சிறிய தொழில்களில் முதலீடு செய்வதற்கெனவும் பலர் மகளிர் ய உதவிக் குழுக்கள் மூலம் நவீன கந்து வட்டிக் கும்பல்களிடம் கடன் வாங்குகின்றனர். 25 முதல் 40 சதவீதம் வரை வட்டி வாங்கும் இக்குழுக்கள், வட்டியை வசூலிப்பதில் கந்து வட்டிக்காரனை விஞ்சுமளவிற்கு மோசமாக நடந்து கொள்கின்றன. சுய உதவிக் குழுக்கள் இவ்வாறு கறாராக நடந்து கொள்வதற்கு, நிதி நிறுவனங்களிடமிருந்து இக்குழுக்கள் வாங்கிய கடனை ஒரு முறை திருப்பிக் கட்டத் தவறினால் கூட மறுமுறை கடன் கிடைக்காது என்பது ஒரு காரணம். நிதி நிறுவனங்கள், சுய உதவிக் குழுக்களுக்குத் தரும் கடன் அளவு பத்தாயிரம் ரூபாயில் ஆரம்பிக்கிறது. இத்தொகை முறையாகத் திருப்பிக் கட்டப்பட்டால்தான் கடன் அளவு படிப்படியாக அதிகரித்து 25 இலட்சம் ரூபாய் வரை உயரும் எனும் நிபந்தனையும் இன்னொரு காரணம். எனவேதான், கடனைத் திரும்ப வசூலிப்பதில் இக்குழுக்கள் தயவுதாட்சண்யம் பார்ப்பதில்லை. ஒருவருக்கு இருவராகச் சென்று கடன் பெற்றவரை நச்சரிப்பதில் இருந்து, அவரைப் பொது இடத்தில் வைத்து அவமானப்படுத்துவது வரை எல்லா வகையான உத்திகளையும் கையாள்கின்றனர். இதனால் கடன் வாங்கியவர் அவமானத்துக்குள்ளாகி மனமுடைந்து தற்கொலை செய்து கொள்வதும் பரவலாக உள்ளது.

வழக்கமான தங்களது 'லோன்'களின் மூலம் கிடைக்கும் வட்டியை விடவும் நுண்கடன்களின் மூலம் கிடைக்கும் வட்டி மிக அதிகம் என்பதாலும், இதன் மூலம் மிகப் பெரிய அளவிற்குக் கடன் கொடுத்து நிதியைச் சுழற்ற முடியும் என்பதாலும் ஐ.சி.ஐ.சி.ஐ; எச்.டி.எப்.சி; ஹெச்.எஸ்.பி.சி; அமெரிக்கன் சிட்டி பேங்க், ஏ.பி.என்.அம்ரோ, ஆக்சிஸ் பேங்க், பார்க்லேஸ், ஐ.என்.ஜி.வைஸ்யா, கோடாக் மகிந்திரா பேங்க், ஸ்டாண்டர்டு சார்ட்டர்டு, டாடா கேபிடல், எஸ் பேங்க், பஜாஜ் அலயன்ஸ், ரிலையன்ஸ் போன்ற பல தனியார் வங்கிகளும் நிதிக்கழகங்களும் காப்பீடு நிறுவனங்களும் இத்துறையில் குதித்துள்ளன. நெதர்லாந்தின் இன்டர்நேஷனல் பினான்ஸ் கார்ப்பரேஷன் (ஐ.எஃப்.சி.), ஜெர்மனியின் டாய்ஷ் வங்கி முதலானவை அவிஷ்கார் குட்வெல் எனும் நுண்கடன் வங்கித் திட்டத்தில் முதலீடு செய்யத் தீர்மானித்துள்ளன. நுண்கடன் துறையில் மிகப் பெரிய எஸ்.கே.எஸ். நிறுவனத்தில் பல்வேறு ஏகாதிபத்திய வங்கிகளும் நிதி முதலீட்டு நிறுவனங்களும் காப்பீடு நிறுவனங்களும் பல்லாயிரம் கோடிகளை முதலீடு செய்யத் தீர்மானித்துள்ளன. கிரெடிட் கார்ட் எனப்படும் கடன் அட்டைகளின் மூலம் அநியாய வட்டி வாங்கும் இவ்வங்கிகள், கடன் கட்ட முடியாதவர்களை ரவுடிகளை விட்டு மிரட்டி, பணம் பறித்தது எல்லோரும் அறிந்த ஒன்றுதான். இப்போது இவர்கள் நுண்கடன் துறையில் இறங்கியுள்ளதன் மூலம் அடாவடி வசூலும் ரவுடித்தனமும் தற்கொலைகளும் மேலும் அதிகரிக்கும் என முதலாளித்துவப் பொருளாதாரவாதிகளே அஞ்சுகின்றனர்.




மகளிர் யஉதவிக் குழுக்களுக்குச் ழல் நிதி வழங்கும் துணை முதல்வர் மு.க.ஸ்டாலின்: பெருமுதலாளிகளின் நுகர்பொருள் சந்தைக்கு அரசின் தரகு வேலை.

அ.தி.மு.க; தி.மு.க; காங்கிரஸ் என அனைத்து ஓட்டுக் கட்சிகளும் தற்போது வரிந்து கட்டிக் கொண்டு மகளிர் சுய உதவிக் குழுக்களைக் கட்டி வருகின்றன. தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து, சுழல் நிதி வழங்குவது என்ற பெயரில் இலட்சக்கணக்கான குழுக்களுக்கு, கோடிக்கணக்கான ரூபாய்களை தமிழகத்



படிப்பகம்

www.padippakam.com

துணை முதல்வர் ஸ்டாலின் வழங்கி வருகிறார். மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் அண்மையில் சென்னைக்கு வந்து காங்கிரஸ் சார்பு மகளிர் சுய உதவிக் குழுக்களைத் தொடங்கி வைத்து, தாங்களும் களத்தில் உள்ளதைக் காட்டிவிட்டுச் சென்றார். வாக்காளர்களுக்கு அள்ளி வழங்கும் பணம் மட்டுமே தேர்தலில் வெற்றிபெறுவதற்கான ஒரே வழி என்பது நிரூபிக்கப்பட்டுவிட்டதால், கொடுக்கும் பணம் முறையாக விநியோகிக்கப்படுவதற்கு, கட்சிக்காரனைவிட சுய உதவிக் குழுக்கள் நம்பகமானவர்களாகத் தெரிவதால், எல்லாக் கட்சிகளும் தற்போது சுய உதவிக் குழுக்களைக் கட்டி வருகின்றன. முதலாளித்துவக் கட்சிகள் மட்டுமின்றி, இடது-வலது போலிக் கம்யூனிஸ்டுகளும் இது போன்ற குழுக்களைக் கட்டி ஓட்டு வேட்டையாட முயற்சித்து வருகின்றன.

விவசாயம் நாசமாகி, விவசாயிகள் நொடித்துக் கொண்டிருக்கும் இன்றைய சூழலில் கிராமப்புறங்களைக் குறிவைத்து இறங்கியிருக்கும் நுண்கடன் குழுக்கள், விவசாயம் செய்யவும், ஆடு-மாடு வாங்கவும் நிதி வழங்குவதை விட, ஆடம்பர நுகர் பொருட்களை வாங்கத்தான் அதிக அளவில் கடன் கொடுக்கின்றன. வாங்கும் கடனை உடனடியாகச் செலவு செய்துவிட்டு வட்டி கட்ட முடியாமல் விவசாயிகள் திணறிக் கொண்டிருக்க, கடன் கொடுக்கும் பன்னாட்டு நிதி நிறுவனங்களும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் இலாபத்தில் கொழிக்கின்றன. இவர்கள் அடிக்கும் கொள்ளைக்குக் கூட்டாளிகளாக அடியாள் வேலை செய்வதைத்தான் மகளிர் சுய உதவிக் குழுக்கள் செய்கின்றன. மொத்தத்தில், நுண்கடன் திட்டம் என்பது ஏழைகளை ஏற்றிவிடும் ஏணியல்ல; அது அவர்களின் கழுத்தை இறுக்கும் சுருக்கு என்பதும், உள்நாட்டு-வெளிநாட்டு நிதியாதிக்கக் கொள்ளைக் கூட்டம் கிராமப்புற ஏழைகளையும் சூறையாடக் கிளம்பிவிட்டது என்பதும் அடுத்தடுத்து அம்பலமாகி வருகிறது.

• வேலன்

# வாழ்வுரிமைக்குப் போராடுவது தேச விரோதச் செயலா?

**இந்திய யுரேனியக் கழகம், ஜார்கண்டின் ஜாடுகுடா பகுதியை அணுக்கழிவு குப்பைத் தொட்டியாக மாற்றிவிட்டது.**

பழங்குடியினர் நிறைந்த ஜார்க்கண்ட் மாநிலத்தின் கிழக்கு சிங்பும் மாவட்டத்தின் ஜாடுகுடா, யுரேனிய வளம் மிக்க பகுதியாகும். இங்கு இந்திய யுரேனியக் கழகம் எனும் அரசுத்துறை நிறுவனத்துக்குச் சொந்தமாகப் பல சுரங்கங்கள் உள்ளன. இந்நிறுவனம் தனது உற்பத்தியை அதிகரிக்க எடுத்து வரும் நடவடிக்கைகளை எதிர்த்து, அப்பகுதி மக்கள் நடத்திவரும் போராட்டங்களால் ஜாடுகுடா வட்டாரமே கொதித்துக் கொந்தளித்துக் கொண்டிருக்கிறது.

1967 முதல் இங்கு செயல்பட்டு வரும் இந்நிறுவனத்துக்கென பத்தின், துரம்திஹ், நர்வாபஹர், பாண்டுஹூரங் ஆகிய இடங்களில் சுரங்கங்கள் உள்ளன. இச்சுரங்கங்களில் வெட்டியெடுக்கப்படும் தாதுவிலிருந்து ஜாடுகுடா, துரம்திஹ் ஆகிய இடங்களில் உள்ள சுத்திகரிப்பு ஆலைகளில் அணுசக்திக்கு அவசியமான யுரேனியம் பிரித்தெடுக்கப்படுகின்றது. இப்பகுதியில் கிடைக்கும் தாதுவில் யுரேனியத்தின் அளவு மிகமிகக் குறைவாக இருப்பதால், 1000 மெட்ரிக் டன் தாதுவிலிருந்து 2 மெட்ரிக் டன் யுரேனியம் மட்டுமே பிரித்தெடுக்க முடியும். அணுக்கதிர்வீச்சு நிறைந்த எஞ்சிய தாதுக்கள், கழிவுகளாகத் திறந்த வெளியிலும் நீர் நிலைகளிலும் கொட்டப்படுகின்றன.

இக்கழிவுகள் உருவாக்கும் கதிர்வீச்சினால் இப்பகுதிவாழ் பெண்கள் பலருக்கும் குழந்தைப் பேறு இல்லாமல் போகும் கொடுமை அதிகரித்து வருகிறது. இப்பகுதியில் 9.6 சதவீத தம்பதியினர் குழந்தைப் பேற்றுக்குத் தகுதி அற்றவர்களாகி விட்டனர். 68.33 சதவீதம் பேர் சராசரி வயதான 62-ஐ எட்டும் முன்பே இறந்துவிடுகின்றனர். 1967-இல் சுரங்கம் ஆரம்பித்தபோது வேலைக்குச் சேர்ந்தவர்களில் ஒரே ஒருவர்தான் இன்று உயிரோடு இருக்கிறார்; மற்றவர்களெல்லாம் தொடர் கதிர்வீச்சினால் பல்வேறு நோய்களுக்குப் பலியாகிவிட்டனர்.

சுரங்கத்தை ஒட்டிய பகுதிகளில் நீடிக்கும் அபாயகரமான கதிர்வீச்சினால் இப்பகுதிவாழ் மக்களுக்கு காசநோய், வயிற்றுப் புற்றுநோய், நுரையீரல் புற்றுநோய் போன்றவை உருவாகியிருப்பதை ‘‘அமைதிக்கும் வளர்ச்சிக்குமான இந்திய மருத்துவர் குழு’’ என்ற அமைப்பு, தனது ஆய்வின் மூலம் நிரூபித்துள்ளது. அணுக்கழிவு நிலத்தடி நீரில் கலப்பதால் நீர் நஞ்சாகிவிட்டது. ஏறத்தாழ ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்களை இந்த யுரேனியச் ரங்கமும்



ம.பி.க்கு ஒரு போபால்; ஜார்கண்டுக்கு ஒரு ஜாடுகுடா: யுரேனியச் ரங்கத்திலிருந்து பரவும் அணுக் கதிர்வீச்சினால் கை-கால்கள் முடமாகிப் போன சிறுவன்.



படிப்பகம்

www.padippakam.com




''அணுசக்திப் பேராசைக்காகவும் பெருமைக்காகவும் எமது நிலத்தையும் வாழ்வையும் நாசமாக்காதே!'' - இந்திய அரசின் யுரேனியச் ரங்கத் திட்டத்தை எதிர்த்து ஜாடுகுடா வட்டார மக்களின் போராட்டம்.

கதிர்வீச்ம் மெல்லமெல்லச் சாகடித்துக் கொண்டிருக்கிறது.

ஹிரா ஹன்ஸ்தா எனும் பெண்ணின் கணவர் யுரேனியச் சுரங்கத்தின் தொழிலாளி. திருமணமான 20 ஆண்டுகளில் 3 முறை கருச்சிதைவுக்குள்ளான இப்பெண்ணுக்குப் பிறந்த 5 குழந்தைகளும் பிறந்த சில நாட்களிலேயே இறந்துவிட்டன. முன்யா எனும் பெண்ணுக்கு தப்பித் தவறி ஒரு குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு வலது காது மடல் இருக்க வேண்டிய இடத்தில் சதைக் கோளம் இருந்தது; காதும் கேட்பதில்லை.

சுரங்கங்களிலும், சுத்திகரிப்பாலைகளிலும் கதிர்வீச்சைக் கட்டுப்படுத்தும் சர்வதேச விதிமுறைகள் பின்பற்றப்படுவதில்லை. அங்குள்ள தொழிலாளர்கள் எவ்வளவு கதிர்வீச்சுக்கு உள்ளாகிறார்கள் என்பதை முறையாகக் கணக்கெடுக்க வேண்டும் எனும் விதி கூட இந்திய யுரேனியக் கழகத்தில் இல்லை. 2005-ஆம் ஆண்டு இறுதியில் கழிவுகளைக் கொண்டு செல்லும் குழாய் ஒன்றில் ஏற்பட்ட கசிவினால் அணுக்கழிவுகள் ஊருக்குள் நுழைந்தன. அப்போது எவ்வித அபாய எச்சரிக்கையும் எழுப்பப்படவில்லை. சுமார் 9 மணி நேரத்திற்குக் கழிவுகள் தொடர்ந்து வெள்ளம் போல வெளியேறி ஊரையே நிரப்பிய பின்னர் தான் கசிவு அடைக்கப்பட்டது.

இவற்றையெல்லாம் கண்டு பொங்கி எழுந்த மக்கள் பல போராட்டங்களை நடத்தினர். ஏற்கெனவே இருக்கின்ற சுரங்கங்களில் சர்வதேச தரம் வாய்ந்த பாதுகாப்பை செய்து கொடுப்பது, கதிர் வீச்சு பாதித்துள்ள பகுதிகளைத் தூய்மைப் படுத்துதல், சுற்றுச்சூழல் மாசுபாடு, சுகாதாரச் சீர்கேடுகள் குறித்து நடுநிலையான ஆய்வு செய்தல், குடிநீர் நிலைகளில் கதிர்வீச்சு அபாயம் ஏற்படுவதை கண்காணித்துத் தடுக்க ஆவன செய்தல் - முதலான கோரிக்கைகளை முன்வைத்து அப்பகுதி மக்கள் கடந்த நாற்பதாண்டுகளாகப் போராடி வருகின்றனர்.

ஆனால், ஆலை நிர்வாகமோ அப்போராட்டங்களை ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை. இந்நிலையில், தனது அணு ஆயுத ஆற்றலைப் பெருக்கவும், தெற்காசியாவில் 'வல்லர என்ற பெருமையை' நிலைநாட்டவும் உற்பத்தித் திறனை மேலும் அதிகரிக்க முடிவு செய்துள்ளது, இந்திய அர. இதற்காக ஆலை நிர்வாகம், கழிவுகளைக் கொட்டுவதற்கெனப் புதிதாக 6.37 ஹெக்டேர் நிலத்தை வனத்துறையிடம் இருந்து வாங்கியுள்ளது.

ஆலை விரிவாக்கம் குறித்து நடந்த கருத்தாய்வுக் கூட்டத்தில் தங்களது எதிர்ப்பைப் பதிவு செய்ய மக்கள் தீர்மானித்தனர். ஆனால், மக்களைக் கூட்டம் நடந்த இடத்திற்கு அருகிலேயே வர விடாமல் தடுக்க, 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மத்திய தொழில் பாதுகாப்புப் படையைக் கொண்டுவந்து குவித்து, கூட்டத்திற்கு வந்த மக்களை மிரட்டி, கூட்டத்தில் கலந்து கொள்ள விடாமல் தடுத்து விரட்டினர். அதிகார வர்க்கமும் போலீ ம் அமைத்த எல்லாத் தடைகளையும் மீறி, சுமார் 50-க்கும் மேற்பட்ட மக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்திற்குள் நுழைந்து எதிர்ப்பு தெரிவித்தனர்.

நீர், காற்று, உணவு என அனைத்தையும் கதிர்வீச்சினால் மாசுபடுத்தும் அரசின் பொறுப்பற்றதனத்தைச் சுட்டிக்காட்டக்கூட அனுமதிக்காத அந்தக் கருத்தாய்வு, கதிர்வீச்சு பற்றிப் பேசுவதென்பது தேசவிரோத பிரச்சாரம் என்ற 'கருத்தை'ப் பதிவு செய்திருக்கிறது. தங்கள் கோரிக்கைகள் நிறைவேறும்வரை போராட்டத்தை நிறுத்துவதில்லை எனப் பழங்குடியினரும் உறுதியாய் உள்ளனர். முற்போக்கு-ஜனநாயக சக்திகள் மற்றும் ற்றுச்சூழலாளர்கள், மருத்துவர்கள் என பலதரப்பினரின் ஆதரவோடு பழங்குடியினரின் போராட்டம் இவ்வட்டாரமெங்கும் தொடர்கிறது.

● அன்பு

''புதிய ஜனநாயகம்'' உரிமையாளர்
மற்றும் இதர விவரங்கள்
படிவம் IV (விதி 8-இன் படி)

1. வெளியிடும் இடம் : 110, இரண்டாம் தளம், மாநகராட்சி வணிக வளாகம், 63, என்.எஸ்.கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை -600 024.
2. வெளியிடும் காலம் : மாதம் ஒருமுறை
3. அச்சிடுபவர் பெயர் : இரா. சண்முகராசு
   இந்தியக் குடிமகனா? : ஆம்
   முகவரி : எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாம் தளம், மாநகராட்சி வணிக வளாகம், 63, என்.எஸ்.கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை -600 024.
4. உரிமையாளர் மற்றும் வெளியிடுபவர் பெயர்: இரா. சண்முகராசு,
   இந்தியக் குடிமகனா? : ஆம்
   முகவரி : 110, இரண்டாம் தளம், மாநகராட்சி வணிக வளாகம், 63, என்.எஸ்.கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை -600 024.
5. ஆசிரியர் பெயர் : இரா. சண்முகராசு
   இந்தியக் குடிமகனா? : ஆம்
   முகவரி : 110, இரண்டாம் தளம், மாநகராட்சி வணிக வளாகம், 63, என்.எஸ்.கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை -600 024.

இரா. சண்முகராசுவாகிய நான், மேலே குறிப்பிட்டுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மை என்று உறுதியளிக்கின்றேன்.

1.3.2010

(ஒப்பம்) இரா. சண்முகராசு,
வெளியிடுபவர்.



படிப்பகம்

www.padippakam.com

# “உயிரைப் பறித்தாலும் நிலத்தைப் பறிக்க முடியாது!”

## போஸ்கோ நிறுவனத்துக்கு எதிரான ஒரிசா மக்களின் போராட்டம் எஃகுறுதியுடன் முன்னேறுகிறது!

இந்தியாவின் மிகப் பெரிய அந்நிய முதலீட்டுத் திட்டமான தென்கொரியாவின் போஸ்கோ எஃகு ஆலைத் திட்டத்துக்கு எதிராக, போஸ்கோ பிரதிரோத் சங்கராம் சமிதி (பி.பி.எஸ்.எஸ்) என்ற அமைப்பின் தலைமையில் ஒரிசாவின் ஜெகத்சிங்புர் மாவட்டத்தின் விவசாயிகள் கடந்த ஐந்தாண்டுகளாகப் போராடி வருகின்றனர். கடந்த ஜனவரி 26 முதலாக போஸ்கோ திட்டத்திற்கு எதிராக காலவரையற்ற தர்ணா போராட்டத்தை அவர்கள் நடத்தி வருகின்றனர்.

தென்கொரிய அதிபர் லீ மையூங் பாக், டெல்லியில் கடந்த ஜனவரி 26 அன்று நடந்த ‘குடியர’ தின விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். அவர் வருகைக்கு முன்னதாக 3566 ஏக்கர் நிலங்கள் அரசால் கையகப்படுத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. எஞ்சிய நிலங்களை விரைவில் கையகப்படுத்தி திட்டத்தைச் செயல்படுத்தப் போவதாகவும் அர அறிவித்துள்ளது. அதாவது, 2006-ஆம் ஆண்டில் கலிங்கா நகரில் போராடிய விவசாயிகள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி 14 பேரைக் கொன்றதைப் போல, மிகக் கொடிய தாக்குதலைக் கட்டவிழ்த்துவிடத் துடிக்கிறது.

ஏறத்தாழ 52,000 கோடி ரூபாய் மதிப்புள்ள போஸ்கோ திட்டத்தினால் 30,000 -க்கும் மேற்பட்ட விவசாயிகள் வாழ்விழக்கும் பேரபாயம் ஏற்பட்டுள்ளது. ஒரிசாவின் உயர்தரமான இரும்புக் கனிமத்தில் 60 கோடி டன் அளவுக்கு அள்ளிச் செல்வதோடு, ஆண்டுக்கு 12 கோடி டன் எஃகு உற்பத்தி செய்யும் உருக்காலையும் மின்நிலையமும் தனியார் துறைமுகமும் கொண்ட இத்திட்டம், கடந்த 2005 -ஆம் ஆண்டு ஜூன் 22-ஆம் தேதி கையெழுத்திடப்பட்டது. இத்திட்டத்தால் 11 கிராமங்களிலுள்ள 5000 குடும்பங்கள் - ஏறத்தாழ 30,000 பேர் வெளியேற்றப்படவுள்ளனர். இதுதவிர, ஜடாதாரி ஆற்றையும் அது கடலில் கலக்கும் கழிமுகப்பகுதியையும் போஸ்கோ நிறுவனம் ஆக்கிரமிக்கப் போவதால், 52,000 மீனவர்களின் எதிர்கால வாழ்வும் பறிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

எஃகு உருக்காலை மற்றும் மின்நிலையத்துக்கு 4004 ஏக்கர் நிலம் தேவை. இதில் 3566 ஏக்கர் புறம்போக்கு மற்றும் காட்டுப்பகுதிகள் அரசால் இந்நிறுவனத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. காட்டு நிலங்களையும் காட்டின் விளைபொருட்களையும் பயன்படுத்தி வந்த மக்கள் விரட்டியடிக்கப்பட்டுள்ளனர். எஞ்சிய 438 ஏக்கர் நிலம் உள்ளூர் சிறு விவசாயிகளுடையது. இவற்றில் வெற்றிலை, முந்திரி சாகுபடியும் முக்கியமாக, நெல் சாகுபடியும் செய்து வருகின்றனர். இந்த நிலங்களைப் பறிப்பதை எதிர்த்து விவசாயிகள் நடத்திவரும் போராட்டத்தை ஒடுக்க 25 பிளாட்டூன் துணை இராணுவப் படைகள் குவிக்கப்பட்டுள்ளன. மாவட்ட ஆட்சியர் மூலம் கிராமப் பஞ்சாயத்துகளில் ஒப்புதல் பெறுவதற்கான கூட்டங்கள் நடத்தப்பட்டபோது, தங்கள் வாழ்வுரிமையைப் பறிக்கும் போஸ்கோ திட்டத்தை எதிர்த்து அனைத்து விவசாயிகளும் ஏகமனதாகத் தீர்மானம் நிறை

மூங்கில் தடுப்பரண்களை அகற்றும் அதிரடிப்படையினரைத் தடுத்துப் போராடும் ஒரிசா மக்கள். (மேல் படம்); போஸ்கோ திட்டத்துக்கு எதிராக ஒரிசாவில் நடந்துவரும் காலவரையற்ற தொடர் ஆர்ப்பாட்டம்.





படிப்பகம்

www.padippakam.com

வேற்றியுள்ளனர். ஆனால் அரசோ, 15 நாட்களுக்குள் நிவாரணத் தொகையைப் பெற்றுக் கொள்ளாவிட்டால், பின்னர் எவ்வித நிவாரணமும் தரப்பட மாட்டாது என்று கடந்த பிப்ரவரி முதல் நாளன்று அறிவித்து, நிலங் களைப் பறிக்கக் கிளம்பியுள்ளது. பாதிக்கப்படும் விவ சாயிகளுக்கான மறுகுடியமர்த்தல் மற்றும் நிவாரணத் திட்டம் அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. ''இந்தியாவில் இதுதான் மிகச் சிறந்த நிவாரணத் திட்டம்'' என்கிறார் போஸ்கோ இந்தியா நிறுவனத்தின் பொது மேலாளரான மொகந்தி. ஆனாலும் இன்றுவரை எந்த விவசாயியும் நிவாரணத் தொகையை வாங்கவில்லை.

ஜெகத்சிங்பூர் மாவட்டத்தின் பட்னா, கோவிந்த்பூர், தின்கியா ஆகிய கிராமங்கள் போராட்டத்தின் முன்னணி யில் நிற்கின்றன. விவசாயிகள் போஸ்கோ திட்டம் அமையவுள்ள 4004 ஏக்கர் நிலத்தைச் ற்றிவளைத்து 17 இடங்களில் மட்டும் நுழைவாயில்களை அமைத்துள்ள னர். அவர்களின் அனுமதி இல்லாமல் அந்த மூங்கில் தடுப்பரண்களைத் திறக்க முடியாது. அர அதிகாரி களோ போஸ்கோ நிறுவனத்தினரோ இன்னமும் அந்தப் பகுதிக்குள் நுழைய முடியவில்லை. ஒவ்வொரு கிராமத் திலும் மூங்கில் வேலி போடப்பட்டு அந்நியர்கள் எவரும் நுழைய முடியாதபடி தடுத்துக் கண்காணித்து வருகின்றனர்.

''ஏற்கெனவே பாரதீப் துறைமுகப் பகுதியில், இந்தி யன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம் இதேபோல விளைநிலங்களைப் பறித்துக் கொண்டு மறுவாழ்வு நிவாரணத் திட்டங்களை அறிவித்தது. அதை அன்று விவசாயிகள் நம்பினர். அந்த இடத்தை இன்று யார் வேண்டுமானாலும் நேரில் சென்று பார்க்கட்டும். வெறும் கான்கிரீட் தூண்கள்தான் நிற்கின்றன. அதற்கு மேல் நிவாரணத் திட்டம் நகரவேயில்லை. அரசாங்கமே எங்களை வஞ்சித்துவிட்ட நிலையில், அந்நியத் தனியார் ஏகபோக நிறுவனமான போஸ்கோ, நிவாரணத் திட்டத்தை நிறைவேற்றும் என்று நம்புவதற்கு நாங்கள் முட்டாள்கள் இல்லை'' என்கிறார், தின்கியா கிராமப் பஞ்சாயத்துத் தலைவரான சிசிரா மகாபத்ரா.

நருசிங்க பெஹரா மற்றும் தேவேந்திர வாய்ன் ஆகி யோர் ''போஸ்கோவுக்கு மக்களின் எதிர்ப்பு'' எனும் ஏழு நிமிடக் காணொளியைத் தயாரித்து, அதை நாட்டு மக் கள் அனைவரும் காணுமாறும், விவசாயிகளின் நியாய மான இப்போராட்டத்தை ஆதரிக்குமாறும் கோரியுள்ள னர். (http://www.youtube.com/watch?v=cizn7zJmyUc)

போஸ்கோவை எதிர்த்து வலது கம்யூனிஸ்டு கட்சி உள்ளிட்ட பல்வேறு அமைப்புகள் விவசாயிகளோடு இணைந்து போராடி வருகின்றன. தர்ணா போராட்டம் நடத்தியவர்கள் மீது போஸ்கோ நிறுவனம் ஏற்பாடு செய்துள்ள குண்டர்படையினர் தாக்குதல் நடத்திய தோடு, குண்டுகளையும் வீசியுள்ளனர். இதில் பலர் படு காயமடைந்து மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இது தவிர போலீ பலமுறை தடியடித் தாக்குதல் நடத்தி இப்போராட்டத்தை ந க்க முயற்சிக் கிறது. இத்துணை அடக்குமுறைகளையும் எதிர் கொண்டு ஒரிசா மக்களின் போஸ்கோ எதிர்ப்புப் போராட்டம் பற்றிப் படர்ந்து வருகிறது. ஒரிசா மக்களின் போஸ்கோ எதிர்ப்புப் போராட்டத்தை ஆதரிப்பதும், அதை மறுகாலனியாக்கத்திற்கு எதிரான போராட்டமாக வளர்த்தெடுப்பதும் புரட்சிகர-ஜனநாயக சக்திகளின் உடனடிக் கடமை; நம் கடமை.

● குணசேகரன்

# தோழர் கண்ணனின் நினைவை நெஞ்சிலேந்துவோம்!

மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் திருச்சி மாவட்டக் கிளை உறுப்பினராகச் செயல்பட்டு வந்த தோழர் கண்ணன், கடந்த 16.2.2010 அன்று காலை திடீர் மாரடைப்பினால் மர ணமடைந்து விட்டார். படிப்பறிவு குறைந்தவராக இருந்தபோதிலும், வர்க்க உணர்வும் போர்க்குணமும் நிறைந்த தோழர் கண்ணன், தன் னைப் புரட்சிகர அரசியலின் பிரச்சா ரகனாகக் கருதி உணர்வோடு செயல் பட்டவர். உதிரித் தொழிலாளியான அவர், நாள் முழுவதும் உடலுழைப் பில் ஈடுபட்டுவிட்டு, இரவு நேரங்க ளில் அமைப்பின் பிரச்சாரப் பணிக ளில் சோர்வின்றிப் பணியாற்றினார். கொள்கையின் மீது பற்றுறுதியும், அது வெற்றிபெற வேண்டும் என்ற துடிப்பும் அவரது பேச்சிலும் செயலி லும் எப்போதும் வெளிப்படும். புரட் சிகர அமைப்பையும் தோழர்களையும் இழிவாக அவதூறு செய்த காலி களை தன் பாதச் செருப்பால் பதம் பார்த்தவர்தான் இந்த உணர்வுமிக்கத் தோழர். எளிய வாழ்வும் கடின உழைப்பும் புரட்சியின் மீது மாளாக் காதலும் கொண்ட 45 வயதான அத்தோழரின் திடீர் மரணம், ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.



தோழரின் மரணச் செய்தி அறிந்து திருச்சி மாவட்டம் முழுவதி லுமிருந்து திரண்ட அமைப்புத் தோழர்களும் நண்பர்களும் உறவினர் களும், ம.க.இ.க. அலுவலகத்தில் செங்கொடி போர்த்தப்பட்டிருந்த அவ ரது உடலுக்கு மரியாதை செலுத்தி, அன்று மாலை நடந்த இறுதி ஊர்வ லத்தில் பங்கேற்று, இடுகாட்டில் இரங்கல் கூட்டம் நடத்தினர். கண் ணீர் மல்க உரையாற்றிய அனைவ ரும் தோழரின் உயரிய கம்யூனிசப் பண்புகளை வழுவாமல் பின்பற்ற வும், அவரது புரட்சிகர கனவை நிறை வேற்றப் பாடுபடவும் உறுதியேற்று அஞ்சலி செலுத்தினர்.

தோழர் கண்ணனின் நினைவை நெஞ்சிலேந்துவோம்!

— மக்கள் கலை இலக்கியக் கழகம், திருச்சி.



படிப்பகம்

www.padippakam.com

# “நக்சல் எதிர்ப்பு நரவேட்டைப் போரை முறியடிப்போம்! மறுகாலனியாக்க எதிர்ப்புப் போரில் அணி வகுப்போம்!”

## -தமிழகமெங்கும் தொடரும் புரட்சிகர அமைப்புகளின் பிரச்சாரம்


புதுச்சேரியில்...

இந்திய ஆட்சியாளர்கள் பழங்குடி மக்கள் மீது நடத்திவரும் கொலைவெறியாட்டப் போரை திட்டமிட்டு மூடிமறைத்து, நக்சல்பாரி புரட்சியாளர்களைப் பயங்கரவாதிகளாகவும் கொலைகாரர்களாகவும் இழிவுபடுத்தி தமிழக செய்தி ஊடகங்கள் அவதூறு செய்துவரும் நிலையில், ஆளும் கும்பல் நடத்திவரும் நக்சல் வேட்டையின் உள்நோக்கத்தையும், மறுகாலனியாதிக்க எதிர்ப்புப் போராட்டங்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டிய அவசியத்தை விளக்கியும், ‘‘பழங்குடியினர்-மீனவர்கள்-விவசாயிகள் மீதான போர்தான், அரசு தொடுத்துள்ள நக்சல் ஒழிப்புப் போர்!’’ என்ற முழக்கத்துடன், பல்வேறு வடிவங்களில் நக்சல்பாரி புரட்சிகர அமைப்புகள் தமிழகமெங்கும் கடந்த இரு மாதங்களாகத் தொடர்ந்து சூறாவளிப் பிரச்சார இயக்கத்தை நடத்தி வருகின்றன.

கடந்த பிப்ரவரி மாதத்தில், பு.மா.இ.மு. தோழர்கள் திருச்சி சட்டக் கல்லூரி வாயிலில் பழங்குடியினர் போல வேடமிட்டு, மக்கள் மீது போர் நடத்தும் கொலைகார ப.சிதம்பரத்தை அம்பலப்படுத்தியும், இக்கொலைவெறியாட்டப் போரை வீழ்த்த அணிதிரளுமாறு அறைகூவியும் பிரச்சாரம் செய்தனர். ‘‘நாங்கள்தான் இந்திய அரசால் குற்றம் சாட்டப்படும் பயங்கரவாதிகள்!’’ என்ற முழக்க அட்டைகளை ஏந்தி தோழர்கள் நடத்திய இந்தக் கூட்டம், மாணவர்களால் பெருத்த வரவேற்புடன் ஆதரிக்கப்பட்டது. பெண்கள் விடுதலை முன்னணியினர், இளம் தோழர்களுக்கு பழங்குடியினர் போல வேடமிட்டு திருச்சி மையப் பேருந்து நிலையத்தில் துண்டுப் பிரசுரங்களுடன் பிரச்சாரம் செய்தனர். ஆச்சரியத்துடன் பார்த்த பொதுமக்கள், எதற்காக இந்தப் பிரச்சாரம் என்பதை ஆர்வத்துடன் அறிந்து, இப்பிரச்சார இயக்கத்தை வீச்சாக நடத்துமாறு உற்சாகப்படுத்தி ஆதரவளித்து நன்கொடையும் அளித்தனர்.


திருச்சியில்...

திருவாரூர் நகரில் பு.மா.இ.மு.வினர் சைக்கிள் ரிக்ஷாவில் பெரிய முழக்கத் தட்டிகளுடன் வீதிவீதியாகப் பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டனர். பட்டுக்கோட்டை வட்டாரத்தில், பட்டுக்கோட்டை நகரம், மதுக்கூர், அதிராம்பட்டினம், முத்துப்பேட்டை, தம்பிக்கோட்டை முதலான பத்துக்கும் மேற்பட்ட பகுதிகளில் வாகனங்கள் மூலம் தெருமுனைத் தொடர் பிரச்சார இயக்கம் நடந்தது. உசிலம்பட்டி, மணப்பாறை, கோவில்பட்டி, விளாத்திகுளம், திருச்சி, ஓசூர், சென்னை என பல்வேறு பகுதிகளில் தொடர்ச்சியாகத் தெருமுனைப் பிரச்சாரக் கூட்டங்கள்; தஞ்சை, புதுச்சேரி, விழுப்புரம், திருவாரூர் முதலான நகரங்களில் புரட்சிகர-ஜனநாயக சக்திகளை அணிதிரட்டி கருத்தரங்கங்கள்; திருச்சி, வேலூர் பகுதிகளில் விரைவு இரயில் வண்டிகளில் பயணிகளிடம் பிரச்சாரம்; தமிழகமெங்கும் இப்புரட்சிகர அமைப்புகள் செயல்படும் பகுதிகளில் பேருந்துகள், கடைவீதிகள், ஆலைகள், அரசு அலுவலகங்கள், கல்லூரிகள், கூலித் தொழிலாளர்களும் மை தூக்கும் தொழிலாளர்களும் பணிபுரியும் பகுதிகள், குடியிருப்புகள் - என அனைத்து இடங்களிலும் இப்பிரச்சார இயக்கம் காட்டுத் தீயாகப் பற்றிப் படர்ந்தது. சென்னையிலும் ஓசூரிலும் ஆங்கிலம் மற்றும் இந்தி மொழிகளில் காட்டுவேட்டைக்கு எதிரான துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப்பட்டு பிரச்சாரம் செய்யப்பட்டன. குறிப்பாக, ஒரிசா, பீகார், சட்டீஸ்கர் முதலான வடமாநிலக்


மணப்பாறையில்...



திருச்சியில்...


திருவாரூரில்...



படிப்பகம்

www.padippakam.com









கூலித் தொழிலாளர்கள் மத்தியில் இந்தி மொழியில் அமைந்த துண்டுப் பிரசுரம் பெருத்த வரவேற்பைப் பெற்றது.



தஞ்சையில்...

இப்பிரச்சார இயக்கத்தின் மூலம் இந்திய அரசு நாட்டு மக்கள் மீது நடத்திவரும் கொலைவெறியாட்டப் போரையும் அதன் உள்நோக்கத்தையும் அறிந்த உழைக்கும் மக்கள், தம்மையும் இப்பிரச்சார இயக்கத்தில் இணைத்துக் கொள்ளுமாறு கோரி, நன்கொடை அளித்து ஆதரித்து வருகின்றனர். காட்டுவேட்டைக்கு எதிரான போராட்ட அரசியல், தமிழக உழைக்கும் மக்களின் நெஞ்சங்களில் தீக்கனலை மூட்டி வருகிறது. அது, மறுகாலனியாதிக்க எதிர்ப்பு எரிமலையாகக் கிளர்ந்தெழுவது நிச்சயம் என்பதை தொடரும் இப்பிரச்சார இயக்கம் நிரூபித்து வருகிறது.

— பு.ஜ.செய்தியாளர்கள்

## கொலைகார ப.சிதம்பரத்தின் கொடும்பாவி எரிப்பு! மே.வங்கத்தை உலுக்கிய பேரணி - ஆர்ப்பாட்டம்!

**மே.**வங்கம், ஒரிசா, ஜார்கந்து, சட்டிஸ்கர், பீகார் மாநில முதல்வர்களுடன் சேர்ந்து காட்டு வேட்டை இயக்கத்தை முன்னெடுத்துச் செல்வது பற்றி கலந்தாலோசனை செய்ய, கடந்த பிப்ரவரி 9-ஆம் தேதியன்று கொலைகார உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் கொல்கத்தா வந்தபோது, ''வேதாந்தாவின் கொலைகார அடியாள் ப.சிதம்பரமே திரும்பிப்போ!, டாடாவின் எடுபிடி புத்ததேவ் பட்டாச்சார்யாவே வெளியேறு!'', ''காட்டுவேட்டை என்ற பெயரில் தொடரும் நாட்டு மக்கள் மீதான போரை முறியடிப்போம்!'' என்ற முழக்கங்கள் கொல்கத்தா நகரெங்கும் எதிரொலித்தன. இக்கொலைகார-சதிகாரர்களை எதிர்த்துப் பல்வேறு அமைப்புகள் இணைந்து மாபெரும் ஆர்ப்பாட்டமும் பேரணியும் நடத்தின. பிரபல எழுத்தாளர் மகாஸ்வேதா தேவி உள்ளிட்டு, பல்வேறு அறிவுத்துறையினரும் மாணவர்களும் உழைக்கும் மக்களும் ஏறத்தாழ 2000-க்கும் மேற்பட்டோர் திரண்டு, கொல்கத்தாவின் கல்லூரி சதுக்கத்திலிருந்து நடத்திய இந்த ஆர்ப்பாட்டப் பேரணியை போலீ முற்றுகையிட்டுத் தடுத்தது. தடையை மீறி, போலீசின் அச்சுறுத்தல்களைத் துச்சமாக மதித்து புறப்பட்ட பேரணி எஸ்பிளனேடு மெட்ரோ ரயில் பாதை சந்திப்பில் நிறைவடைந்தது. அதைத் தொடர்ந்து நடந்த ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் கொலைகார ப.சிதம்பரம் மற்றும் புத்ததேவ் பட்டாச்சார்யாவின் கொடும்பாவிகள் எரிக்கப்பட்டன.




கொலைகார சிதம்பரத்தின் வருகையை எதிர்த்தும், உழைக்கும் மக்களைக் கொன்றொழிக்கும் நோக்கத்துடன் நடக்கும் சதியாலோசனைக் கூட்டத்தை எதிர்த்தும் மே.வங்க அரசு ஊழியர் சங்கம் (நபாபார்ஜே) தலைமைச் செயலகம் அருகே மிகப் பெரிய ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. தலைமைச் செயலக வாயிலை முற்றுகையிட்டு நடத்திய இந்த ஆர்ப்பாட்டத்தைக் கண்டு பீதியடைந்த கொலைகார ப.சிதம்பரம், பூனைப்படை பாதுகாப்புடன் பின்வாயில் வழியாக வெளியேறினார்.

நாட்டு மக்கள் மீது போர் நடத்தும் கொலைகார ஆட்சியாளர்களுக்கு எவ்வாறு 'வரவேற்பு' அளிக்க வேண்டும் என்பதை மே.வங்கம் வழிகாட்டியுள்ளது. அந்த வழியில் உழைக்கும் மக்கள் போராட்டத்தைத் தொடர வேண்டியதுதான் இன்றைய தேவையாக உள்ளது. ●



படிப்பகம்

www.padippakam.com



# அறிவுத்துறையினர் மீது பாயும் அரசு பயங்கரவாதச் சட்டம்

நக்சல் ஒழிப்பு நடவடிக்கை என்ற பெயரில் அர நடத்திவரும் காட்டு வேட்டை (ஆபரேஷன் கிரீன்ஹண்ட்) என்பது, நாட்டு மக்கள் மீது மறுகாலனியாக்கத்தை துப்பாக்கி முனையில் திணிக்கும் ஒரு பாசிசப் போர். அதை அம்பலப்படுத்துபவர்கள் யாராக இருந்தாலும், அர அவர்களைச் சகித்துக் கொள்ளாது. மனித உரிமைப் போராளி டாக்டர் பினாயக் சென்னும், காந்தியவாதி ஹிமான்ஷு குமாரும் மட்டுமல்ல; வேட்டை தீவிரமாவதைத் தொடர்ந்து இன்னும் பல முற்போக்கு - புரட்சிகர பத்திரிகையாளர்களும் மனித உரிமை இயக்கத்தினரும் அடுத்தடுத்து கைது செய்யப்பட்டு வதைக்கப்பட்டு வருகின்றனர்.

''பீப்பிள்ஸ் மார்ச்'' என்ற ஆங்கில பத்திரிகையின் வங்கப் பதிப்பின் ஆசிரியராகச் செயல்பட்ட 61 வயதான தோழர் ஸ்வபன்தாஸ் குப்தா, கடந்த பிப்ரவரி 2-ஆம் நாளன்று போலீ காவலிலேயே மரணமடைந்து விட்டர். அவரும் இப்பத்திரிகையின் வெளியீட்டாளரான சதானந்த சின்காவும் கடந்த அக்டோபர் 7-ஆம் தேதியன்று மிகக் கொடிய பாசிச கருப்புச் சட்டமான, சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் கீழ் (''ஊபா'' சட்டத்தின் கீழ்) மே.வங்க போலி கம்யூனிஸ்டு அரசால் கைது செய்யப்பட்டனர். சட்டவிரோதமான பத்திரிகை நடத்தியதாகவும் தடை செய்யப்பட்ட மாவோயிஸ்டு கட்சிக்கு ஆதரவாகச் செயல்பட்டதாகவும் அவர் மீது குற்றம் சாட்டப்பட்டது.

ஏற்கெனவே கேரள போலி கம்யூனிஸ்டு அர , மாவோயிஸ்டுகளுக்கு ஆதரவான பத்திரிகை என்று குற்றம் சாட்டி, ''பீப்பிள்ஸ் மார்ச்'' பத்திரிகையைத் தடை செய்து, அதன் ஆசிரியரான கோவிந்தன் குட்டியைக் கைது செய்தது. இருப்பினும் பத்திரிகை பதிவு குழுமம் இத்தடையை ஆகஸ்டு 7-ம் தேதியன்று நீக்கிவிட்டது. தோழர் கோவிந்தன் குட்டியும் விடுதலை செய்யப்பட்டார். மே.வங்கத்திலும் இப்பத்திரிகை பதிவு பெற்றுள்ளது. (அதன் பதிவு எண்: wb/ben/2004/15681). மே.வங்க அர ம் இதைத் தடைசெய்யவில்லை. இருப்பினும், சட்டவிரோதமான-தடைசெய்யப்பட்ட பத்திரிகையை நடத்தியதாக அவர் மீது பொய்க்குற்றம் சாட்டப்பட்டு, மிகக் கொடிய பாசிச சட்டமான ''ஊபா'' சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டார். அர க்கு எதிராகப் போர் தொடுக்க சட்டவிரோதமாக சதிகளில் ஈடுபட்டதாகவும், கொலை முயற்சியில் ஈடுபட்டதாகவும் அவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. பயங்கரவாத பயிற்சி முகாம்களைக் கட்டியமைக்க முயற்சித்தார், பயங்கரவாத அமைப்புக்கு ஆதரவாகச் செயல்பட்டார், மைய அரசால் தடைசெய்யப்பட்டுள்ள மாவோயிஸ்டு கட்சிக்கு ஆதரவாக பத்திரிகை நடத்தினார் என்றெல்லாம் குற்றச்சாட்டுகள் இட்டுக்கட்டப்பட்ட போதிலும், அவர் மீது இன்றுவரை போலீசார் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யவேயில்லை.

பாசிச ''ஊபா'' சட்டத்துக்குப் பலியான முதல் தியாகி: ''பீப்பிள்ஸ் மார்ச்'' பத்திரிகையின் வங்கப் பதிப்பின் ஆசிரியர் தோழர் ஸ்வபன்தாஸ்.



அக்டோபர் 7-ஆம் தேதியன்று கைது செய்யப்பட்டு, போலீ காவலில் விசாரணை என்ற பெயரில் சித்திரவதை செய்யப்பட்ட தோழர் ஸ்வபன்தாஸ் குப்தா, பிணை மறுக்கப்பட்ட நிலையில், கடந்த டிசம்பர் 17-ஆம் நாளன்று மருத்துவமனை



படிப்பகம்

www.padippakam.com


யில் சேர்க்கப்பட்டார். ''அரசாங்கம் அவரைப் புறக்கணித்து மரணத்தை விரைவுபடுத்தி விட்டது. மருத்துவமனையில் அவர் படுக்கை தரப்படாமல் தரையில் கிடத்தி வைக்கப்பட்டார். ஆஸ்த்துமா நோயும் இரத்தப் புற்றுநோயும் அவரை வதைத்த போதிலும், அவருக்கு உரிய சிகிச்சையோ, தேவையான இரத்தமோ அளிக்கப் படவில்லை'' என்கிறார், ஏ.பி.டி.ஆர். எனும் மனித உரிமை இயக்கத்தைச் சேர்ந்த ஜாதோ பத்ரா.

அரசின் ங்கத்துறை ஊழியராகப் பணியாற்றிவந்த தாஸ்குப்தா, நக்சல்பாரி பேரெழுச்சியைத் தொடர்ந்து வேலையைத் துறந்து நக்சல்பாரி ஆதரவு பிர ரங்களை யும் -ல்களையும் வெளியிட்டு வந்தார். பீப்பிள்ஸ் மார்ச் பத்திரிகையின் வங்கப்பதிப்பின் ஆசிரியராகச் செயல்பட்டு வந்தார். அவரது மரணச் செய்தியறிந்து அறிவுத்துறையினரும் மனித உரிமை இயக்கத்தினரும் புரட்சிகர-ஜனநாயக சக்திகளும் திரண்டு, ''பாசிச ஊபா சட்டத்துக்குப் பலியான முதல் தியாகி!'' என்ற முழக்கத் தட்டிகளுடன் மௌன ஊர்வலம் நடத்தி, அவரது உடலை அடக்கம் செய்து அஞ்சலி செலுத்தினர்.

மே.வங்கத்தை ஆளும் போலி கம்யூனிச அர எத்த கையதொரு கொடிய அர என்பதற்கும், பாசிச கருப்புச் சட்டங்களை எதிர்ப்பதாக நாடகமாடிக் கொண்டு எவ்வாறு அதன் அடியாளாகச் செயல்படுகிறது என்பதற்கும் தோழர் ஸ்வபன்தாஸ் அவர்களது மரணமே சாட்சி.

உத்திரப்பிரதேச மாநிலத்தில், கடந்த நான்காண்டுகளாக இந்தி மொழியில் ''தஸ்தக் நை சமய் கி'' என்ற மாத இதழை நடத்திவரும் சீமா மற்றும் அவரது கணவர் விஸ்வ விஜய் ஆசாத் ஆகியோர் ''ஊபா'' சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தப் பத்திரிகை சட்டபூர்வமாக இந்தியப் பத்திரிகை பதிவாளரிடம் பதிவு பெற்றுள்ளது. பி.யு.சி.எல் எனும் மனித அமைப்பின் உ.பி.மாநிலச் செயலாளராக சீமா செயல்பட்டு வந்தார். அவரது கணவரான ஆசாத் ''இன்குலாபி சத்ர மோர்ச்சா'' எனும் மாணவர் இயக்கத் தலைவராவார். இவர்கள் டெல்லிக்குச் சென்றுவிட்டுத் திரும்பும்போது, அலகாபாத் ரயில் நிலையத்தில் அதிரடிப்படை போலீசாரால் பிப்ரவரி 6-ஆம் தேதியன்று கைது செய்யப்பட்டனர். இவர்கள் தவிர, கோர்காப்பூரில் ஆஷா என்பவரையும் கான்பூரில் 8 பேரையும் சிறப்பு அதிரடிப் படை கைது செய்துள்ளது. இவர்கள் அனைவரும் மாவோயிஸ்டு பயங்கரவாதிகள் என்று குற்றம் சாட்டப்பட்டு ''ஊபா'' சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர். நக்சல்பாரி தீவிரவாதிகள், அர க்கு எதிராகப் போர் தொடுத்தனர் என்றெல்லாம் இவர்கள் மீது பொய்க் குற்றம் சாட்டப்பட்டு மிகக் கொடிய பாசிச கருப்புச் சட்டமான ''ஊபா'' சட்டத்தின் கீழ் கைது செய்யப் பட்டுள்ளனர்.

''தஸ்தக் நை சமய் கி'' பத்திரிகை, போலி மோதல்களில் அப்பாவி மக்கள் கொல்லப்படுவதையும், குறிப்பாக கமலேஷ் சௌதாரி என்ற நக்சல்பாரி தலைவர் ட்டுக் கொல்லப்பட்டதையும் எதிர்த்தது. தேசிய மனித உரிமைக் கமிசன், அரசின் கைப்பாவையாகச் செயல்படுவதை விமர்சித்து எழுதி வந்தது. அலகாபாத் மற்றும் கௌசாம்பியில் சட்டவிரோத மணல் கொள்ளையர்களையும் இவர்களின் கூட்டாளிகளான அரசியல்வாதிகளையும் அம்பலப்படுத்தியது. அலகாபாத் போலீஸ் இயக்குனர், இப்பகுதியில் எவ்விதத் தொழிலாளர் போராட்டமும் கூடாது, தொழிலாளர்கள் தமது தோழர்களுக்கு செவ்வணக்கம் தெரிவிக்கக் கூடாது என்றெல்லாம் தன்னிச்சையாக தடைவிதித்து முன்னணியாளர்களை ஒடுக்குவதை எதிர்த்து எழுதியது. இ.பொ.க. (மா-லெ) புதிய ஜனநாயகம் குழுவின் உள்ளூர் தலைவரைப் போலீ கைது செய்ததையும், நந்தா கிராமத்தில் அக்கட்சியின் அலுவலகத்தைத் தீயிட்டதையும் அம்பலப்படுத்தியது. இவற்றுக்குப் பழிவாங்கும் நோக்கத்துடனேயே நக்சலைட்டு-மாவோயிஸ்டு பூச்சாண்டி காட்டி, இப்பத்திரி ஆசிரியர் மற்றும் வெளியீட்டாளர் மீது ''ஊபா'' சட்டம் ஏவிவிடப்பட்டுள்ளது. இச்சட்டவிரோத கைதைக் கண்டித்து லக்னோ நகரில் பி.யு.சி.எல் அமைப்பினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர். மகசேசே விருது பெற்ற பிரபல சமூகசேவகருமான சந்தீப் பாண்டே இக்கைதுகளைக் கண்டித்து, இது பாசிச அடக்குமுறை என்று சாடியுள்ளார்.


சட்டபூர்வ ''தஸ்தக்'' இதழைப் படிக்கும், ஓய்வு பெற்ற தொழிலாளர்துறை ஆணையரும் கைது செய்யப்பட்டுள்ள சீமாவின் தந்தையுமான சிறீவத்சவா.

அறிவுத்துறையினர் ஆதரவு தருவதாலேயே மாவோயிஸ்டுகளுக்கு எதிரான போரை முன்னெடுத்துச் செல்ல முடியவில்லை என்று கூறும் ப.சிதம்பரம், அறிவுத்துறையினரின் வாயை அடைத்து முடக்கத் துடிக்கிறார். அதனாலேயே அரசை விமர்சித்து எதிர்க்கும் அறிவுத்துறையினர் யாராக இருந்தாலும், அவர்கள் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டு பாசிச ''ஊபா'' சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு வதைக்கப்படுகின்றனர். இந்தப் போர், நக்சல்பாரிகளுக்கு எதிரான போர் மட்டுமல்ல; இது நாட்டு மக்களுக்கு எதிரான போர் என்பதைத்தான் இந்தக் கைது நடவடிக்கைகள் நிரூபிக்கின்றன.

● தனபால்



படிப்பகம்

www.padippakam.com

# சி.பி.எம்.இன் பரிணாம வளர்ச்சி:

# முதலாளிகளே ஊழியர்களாக...

**புதுப் பணக்காரர்களை இரண்டாம் மட்டத் தலைவர்களாகக் கொண்டுள்ள சி.பி.எம். கட்சி சீரழிவில் புதிய பரிமாணத்தை எட்டியிருக்கிறது.**

போலி கம்யூனிஸ்டுகள் ஆளும் மே.வங்கத்தின் சிங்கூரில் பாலாய் சாபுய், திவாகர் கோலே ஆகியோர் அண்டை வீட்டுக்காரர்கள். 1970-களில் பீடி ற்றும் தொழிலாளிகளாக இவர்கள் வறுமையில் வாடினர். பாலாய் சாபுய், சி.பி.எம். கட்சியில் சேர்ந்து ஹூக்ளி மாவட்ட விவசாய சங்கத் தலைவராக உயர்ந்தார். அவர் அர போக்குவரத்துத் துறையின் மாவட்டச் செயலாளராகவும் பதவி வகித்தார். இம்மாவட்டத்தின் அனைத்து வாகனங்களுக்கும் உரிமம் - பர்மிட் வழங்கும் பொறுப்பு அவருக்கு அளிக்கப்பட்டது. பின்னர் அவர் சிங்கூரில் அரசின் நிலக் கையகப்படுத்தல் திட்டத்தில் முக்கிய பங்கு வகித்தார். இன்று அவருக்கு சிங்கூரில் இரண்டு அடுக்கு மாடி வீடு உள்ளது. போலேரோ ஜீப்பில் வலம் வரும் அவர் இன்று இப்பகுதியில் முக்கியத் தலைவராவார்.

பாலாய் சாபுய்யின் பக்கத்து வீட்டுக்காரரான திவாகர் கோலே இன்னமும் பீடி ற்றும் தொழிலாளியாகத் தான் வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருக்கிறார். ‘‘நான் இன்னமும் வறுமையில்தான் உள்ளேன். ஆனால், எனது பக்கத்து வீட்டுக்காரராக இருந்தவர், இன்று பெரிய வீடும் காரும் கொண்டவராக வளர்ந்திருப்பது எனக்குப் பெருமையளிக்கிறது. ஒரு பீடி ற்றும் தொழிலாளியும் முன்னேற முடியும் என்பதை பாலாய் சாபுய் நிரூபித்துக் காட்டியிருக்கிறார்’’ என்று அவர் மகிழ்ச்சியுடன் கூறுகிறார். அப்பாவித் தொழிலாளியான திவாகர் கோலேவுக்கு, சாபுய்யின் சட்டவிரோத வருமானம் பற்றிய உண்மைகள் தெரியவில்லை. இன்று மே.வங்க சி.பி.எம். கட்சியில் பாலாய் சாபுய் போன்ற புதுப் பணக்காரர்கள் தான் இரண்டாம்மட்டத் தலைவர்கள்.

ஹிமான் தாஸ் என்பவர் மே.வங்க சி.பி.எம். கட்சியின் நந்திகிராம - கேஜோரி வட்டாரக் கமிட்டியின் செயலாளர். மாவட்டக் கமிட்டியின் உறுப்பினராகவும் உள்ள இவர், கட்சியிடமிருந்து மாதந்தோறும் பெறும் பராமரிப்புத் தொகை ரூ. 1,500. இது தவிர, அரசின் மாவட்ட மேலாண்மைக் குழுவிலும் இவர் அங்கம் வகித்து ரூ. 1,500 ஊதியமாகப் பெறுகிறார். ஆக மொத்தம் இவரது மாதந்திர வருமானம் ரூ. 3,000.

உள்ளாட்சித் திட்டங்களுக்காக மைய அர ஒதுக்கிய நிதியை ஏப்பம் விட்டு வளர்ந்த இந்தப் ‘பாட்டாளி வர்க்கத் தோழர்’, கேஜோரியில் குளிர்பதனச் சாதனம் பொருத்தப்பட்ட மாடி வீடும், ஆடம்பரக் காரும், மோட்டார் சைக்கிளும் வைத்திருக்கிறார். கோடீ வரரான இவர் கடந்த ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் நந்திகிராமத்தில் விவசாயிகளும் பழங்குடி மக்களும் நடத்திய பேரெழுச்சியில் அம்பலப்பட்டுப் போனார். விவசாயிகள் அவரது வீட்டை அடித்து நாசப்படுத்தியதும், அலறியடித்துக் கொண்டு ஓடிப்போன தாஸ், இன்றுவரை அந்தப் பக்கம் தலைவைத்துக் கூடப் படுக்கவில்லை.

இதுபோலவே, லால்காரில் வேலையில்லாத இளைஞராக கட்சியில் சேர்ந்து, பின்னர் வட்டாரக் கமிட்டிச் செயலாளராக உயர்ந்த அனுஜ் பாண்டே என்பவருக்கு, கட்சியிடமிருந்து மாதந்தோறும் ரூ.1,500 பராமரிப்புத் தொகையாகக் கிடைக்கிறது. ஊரக வேலைவாய்ப்பு, வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்காக மைய அர ஒதுக்கிய நிதியை, இவர் அதிகார வர்க்கத்தோடு கூட்டுச் சேர்ந்து ஏப்பம் விட்டு, கோடீ வரராக உயர்ந்து ஆதிக்கம் செலுத்தி வந்தார். பழங்குடியினர் நிறைந்த லால்காரில் 20 ஏக்கர் பரப்பளவிலான நிலத்தின் அதிபராக உள்ள அவர், மிகப் பெரிய மாடி வீட்டை ஈராண்டுகளுக்கு முன்பு கட்டியுள்ளார். குளிர்சாதன வசதியும் ஆடம்பரச் சாதனங்களும் நிறைந்த இந்த வீடு பழங்குடி மக்களின் பேரெழுச்சியில் முற்றுகையிடப்பட்டு அடித்து நொறுக்கப்பட்டது. ‘‘ஓலைக் குடிசைகளும் ஏழ்மையும் நிறைந்த இப்பகுதியில் இப்படியொரு ஆடம்பர வீட்டைக் கட்டிக் கொண்டு வாழ்ந்தவர் ஒரு கம்யூனிஸ்டுதானா?’’ என்று கேட்கிறார் இப்பகுதியைச் சேர்ந்த அதே சி.பி.எம். கட்சியின் எம்.எல்.ஏ. பழங்குடியினரின் பேரெழுச்சியின் போது தப்பியோடிய இந்த சி.பி.எம். தலைவர், இன்று வரை இந்தப் பகுதிக்குத் திரும்பவேயில்லை.



திரிணாமுல் காங்கிர க் கட்சி ஊழியர்களைக் கொன்ற குற்றத்திற்காக, மையப் புலனாய்வுத் துறையால் கைது செய்யப்பட்ட சி.பி.எம் கட்சியின் மேற்கு மித்னாபுர் மாவட்டக் கமிட்டி உறுப்பினர் தபன் கோஷ்.

லால்காரிலும் நந்திகிராமத்திலும் சி.பி.எம். தலைவர்களின் யோக்கியதை இப்படியிருக்க, ஹால்டியா நகரி



படிப்பகம்

www.padippakam.com

யத்திலோ இக்கட்சியின் தலைவர்கள் நவீன கோடீ வரர்களாக வலம் வருகின்றனர். ஹால்டியா ஊராட்சி மன்ற உறுப்பினரான எஸ்.கே. முசாபர், வறுமை காரணமாக பள்ளிக் கல்வியைத் தொடர முடியாமல், 1970-களில் ஹால்டியா துறைமுகத்தில் கூலித் தொழிலாளியாக வேலைக்குச் சேர்ந்தவர். இன்று இவர் ஹால்டியா துறைமுகத் தொழிலாளர் சங்கத்தைக் கட்டுப்படுத்துபவராக வளர்ந்துள்ளார். மேலும், இவர்தான் இத்துறைமுகத்தில் மிகப்பெரிய ஒப்பந்ததாரரர். இவரிடம் இன்று 1,500 கூலித் தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர். ஹால்டியா நகர் மன்ற ஊழியர் என்ற முறையில் இவருக்குக் கிடைக்கும் வருமானத்தைவிட, 'கம்யூனிஸ்டு' என்ற முறையில் இவர் நடத்தும் ஒப்பந்தத் தொழில் மூலம் கிடைக்கும் வருமானம்தான் மிகப் பெரியது என்று உள்ளூர் காங்கிரக் கட்சியினரே பரிகசிக்கும் அளவுக்கு, இவரது வளர்ச்சி பிரமிக்க வைக்கிறது.

முசாபரின் ஒரு மகன், தந்தையின் ஒப்பந்தத் தொழிலை மேற்பார்வையிடுகிறார். மற்றொரு மகனோ லண்டனில் படிக்கிறார். இன்னொரு மகனோ, தனது ஆடம்பர கார்களை வேகமாக ஓட்டிச் சென்று பிரமிக்க வைக்கிறார். ''இதிலென்ன தவறு? ஒரு கம்யூனிஸ்டு, முதலாளியாக அல்லது தொழில் முனைவோராக இருக்கக் கூடாது என்று என்று எங்கே எழுதி வைத்திருக்கிறார்கள்? இவையெல்லாம் விரக்தியடைந்தவர்களின் வெற்று பேச்கள்!'' என்று சாடுகிறார் திருவாளர் முசாபர். ''வெறுமனே வளர்ந்த முதலாளிகள் மட்டுமல்ல; நாங்கள் பலருக்கு வேலைவாய்ப்பை உருவாக்கிக் கொடுத்திருக்கிறோம். நாங்கள்தான் உண்மையான கம்யூனிஸ்டுகள். பொறாமைப்படுவோர் பொறாமைப் படட்டும்'' என்கிறார் 'கம்யூனிச' முதலாளி முசாபர்.

அசோக் பட்நாயக் என்பவர் தொடக்கப்பள்ளி ஆசிரியராக இருந்தபோது கட்சியில் சேர்ந்தார். பின்னர், ஆசிரியர் பணியிலிருந்து விலகி கட்சியில் முழுநேர ஊழியரான அவர், ஹால்டியா ஊராட்சியின் கூட்டுறவுச் சங்கத் தலைவராகவும், பின்னர் ஹால்டியா நகர வளர்ச்சிக் குழுமத்தின் தலைவராகவும் உயர்ந்தார். இன்று இவர்தான் ஹால்டியாவில் மிகப் பெரிய கோடீ வர ஒப்பந்ததாரரர். இவர் பயன்படுத்தாத கார்களே

## சி.பி.எம். கட்சியில் ஒழுங்கு நடவடிக்கையாம்! கேழ்வரகில் நெய் வடிகிறதாம்!

''கட்சியில் ஊழலும் அதிகாரத்துவமும் பெருகிவிட்டது. கட்சிக்குள்ளும் வெளியிலும் கட்சியின் முக்கிய தலைவர்களைப் பற்றியும் உள்ளூர் தலைவர்கள் பற்றியும் புகார்கள் வந்துள்ளன. கட்சியில் நிலவும் கம்யூனிச விரோத பண்புகளை ஒழிக்க கட்சி முழுவதும் சீர்செய் இயக்கம் தொடங்கப்பட வேண்டும். இதற்கென ஒரு தனி அமைப்பு உருவாக்கப்படும். அந்த அமைப்பிடம் கட்சி ஊழியர்கள் மட்டுமின்றி கட்சிக்கு வெளியிலுள்ள பொது மக்களும் புகார் கொடுக்கும் வகையில் அந்த அமைப்பு இயங்கும். இப் புகார்களின் அடிப்படையில் விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்கப்படும்'' என்று கடந்த பிப்ரவரி 4 முதல் 6-ஆம் தேதிவரை நடந்த சி.பி.எம். கட்சியின் மத்தியக் கமிட்டி கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.




ஏற்கெனவே ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப் பல கட்டுப்பாட்டுக் குழுக்கள் இருந்தபோதிலும், இப்படிப் புதியதொரு குழுவுக்கான அவசியத்தை விளக்கும் போது, குற்றச்சாட்டுக்குள்ளான நபர்களே மேல் மட்டக் கமிட்டிகளில் இருந்ததால் அவர்கள் மீது நடவடிக்கை ஏதும் எடுக்க இயலவில்லை எனவும், இந்தப் புதிய குழுவின் மூலம் கட்சியின் தலைமை முதல் தொண்டர் வரை அனைவரையும் விசாரித்து ஒழுங்கு நடவடிக்கை எடுக்க முடியும் எனவும் சி.பி.எம். கட்சியின் பொதுச் செயலாளர் பிரகாஷ் காரத் கூறியுள்ளார்.

இத்தகைய அமைப்பு உருவாக்கப்படுமா, இல்லையா என்பது தெரியவில்லை. ஆனால், கட்சியில் ஊழல் பெருகிவிட்டதையும் புதுப் பணக்கார கும்பல்கள் தலைவர்களாக வலம் வருவதையும் கண்டு அதிருப்தி பெருகியிருக்கிறது என்பதையும் சி.பி.எம். தலைமையால் மூடி மறைக்க முடியவில்லை. தேர்தல்களில் தோல்வி அடைந்ததற்கு சி.பி.எம்.மின் சந்தர்ப்பவாத அரசியல் மட்டும் காரணமல்ல; அதன் உள்ளூர் தலைவர்கள் ஆடம்பரமாக வாழ்வதைக் கண்டு உழைக்கும் மக்கள் அக்கட்சியை வெறுத்தொதுக்குவதும் முக்கிய காரணமாகும்.

சி.பி.எம். கட்சியினர் ஊழலில் ஊறித்திளைப்பது ஏதோ இன்று-நேற்று நடைபெறும் விசயமல்ல. அவர்கள் நாடாளுமன்றப் பதவிக்கான சாக்கடையில் பயணிக்க ஆரம்பித்தவுடனேயே இதுவும் தொடங்கிவிட்டது. லாவ்லின் புகழ் பினாரயி விஜயன், திருப்பூரில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களின் உழைப்பை முதலாளிகளிடம் பணயம் வைத்துக் கோடீஸ்வரராக உயர்ந்த கோவிந்தசாமி என கருப்பட்டிப் பானையில் கையை நனைத்து நக்க ஆரம்பித்த 'காம்ரேடுகளின்' பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. உண்மையில் சி.பி.எம். கட்சியில் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டால், பெரும்பான்மையான கட்சிப் பிரமுகர்கள் மீதும் நடவடிக்கை எடுத்து, ஒட்டு மொத்தக் கட்சியையுமே கலைக்க வேண்டியதாகிவிடும். அதனால்தான் இப்போது களை எடுக்கப் போவதாக கட்சித் தலைமை பம்மாத்து செய்து மக்களையும் அணிகளையும் ஏய்த்து வருகிறது. ●



படிப்பகம்

இல்லை எனுமளவுக்கு, ''இந்தியாவின் கோடீ வர கம்யூனிஸ்டு இவர்தான்'' என்று சி.பி.எம். கட்சி ஊழியர்களே காறி உமிழ்கின்றனர்.


ஆனந்த பேரா என்பவர் 1970-களில் வறுமை காரணமாக ஹால்டியாவில் குடியேறி கூலி வேலை செய்து வந்தார். பின்னர் கட்சியில் சேர்ந்து முக்கிய பிரமுகராக உயர்ந்த அவர், இன்று ஹால்டியா துறைமுகத்தின் இன்னுமொரு மிகப் பெரிய ஒப்பந்ததாரராக உயர்ந்துள்ளார். சி.பி.எம். தலைவர்களான இவர்கள் இன்று வெற்றிகரமான முதலாளிகளாகவும் வலம் வருகின்றனர். ''இவர்கள் கம்யூனிசம் என்பதற்கான பொருளையே இன்று மாற்றி விட்டனர்'' என்று குமுறுகிறார் பெயர் குறிப்பிட விரும்பாத ஒரு சி.பி.எம். உள்ளூர் தலைவர்.

மேற்கு மித்னாபூர் மாவட்டக் கமிட்டி உறுப்பினர்களான தபன்கோஷ் மற்றும் க்கூர் அலி ஆகியோர் கார் பெட்டா வட்டாரத்தின் மிகக் கொடிய குண்டர்படைத் தலைவர்கள். இவர்கள் பத்தாண்டுகளுக்கு முன்பு சோட்டாங்காரியா, பிர்பும் ஆகிய இடங்களில் 11 திரிணாமுல் காங்கிர ஊழியர்களை அடித்துக் கொன்று உயிருடன் எரித்த வழக்கில் மையப் புலனாய்வுத் துறையால் கைது செய்யப்பட்டனர். பின்னர் சி.பி.எம். கட்சி மற்றும் ஆட்சியின் தலையீட்டின் காரணமாக, குற்றம் நிரூபிக்கப்படவில்லை என்று விடுவிக்கப்பட்டனர். இன்றும் இவர்கள்தான் இவ்வட்டாரத்தின் 'மாவீரன்'கள். இவர்களது ஆதரவு இல்லாமல் எந்த சி.பி.எம். அமைச்சரும் தேர்தலில் வெற்றி பெறவே முடியாது எனுமளவுக்கு, இவர்களது மகாத்மியம் புகழ் பெற்றுள்ளது. இதனாலேயே, இவர்கள் மீது பல்வேறு புகார்கள் வந்த போதிலும் கட்சி ரீதியாகக் கூட இவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாமல் கட்சித் தலைமை அஞ்சுகிறது என்கிறார் உள்ளூர் சி.பி.எம். தலைவர் ஒருவர். வெறும் குண்டர்படைத் தலைவர்களாக மட்டுமல்லாமல், இவர்கள் உருளைக்கிழங்கு வர்த்தகத்தைக் கட்டுப்படுத்தும் பெருமுதலாளிகளாகவும் வளர்ந்துள்ளனர்.

முதலாளித்துவ காம்ரேடு லக்ஷ்மண் சேத்: பல லட்ச ரூபாய் மதிப்புள்ள கார்களில் உலா வரும் சி.பி.எம். கட்சியின் புதுப் பணக்காரத் தலைவர்.



மே.வங்க சி.பி.எம். கட்சிச் செயலாளரான பீமன் போஸ், ''கம்யூனிச விரோத நடவடிக்கைகளிலிருந்து கட்சியின் சிறந்த தலைவர்கள் விலகி நிற்க வேண்டும். கட்சி எதிர்கொண்டுள்ள மிகப் பெரிய சவால் இதுதான்'' என்கிறார். இதை எப்படிச் செயல்படுத்துவது என்பது தான் பிரச்சினை. கட்சியின் இன்றைய இளம் தலைவர்களோ புதுப்பணக்கார கம்யூனிஸ்டுகளாகிவிட்டனர். ஹால்டியாவின் முன்னாள் எம்.பி.யான லக்ஷ்மண் சேத், மூர்ஷிதாபாத்தின் மெயினுல் ஹசன் ஆகியோர் 17 இலட்ச ரூபாய் மதிப்புள்ள ஆடம்பரக் கார்களில் வலம் வருகின்றனர். கட்சித் தலைமையும் இதைக் கண்டு கொள்வதில்லை. ஏனென்றால், 'மாவீரன்'களான இந்தக் காம்ரேடுகளின் தயவு இல்லாமல் சி.பி.எம். கட்சி தேர்தல் வெற்றிகளைச் சாதிக்கவே முடியாது.



லால்கார் பழங்குடி மக்களின் பேரெழுச்சியில் முற்றுகையிடப்பட்டு அடித்து நொறுக்கப்பட்ட சிவப்பு ஜமீன்தார் அனுஜ் பாண்டேயின் ஆடம்பர வீடு.
உள்ளே: கோடீ வர 'மார்க்சிஸ்டு' அனுஜ் பாண்டே.

இவையெல்லாம் வகைமாதிரிக்கு சில உதாரணங்கள்தான். முழுமையாக ஆராய்ந்தால் சி.பி.எம். முதலாளிகளைப் பட்டியலிடப் பக்கங்கள் போதாது. சீனாவின் கம்யூனிசப் போர்வையணிந்த நவீன முதலாளிகள், கம்யூனிஸ்டு கட்சி மாநாட்டுக்கு கார்களில் வந்திறங்கும் போது, சி.பி.எம்.கட்சித் தலைவர்களும் கார்கள்-பங்களாவுடன் அதன் வழியில் முன்னேறி வருகிறார்கள்.

இனி என்ன கவலை! நீங்களும் ஒரு முதலாளித்துவ காம்ரேடாக - கம்யூனிச கனதனவாக விரும்பினால், சி.பி.எம். கட்சியில் சேரலாம். கம்யூனிசம் பேசிக் கொண்டு நீங்களும் முதலாளியாகி முன்னேறலாம்.

சீ! இது என்ன துரோகத்தனம் என்று நீங்கள் காறி உமிழ்ந்துவிட்டு, ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கான புரட்சியில் பங்கேற்க விரும்பினால், நீங்கள் நக்சல்பாரி கம்யூனிசப் புரட்சியாளர்களுடன் அணிவகுக்கலாம்.

நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்?

● குமார்



படிப்பகம்

www.padippakam.com

# பூசணிக்காயைச் சோற்றில் மறைக்க முயலும் சி.பி.ஐ.

## ஷோபியன் சம்பவம் குறித்த சி.பி.ஐ. விசாரணை முடிவு, குற்றவாளிகளைக் காப்பாற்ற முயலுகிறது.

கொலை, பாலியல் வன்புணரச்சி போன்ற கிரிமினல் குற்றங்களில் ஈடுபடும் போலீக்காரனைத் தண்டிப்பதற்கு நீண்ட நெடிய போராட்டம் நடத்த வேண்டியிருக்கும் என்பது இன்று - ருச்சிகா வழக்கு பிரபலமான பிறகு - மெத்தப் படித்த அறிவுஜீவிகளுக்கும் புரிந்திருக்கும். அப்படிப்பட்ட போலீக்காரனோ, இராணுவச் சிப்பாயோ தீவிரவாதிகளை எதிர்த்துப் 'போராடும்' அதிரடிப் படைப் பிரிவைச் சேர்ந்தவனாக இருந்துவிட்டால், அவனது கிரிமினல் குற்றங்களும் மனித உரிமை மீறல்களும் கேள்விக்கு இடமில்லாதது ஆகிவிடும். காஷ்மீரிலும், சட்டிஸ்கரிலும், ஜார்கண்டிலும், வடகிழக்கு இந்திய மாநிலங்களிலும் இப்படிபட்ட -ற்றுக்கணக்கான வழக்குகளைக் காணமுடியும். அப்படிபட்ட வழக்குகளில் ஒன்றுதான் காஷ்மீர் மாநிலத்தின் தென்பகுதியில் உள்ள ஷோபியன் நகரில் கடந்த ஆண்டு நடந்த இரட்டைப் பாலியல் வன்புணர்ச்சி மற்றும் கொலைவழக்கு.

ஷோபியன் நகரைச் சேர்ந்த 22 வயதான கர்ப்பிணிப் பெண்ணாண நீலோஃபர் ஜானும், அவரது மைத்துனியும் 17 வயதான பள்ளி மாணவியுமான ஆஸியா ஜானும் கடந்த ஆண்டு மே 29 அன்று அவ்வூரின் ஒதுக்குப்புறத்தில் அமைந்துள்ள தங்களின் ஆப்பிள் தோட்டத்தைப் பார்வையிடக் கிளம்பிச் சென்றனர். அவ்விரு இளம் பெண்களும் இரவு வெகுநேரமாகியும் வீடு திரும்பாததால், அவர்களது குடும்பத்தாரும், அவ்வூர்ப் பொதுமக்களும் அப்பெண்களைத் தேடத் தொடங்கினர். அப்பெண்கள் வீடு திரும்பாதது பற்றி நீலோஃபர் ஜானின் கணவர் போலீசாரிடம் புகார் செய்திருந்ததால், போலீசாரும் பொதுமக்களோடு சேர்ந்து கொண்டு தேடத் தொடங்கினர். ஆனாலும், ஒருவராலும் அப்பெண்களின் நிலை பற்றி அறிய முடியவில்லை. அதேபொழுதில், மறுநாள் காலை 6 மணியளவில் அப்பெண்களின் இரு சடலங்களும், அவர்களின் ஆப்பிள் தோட்டத்திற்குச் செல்லும் வழியில் ஓடும் ராம்பி ஆரா என்ற சிற்றாரில் கிடந்தன. போலீசார் அவர்களின் சடலங்களை ஆற்றில் கண்ட மாத்திரத்திலேயே, அப்பெண்கள் ஆற்றில் மூழ்கி இறந்துவிட்டதாகக் கூறி வழக்கை முடித்துவிட முயன்றனர்.

முதல் நாளிரவு அந்தப் ஆற்றுப் பகுதியைச் சல்லடைப் போட்டுத் தேடியும் கிடைக்காத அவர்களின் உடல்கள், மறுநாள் அதிகாலையில் திடீரென ஆற்றில் கிடந்தது; போலீசார் எவ்வித விசாரணையுமின்றி அப்பெண்கள் ஆற்றில் மூழ்கி இறந்துவிட்டதாக முடிவுக்கு வந்தது; அப்பெண்கள் தங்களின் ஆப்பிள் தோட்டத்திற்குச் செல்லும் வழியில் பாதுகாப்புப் படையின் மூன்று முகாம்களைக் கடந்து செல்ல வேண்டிய இக்கட்டான சூழல் - இவை பொதுமக்களின் மனத்தில் சந்தேகத்தைத் தோற்றுவித்தன. அப்பெண்கள் பாதுகாப்பு படையினரால் கடத்தப்பட்டுப் பாலியல் வன்புணர்ச்சிக்கு உள்ளாக்கப்பட்டுக் கொல்லப்பட்டிருக்கலாம் என்று அந்நகரப் பொதுமக்கள் சந்தேகத்தை எழுப்பினர். போலீசார் அப்பெண்களின் சந்தேகத்திற்கிடமான மரணம் குறித்து விசாரிக்காமல், அவ்வழக்கை முடித்துவிடக் காட்டிய அவசரம் பொதுமக்களின் சந்தேகத்திற்கு மேலும் வலுவூட்டியது.

எனவே, ஷோபியன் நகரப் பொதுமக்கள் அப்பெண்களின் மரணம் குறித்து விசாரணை நடத்தக் கோரியும், குற்றவாளிகளை உடனடியாகக் கைது செய்யக் கோரியும் போராடத் தொடங்கினர். காஷ்மீர் மாநில அர அப்போராட்டத்தை ஒடுக்கக் காட்டிய வேகத்தில், -றில் ஒரு பங்கைக்கூட அப்பெண்களின் மரணம் குறித்த விசாரணையில் காட்டவில்லை. முறையான விசாரணை கோரிய பொதுமக்கள் தீவிரவாதிகளை ஆதரிப்பதாக அவதூறு செய்யப்பட்டனர். பொதுமக்கள் நடத்திய போராட்டத்தை ஒடுக்க போலீசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் -ற்றுக்கணக்கானோர் காயமடைந்ததோடு, நிஸார் அகமது என்ற சிறுவன் இறந்தும் போனான். இப்போராட்டத்தை ஆதரித்த சையத் ஷா கிலானி, ஷாபிர் ஷா, யாசின் மாலிக் , மிர்வாயிஸ் உமர் ஃபாரூக் ஆகிய தலைவர்கள் வீட்டுக் காவலிலும் சிறைச்சாலையிலும் அடைக்கப்பட்டனர்.

அப்பெண்களின் மரணமும், அரசின் அடக்குமுறையும் நாடெங்கும் அம்பலமான பிறகுதான், அப்பெண்கள் இறந்துபோய் எட்டு நாட்கள் கழிந்த பிறகுதான் காஷ்மீர் போலீசார் அவ்வழக்கு குறித்து முதல் தகவல் அறிக்கையினைப் பதிவு செய்தனர். அதன் பிறகு நடந்த இரண்டு பிரேதப் பரிசோதனை அறிக்கைகளும் முன்னுக்குப் பின் முரணாண தகவல்களை அளித்ததால், பொதுமக்களின் போராட்டம் மேலும் தீவிரமடைந்தது. இதன்பின், அம்மாநில அரசால் அமைக்கப்பட்ட நீதிபதி முஸாபர் ஜான் கமிட்டி, ''அப்பெண்கள் பாலியல் பலாத்காரப்படுத்தப்பட்டுக் கொல்லப்பட்டதற்கு ஏராளமான ஆதாரங்கள் இருப்பதாக''ச் ட்டிக்



படிப்பகம்

காட்டியதோடு, ''போலீசார், பிரேதப் பரிசோதனை நடத்திய மருத்துவ அதிகாரிகள், தடய அறிவியல் நிபுணர்களின் திறமையின்மையாலும், நிர்வாகக் குளறுபடிகளாலும் இந்த ஆதாரங்கள் அழிந்துபோய் விட்டதாக''க் குற்றம் மத்தியது. இதன் பிறகாவது, மாநில அர விசாரணையைத் தீவிரப்படுத்தி உண்மைக் குற்றவாளிகளைக் கண்டுபிடித்திருக்க வேண்டும்; ஆனால், இதற்கு மாறாக இவ்வழக்கு விசாரணை மையப் புலனாய்வுத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டது. போராடிய பொதுமக்களுள் ஒருவர்கூட மையப் புலனாய்வுத் துறையின் விசாரணையைக் கோரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.


நீலோஃபர் ஜானும், ஆஸியா ஜானும் மர்மமான முறையில் இறந்து போனதை முறையாக விசாரிக்கக் கோரி, ஷோபியன் நகரில் நடந்த ஆர்ப்பாட்ட பேரணி.
(கோப்புப் படம்)

மையப் புலனாய்வுத் துறை விசாரணையை ஏற்றுக் கொண்ட மறுநிமிடமே, அப்பெண்கள் பாலியல் வன்புணர்ச்சிக்கு ஆளாக்கப்பட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரியவில்லை எனக் கருத்துத் தெரிவித்தது. இக்கருத்து, இவ்விசாரணை மூலம் உண்மையைக் கண்டுபிடிக்கவா அல்லது மூடிமறைக்கவா என்ற சந்தேகத்தை காஷ்மீர் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியது. இம்மரணங்கள் குறித்துத் தற்பொழுது சி.பி.ஐ. அளித்துள்ள அறிக்கை காஷ்மீர் மக்களின் சந்தேகத்தை வலுப்படுத்துவதாகவே அமைந்துள்ளது. ''அவ்விரு இளம் பெண்களும் ஆற்றில் மூழ்கி இறந்து போனதாக'' சி.பி.ஐ. அளித்துள்ள அறிக்கையை, காஷ்மீர் மக்கள் மட்டுமல்ல, பல்வேறு மனித உரிமை அமைப்புகளும், அறிவுத்துறை வர்க்கத்தைச் சேர்ந்த பலரும்கூட முழுமையாக நம்ப மறுத்துள்ளனர்.

''சம்பவம் நடந்த அன்று ராம்பி ஆரா ஆற்றில் கழுத்தளவுக்கு மேல் தண்ணீர் ஓடியதாகவும், அப்பெண்கள் ஆற்றைக் கடக்க முயன்றபொழுதுதான் நீரில் மூழ்கி இறந்து போனதாக''க் கூறியுள்ள சி.பி.ஐ., இதற்கு ஆதாரமாகப் பல்வேறு சாட்சியங்களையும் குறிப்பிட்டுள்ளது. ஆனால், இப்பெண்களின் மரணம் குறித்து விசாரணை நடத்திய ஜனநாயக உரிமை இயக்கங்களுக்கான கூட்டுக் கமிட்டி, சம்பவம் நடந்த அன்று அந்த ஆற்றில் முழங்காலுக்குக் கீழ்தான் தண்ணீர் ஓடியிருக்கும்பொழுது, அப்பெண்கள் எப்படி மூழ்கி இறந்து போயிருக்க முடியும் என்ற கேள்வியை எழுப்பியிருக்கிறது. முஸாபர் ஜான் கமிட்டியிடம் சாட்சியம் அளித்துள்ள அர அதிகாரிகள், சம்பவம் நடந்த அன்று அந்த ஆற்றில் அதிகத் தண்ணீர் ஓடவில்லை எனக் கூறியிருப்பதை இக்கூட்டுக் கமிட்டி எடுத்துக் காட்டியுள்ளது. மேலும், இம்மரணங்கள் குறித்து நடத்தப்பட்ட முதல் பிரேதப் பரிசோதனை அறிக்கையிலும், நீரில் மூழ்கி இறந்து போனதற்கான ஆதாரம் எதுவுமில்லை என்றே தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் நடந்து நான்கு மாதங்கள் கழித்து, மூன்றாவது முறையாகப் பிரேதப் பரிசோதனை நடத்துவதற்காக அப்பெண்களின் சடலங்களைத் தோண்டியெடுத்த சி.பி.ஐ.யும், அதனால் நியமிக்கப்பட்ட மருத்துவ அதிகாரிகளும் சடலங்களைப் பார்த்த மாத்திரத்திலேயே, ''ஆஸியா ஜானின் பாலியல் உறுப்பிலுள்ள 'கன்னித் திரை' நல்ல நிலைமையில் இருப்பதாக'' அறிவித்தனர். விசாரணையின் முடிவு எப்படி அமையும் என்பதற்கான முன்னோட்டம் இது.

ஆனால், இச்சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்திய நீதிக்கான தந்திரமான பெண்கள் அமைப்பு, ''மிகவும் மெல்லிய சவ்வுப் படலமான கன்னித் திரை புதைக்கப்பட்டு நான்கு மாதங்கள் கழிந்த நிலையில் அழுகி சிதைந்து போயிருக்கும்'' எனத் தமக்கு பேட்டியளித்த பல்வேறு மருத்துவ மற்றும் தடய அறிவியல் நிபுணர்கள் கூறியதாகக் குறிப்பிட்டுள்ளது. ஆனால், சி.பி.ஐ.யோ, தனது அறிக்கைக்கு மறுப்பு தெரிவிப்பவர்களை அயோக்கியர்கள் என வசைபாடவில்லையே தவிர, அவர்களைப் பல்வேறு வழிகளில் அவமானப் படுத்தும் கீழ்த்தரமான வேலைகளில் இறங்கியிருக்கிறது. ''அவர்களுக்கு நவீனமான வழிகளில் தடய அறிவியல் சோதனைகள் நடத்தும் அறிவில்லை'' என மட்டை அடியாக அடித்துவிட்டது.

அவ்விரு பெண்களின் சடலங்களையும் முதல் பிரேதப் பரிசோதனை செய்து, ''அவர்கள் நீரில் மூழ்கி இறக்கவில்லை'' என அறிவித்த காஷ்மீரைச் சேர்ந்த அர மருத்துவர் பிலால், தற்பொழுது பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார். அச்சடலங்களை இரண்டாவது பிரேதப் பரிசோதனை செய்து, ''ஆஸியா ஜானின் தலையில் ஏற்பட்ட காயம் ஆற்றில் விழுந்ததால் ஏற்பட்டதில்லையென்றும், அதனால் அவர் இறந்து போகவில்லை என்றும்'' சாட்சியம் அளித்த மகப்பேறு மருத்துவர் நிகத் ஷஹீனும் தற்பொழுது தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். அது மட்டுமின்றி, ஆஸியா ஜான் பாலியல் பலாத்காரப்படுத்தப்பட்டுள்ளார் எனக் காட்டுவதற்காக மருத்துவர் நிகத் ஷஹீன் பல்வேறு



படிப்பகம்

www.padippakam.com

மோசடிகளில் ஈடுபட்டதாகவும் சி.பி.ஐ. குற்றம் மத்தியுள்ளது.

மேலும், மர்மமான முறையில் இறந்து போன நீலோஃபர் ஜானின் கணவர் உள்ளிட்டுப் பலரும் சி.பி.ஐ. விசாரணையின்பொழுது பிறழ் சாட்சிகளாக மாறிவிட்டனர். அப்பெண்கள் ஆற்றில் மூழ்கித்தான் இறந்து போனார்கள் எனக் காட்டுவதற்காகவே, சி.பி.ஐ. இவர்களை மிரட்டிப் பணிய வைத்திருக்கலாம் என்று மனித உரிமை அமைப்புகள் குற்றம் மத்தியுள்ளன.

இவ்விசாரணை முடிவை ஏற்க மறுக்கும் காஷ்மீர் மக்கள், இந்திய அரசைச் சாராத வேறு ஏதாவதொரு நடுநிலையான அமைப்பு இச்சம்பவம் பற்றி மறுவிசாரணை நடத்த வேண்டும் எனக் கோரி வருகிறார்கள். இந்த நியாயமான கோரிக்கையை ஏற்க மறுக்கும் இந்திய அரசும், தேசியவாதிகளும், ''பிணத்தின் மீது அரசியல் நடத்துகிறார்கள்'', ''மதவெறியையும் இனவெறியையும் தூண்டிவிடுகிறார்கள்'' என காஷ்மீர் மக்கள் மீது அவதூறுகளை அள்ளி வீசிவருகின்றனர். ''காஷ்மீர் முஸ்லீம்கள் ஆதாரமற்ற சந்தேகம் மூலம் ஷோபியன் சம்பவத்தைப் பெரிதுபடுத்திவிட்டதாகவும், அந்தச் சந்தேகத்தைக்கூட சி.பி.ஐ. விசாரணை தெளிவுபடுத்திவிட்டது'' எனவும் நிரூபிக்க இந்திய 'தேசியவாதிகள்' முயன்று வருகிறார்கள்.

சி.பி.ஐ., நேர்மையான, நடுநிலையான அமைப்பு என்பதே பார்ப்பன பாசிசக் கும்பல்கள் பரப்பிவரும் கட்டுக்கதைதான். அவ்வமைப்பு காங்கிரஸ் கும்பலின் கைத்தடியாக நடந்து கொண்டு வருவதற்கு எத்தனையோ ஆதாரங்களைக் காட்ட முடியும். போஃபார்ஸ் பீரங்கி ஊழல் வழக்கு உள்ளிட்டு எத்தனையோ வழக்குகளில் சி.பி.ஐ. அரசியல் சார்போடு நடந்து கொண்டுள்ளது; குவாட்ரோச்சி உள்ளிட்ட எத்தனையோ குற்றவாளிகளைத் தப்பவிட்டிருக்கிறது. சிறுமி ருச்சிகாவை மானபங்கப்படுத்திய போலீ உயர் அதிகாரி ரத்தோருக்கு இரண்டு மாத கால சிறைத் தண்டனை வாங்கிக் கொடுப்பதற்கு, சி.பி.ஐ. 16 ஆண்டுகள் வழக்கு நடத்தியதிலிருந்தே, அதனின் திறமையையும், நேர்மையையும் அவதானித்துக் கொள்ளலாம்.

காஷ்மீர் முஸ்லீம்கள் இந்திய இராணுவத்தை, துணை இராணுவப் படையினரை, தமது மாநிலப் போலீசாரைச் சந்தேகிக்க வலுவான காரணங்கள் உள்ளன. அவர்கள் அன்றாடம் இந்திய அரசுப் படையினரின் பயங்கரவாதத் தாக்குதல்களை, மனித உரிமை மீறல்களைச் சந்தித்து வரும்பொழுது, வேறு யாரைச் சந்தேகிக்க முடியும்? காஷ்மீரில் அமைதியான முறையில் நாடாளுமன்ற, சட்டமன்றத் தேர்தல்கள் நடைபெற்றதைக் காட்டி, அம்மக்கள் தீவிரவாதிகளைப் புறக்கணித்துவிட்டதாக இந்திய அரசு கூறிவந்தாலும்கூட, காஷ்மீரத்து முஸ்லீம்கள் மீது இந்திய அரசுப் படையினர் தொடுத்துவரும் பயங்கரவாதத் தாக்குதல்கள் இம்மியளவுகூடக் குறையவில்லை.

● சிறீநகரைச் சேர்ந்த 16 வயதான ஜாஹித் ஃபரூக் என்ற சிறுவன், கடந்த பிப்ரவரி மாதம் முதல் வாரத்தில் எல்லைப் பாதுகாப்புப் படையினரால் நடுத்தெருவில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டான். எல்லைப் பாதுகாப்புப் படையினரின் திமிரை எதிர்த்துக் கேள்வி கேட்டதுதான் அச்சிறுவன் செய்த தவறு. இப்படுகொலைக்குக் காரணமான அப்படையைச் சேர்ந்த உயரதிகாரியைக் காப்பாற்றுவதற்காக இப்பொழுது விசாரணை நாடகம் நடந்து வருகிறது. இப்படுகொலை நடந்ததற்கு ஒரு வாரம் முன்னர்தான் வாமிக் ஃபரூக் என்ற 14 வயது சிறுவனை, பாதுகாப்பு படையைச் சேர்ந்த ஒரு அதிகாரி கண்ணீர் புகை குண்டை வீசியெறிந்து கொன்றான். இப்படுகொலையைக் கண்டித்து நடந்த போராட்டங்களையடுத்து, அந்த அதிகாரி தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளான்.

ஜாஹித் ஃபரூக் என்ற சிறுவனை ஈவிரக்கமின்றிக் கொன்ற எல்லைப் பாதுகாப்புப் படை அதிகாரிகளையும், சிப்பாய்களையும் தண்டிக்கக் கோரி, சிறீநகரில் நடந்த பெண்கள் அமைப்புகளின் ஆர்ப்பாட்ட பேரணி.



● கடந்த ஆண்டு ஜூன் மாதம் தேசிய துப்பாக்கிப் படை அதிகாரிகளால் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட 16 வயது சிறுவன் பஷாரத் அகமது இன்று வரை வீடு திரும்பவில்லை. அச்சிறுவனைப் பிடித்துச் சென்ற மதியமே விடுவித்துவிட்டதாக அதிகாரிகள் புளுகி வருகின்றனர்.

● கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் தேசிய துப்பாக்கிப் படைப் பிரிவால் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட ஒன்பதாம் வகுப்பு படித்து வந்த 14 வயது சிறுவன் முஷ்டாக் அகமது மிர், சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்பட்டான். அதே ஆண்டில், மன்ஜூர் அகமத் பெய்க், ஃபயஸ் அகமது மிர் ஆகியோரும் கொட்டடியில் வைத்துக் கொல்லப்பட்டனர்.



படிப்பகம்

www.padippakam.com

● 2007-08-ஆம் ஆண்டில் மட்டும் 39 கொட்டடிக் கொலைகள் நடந்திருப்பதாகவும், விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டவர்களுள் 91 பேர் 'காணாமல்' போய்விட்டதாகவும் அம்மாநில மனித உரிமை ஆணையம் தெரிவித்திருக்கிறது. 2008-ஆம் ஆண்டில் பொது பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட 261 பேரில் பலரைக் குற்றமற்றவர்கள் என நீதிமன்றம் விடுவித்து விட்டாலும், விடுவிக்கப்பட்டவர்கள் அனைவரையும் மீண்டும் உடனடியாகவே வேறொரு குற்றச்சாட்டின் கீழ் பாதுகாப்புப் படையினர் கைது செய்து சிறையில் அடைத்து விட்டதாக அம்மாநிலத்தின் சட்ட அமைச்சரே ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார்.

காஷ்மீரில் அன்றாடம் நடக்கும் இத்தகைய மனித உரிமை மீறல்களைப் பட்டியல் போட்டு மாளாது. இப்படிபட்ட நிலையில் பல்வேறு சந்தேகங்களுக்கு இடமளிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ள சி.பி.ஐ. விசாரணை முடிவை காஷ்மீர் மக்கள் ஏற்றுக் கொள்ள மறுப்பதற்கு அவர்களுக்கு முழு உரிமையுண்டு. காஷ்மீரில் அரச் படையினர் நடத்திவரும் மனித உரிமை மீறல்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதாகவே, அந்த அட்டூழியங்களைத் தூண்டிவிடுவதாகவே சி.பி.ஐ.யின் முடிவு அமைந்திருப்பதாக மனித உரிமை அமைப்புகள்கூடக் குற்றம் மத்தி வருகின்றன.

இத்தகைய அர பயங்கரவாத அட்டூழியங்களை எதிர்த்துப் போராடினால், அதற்குப் பெயர் மு லீம் மதவெறியா? இத்தகைய அட்டூழியங்களைத் தேசிய ஒருமைப்பாடு என்ற பெயரில் நியாயப்படுத்தும் இந்து தேசியம் மட்டும் புனிதமானதா? இத்தகைய அட்டூழியங்களுக்கு நீதி வழங்காமல் காஷ்மீரில் அமைதியை நிலைநாட்டிவிட முடியாது; இந்து தேசியவெறியை, தேசிய இன ஒடுக்குமுறையை எதிர்த்து வரும் காஷ்மீர் மக்களின் யநிர்ணய உரிமைக்கான போராட்டமும் ஓய்ந்து விடாது.

● செல்வம்

# மராத்திய இனவெறி சிவசேனா உருவாக்கும் வில்லன்கள்!

## மராத்திய உரிமையின் பேரால் உழைக்கும் மக்களுக்கு எதிராக தாக்கரே குற்றக் கும்பலின் வெறியாட்டம்!

‘‘ஒரு ஹீரோவாக நீங்கள் மாற வேண்டுமானால் முதலில் தேவை ஒரு வில்லன். அல்லது, சில வில்லன்கள். ராமருக்கு ராவணன், எம்.ஜி.ஆருக்கு நம்பியார். இதிகாசத்திலும், திரைப்படத்திலும் மட்டுமல்ல, நிஜ வாழ்க்கையிலும் வில்லன்களும் ஹீரோக்களும் இருக்கிறார்கள். குறிப்பாக மார்க்கெட்டிங்கில்'' என்கிறார், நிர்வாகம் மற்றும் விற்பனைத் துறைகளுக்கான பயிற்சி வகுப்புகள் நடத்தும் எஸ்.எல்.வி. மூர்த்தி.

தேர்தல் சந்தையில் ஓட்டுப் பொறுக்குவதற்கும், தமது கிரிமினல் குற்றக் கும்பல் நடவடிக்கைகளுக்குக் கேடயமாகப் பயன்படுத்திக் கொள்வதற்கும் மராத்திய மக்களின் நலன்களைக் காக்கும் ஹீரோக்களாகக் காட்டிக் கொண்டு, நாற்பதாண்டுகளுக்கு முன்பு தமிழர்களையும் தற்போது வட இந்தியர்களையும் வில்லன்களாக சித்தரித்து, கிரிமினல் தாக்குதல் மற்றும் அடாவடி அரசியல் நடத்தி வருகின்றன, தாக்கரே குடும்பத்தினர் நடத்தும் சிவசேனா மற்றும் மராட்டிய நவநிர்மாண் சேனா ஆகிய அமைப்புகள்.

தாங்கள் தாம் உண்மையான இந்து தேசியவாதிகள் என்று சொல்லிக் கொண்டு இசுலாமியர்களையும், தாழ்த்தப்பட்ட மக்களையும் கொன்று குவித்தார்கள். அயோத்தி பாபர் மசூதி இடிப்பில் பகிரங்கமாக முன்னின்றதோடு, அதற்குப் பிந்திய 1992-93 ஆண்டு மும்பை இனப்படுகொலையையும் தொடர்ந்து மும்பை மற்றும் மரத்வாடா அம்பேத்கர் பல்கலைக்கழகப் பெயர் வைப்புக்கு எதிராக தாழ்த்தப்பட்ட மக்கள் மீதான படுகொலையையும் நடத்தினர். இம்மக்கள் இந்து தேசியத்துக்கு எதிரான வில்லன்கள் என்று சித்தரிப்பதுதான் சேனாக்களின் முக்கிய பிரச்சாரமாக உள்ளது.

இசுலாமியத் தொழிலதிபர்கள், வியாபாரிகளுக்கு — குறிப்பாக, கடத்தல் தொழிலில் செல்வாக்குச் செலுத்திய இசுலாமியர்களுக்கும் அவர்களுக்குப் பாதுகாப்பாக நின்ற முசுலீம் தாதாக்களுக்கும் போட்டியாக குஜராத்தி, மார்வாடிகளால் ஊட்டி வளர்க்கப்பட்ட கிரிமினல் தாதாக்களின் அரசியல்-அமைப்புத் தலைமைதான் சிவசேனா. இசுலாமிய தாதாக்களுக்கு எதிரான இந்துத் தாதாக்களின் தலைமை என்பதால் இந்து தேசியத்துடன் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டு ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. ஆகியவற்றின் இணைபிரியா கூட்டணி போட்டுக் கொண்டதோடு, காங்கிரசின் மராத்தா தலைவர்களுடன் இரகசியக் கூட்டும் அமைத்துக் கொண்டது.

மராட்டியத்தில் தேசிய இனப் பிரச்சினை, இனப்போராட்டம் நடத்துவதற்குரிய பெரிய பிரச்சினை நிலவுகிறது என்பதற்கான அடிப்படை கிடையாது. மராட்டிய மாநிலம் புறக்கணிக்கப்படுகிறது, பின்தங்கிப் போய்விட்டது, மராட்டியர்களின் உரிமைகள் பறிக்கப்பட்டிருக்கிறது என்று பெரிதாகச் சொல்வதற்கும் ஒன்றுமில்லை. நாட்டிலேயே தொழில், வர்த்தகம், முதலீடு, ஊடகம், நவீன தொழில் நுட்பம், கல்வி போன்றவற்றில் நீண்டகாலமாகவே நாட்டில் முதல்நிலை வகிக்கிறது. அந்த நிலை பறிபோய்விடும் என்ற நிலையும் இல்லை. பல தொழிற் துறையிலும் ஏகபோகம் வகிக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com



மகாராஷ்டிரா நவநிர்மாண் சேனாவைச் சேர்ந்த குண்டர்களால் தாக்கப்படும் வடநாட்டு இளைஞர்.

நாட்டின் பொருளாதாரம், ஊடக, தொழில் நுட்பத் தலைநகராக விளங்குகிறது. பண்ணை நிலப்பிரபுத்துவ சக்தி, குறிப்பாக கரும்பு-சர்க்கரை உற்பத்தி செய்யும் முதலாளித்துவ கும்பல் நாட்டிலேயே செல்வாக்குள்ள தாக விளங்குகிறது. இவைகள் பறிபோய் விடும் என்ற அச்சுறுத்தலும் கிடையாது.

மராட்டிய சேனாக்கள் மேற்கண்டவாறு ஆதிக்கம் வகிக்கும் மராட்டிய, குஜராத்தி, மார்வாடிகளை எதிர்த்து எதுவும் செய்யவில்லை. அவர்களுக்கு எதிராக மராட்டியர்களைத் திரட்டவும் இல்லை. இதற்கு மாறாக, வெறும் உடல் உழைப்பாளிகளான தமிழர்கள், மலையாளிகள், பீகார் - உ.பி. - ம.பி முதலிய இந்தி பேசும் மாநிலத் தொழிலாளர்களை வில்லன்களாகக் காட்டி மும்பையில் அவர்களின் குடியேற்றத்தால்தான் மராட்டியர்களுக்கான வேலைவாய்ப்பு பறிபோகிறது என்று இனவெறியூட்டுகிறார்கள்; அப்பிரிவினர்களைத் தாக்குகின்றனர். மராட்டியத்தில், குறிப்பாக மும்பையில் சம்பாதித்து வெளிமாநிலங்களில் முதலீடு செய்யப்படுவதாக புளுகுகிறார்கள். உண்மையில் வெளிமாநிலங்களிலிருந்து மராட்டியத்தில், குறிப்பாக மும்பையில் முதலீடு செய்வதும், அங்கு உற்பத்தி செய்து பிற மாநிலச் சந்தையில் வியாபாரம் செய்து லாபமடிப்பதும்தான் நடக்கிறது. இந்த சேனாக்களின் முதுகெலும்பாக மராட்டிய உழைக்கும் மக்கள் திரளவில்லை. நடுத்தர வர்க்க, உதிரித் தொழிலாளி அடியாள் பட்டாளம் மட்டுமே உள்ளது.

இந்த அடியாள் பட்டாளத்தை வைத்துக் கொண்டு பரபரப்பூட்டும் பல விவகாரங்களில் மராட்டிய சேனாக்கள் தலையீடு செய்கின்றன. பாகிஸ்தான், ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணிகள் இங்கு விளையாடுவதற்கும், மைக்கேல் ஜாக்சன் கலைநிகழ்ச்சி, சாருக்கான் போன்ற சில சினிமாக்காரர்கள் படங்களுக்கும் எதிர்ப்புத் தெரிவித்தனர். அவர்களை உருட்டி மிரட்டுவதும், பிறகு ஆதரவு தெரிவிப்பதும் அதன் மூலம் மும்பையில் தனது தாதாத்தன அதிகாரத்தை அங்கீகரிக்கவும் வைக்கின்றன.

மராட்டிய இனவெறி ஆதாயங்களைப் பங்கு போட்டுக் கொள்வதில் தாக்கரே குடும்பத்தில் பால்தாக்கரே மகனுக்கும் மருமகனுக்குமிடையே ஏற்பட்ட வாரிசுத் தகராறு காரணமாக, மராட்டிய நவநிர்மாண் சேனை உருவாகியது. இப்போது இந்த இரு சேனாக்களும் போட்டி போட்டுக் கொண்டு மராட்டிய இனவெறியைச் செயற்கையாகக் கிளப்பி விடுகின்றன. அதோடு நிற்காமல் நீண்டகாலமாக பால்தாக்கரேயும், அவரது வாரிசுகளும் மராட்டிய இனம் மற்றும் இந்துமதத்தின் பேரால் ஏராளமான சட்டவிரோத, கிரிமினல் குற்றங்கள் செய்கிறார்கள். ஆனாலும் காங்கிரசு, பா.ஜ.க. ஆகிய தேசியக் கட்சிகள் மட்டுமல்ல, நாட்டிலுள்ள உச்சநீதிமன்றம் உட்பட எல்லா நீதி-நிர்வாக அமைப்புகளும் அவர்களுக்குக் கீழ்படிந்து போகின்றன. அவர்கள் என்ன செய்தாலும் தக்க நடவடிக்கைகள் எடுப்பதில்லை.

இதன் இரகசியம் இதுதான்: காங்கிரசின் காந்தி-நேரு உருவாக்கிய இந்திய தேசியம், ஆர்.எஸ்.எஸ்.-இன் ஹெட்கேவர் - கோல்வால்கர் உருவாக்கிய இந்து தேசியம், பால் தாக்கரே உருவாக்கிய மராத்திய சைனிக் (சிவசேனை) தேசியம் - இவை எல்லாமே ஒரே பொது அடிப்படைக் கருவிலிருந்து தோன்றிய வெவ்வேறு அவதாரங்கள். இல்லாத ஒரு தேசியத்தை இந்திய தேசியம், இந்து தேசியம் என்ற பெயரில் செயற்கையாக உருவாக்கி, அதற்காகப் போராடும் ஹீரோக்களாகக் காட்டிக் கொள்கின்றனர். சிறுபான்மை மக்களை, உழைக்கும் மக்களைத் தமது தேசியத்துக்கு எதிரான வில்லன்களாகச் சித்தரித்து பயங்கரவாதத் தாக்குதல் தொடுக்கின்றனர். இந்தப் பொதுத்தன்மை காரணமாகத்தான் எந்த நிலையிலும் அவற்றுக்கு இடையிலான நேரடி, மறைமுக உறவு ஒருபோதும் பகைத்துக் கொள்வதாகவோ, முறித்துக் கொள்வதாகவோ இல்லை. நட்பு ரீதியிலான தாகவே இருக்கிறது.

● மாணிக்கவாசகம்




**மக்கள் மீதான போரே**
**நக்சல் ஒழிப்புப் போர்!**

பிப். 20 - சென்னை
பொதுக்கூட்டம் - கலைநிகழ்ச்சி
ஒளி, ஒலி குறுந்தகடுகள் விற்பனை

தோழர் எஸ். பாலன், தோழர் வரவரராவ், தோழர் மருதையன்
ஆகியோரின் உரைகள் மற்றும் புரட்சிகர கலைநிகழ்ச்சி
அடங்கிய இரு ஒளிக் குறுந்தகடுகள் (DVD) ரூ. 100/-

பொதுக்கூட்ட உரை மட்டும் கொண்ட
ஒலிக் குறுந்தகடு (CD) ரூ. 30/-

(அஞ்சல் செலவுகள் தனி)

தொடர்புக்கு: பு.ஜ.தொ.மு. - 9444834519
புதிய கலாச்சாரம் - 044-23718706
கீழைக்காற்று - 044-28412367




படிப்பகம்

www.padippakam.com

## மீன்பிடி ஒழுங்குமுறை மசோதா:

# மீனவர் மீதான இந்திய அரசின் போர்!

**கடல்வளத்தை மீனவர்களிடமிருந்து பறித்து ஏகாதிபத்தியங்களிடம் ஒப்படைக்கும் ஆக்கிரமிப்புப் போர் பிரகடனம்தான் இந்த மசோதா.**

தினந்தோறும் உயிரைப் பணயம் வைத்து, ஆழ் கடலில் நெடுந்தொலைவு சென்று நம் மீனவர்கள் பிடித்து வரும் மீன்களால்தான், இந்தியாவின் புரதத் தேவையில் பாதியளவு நிறைவு செய்யப்படுகிறது. இம்மீனவர்களின் வாழ்வுரிமையையும் அன்றாடச் செயல்பாடுகளையும், இந்திய அரசு நடைமுறைப்படுத்தவுள்ள ''மீன்பிடித்துறை ஒழுங்குமுறை மசோதா'' முடக்கிப் போடப் போகின்றது.

மீன் பிடித் தொழிலில் இந்தியாவிலேயே மூன்றாவது இடத்தை வகிக்கும் தமிழ்நாட்டிலுள்ள 2.5 லட்சம் மீனவர்கள், 6200 மீன்விசைப் படகுகள், 50 ஆயிரத்து 360 பாரம்பரியக் கலன்களைக் கொண்டு அண்மைக்கடல், தூரக்கடல் பகுதிகளில் மீன்பிடிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். நம் நாட்டின் மீன் உற்பத்தியைப் பெருக்குவதற்கென '70-களில் நீலப்புரட்சித் திட்டம் கொண்டுவரப்பட்டது. இத் திட்டத்தின்படி, விசைப்படகுகள் வாங்கக் கடனுதவி, டீசலுக்கு மானியம் போன்றவை கடந்த 35 ஆண்டுகளாக வழங்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் அரசு கொண்டுவந்துள்ள புதிய மசோதா, விசைப்படகுகள் மற்றும் பாரம்பரியப் படகு வகைகளுக்கிடையே உள்ள பாரதூரமான வேறுபாடுகளையோ, அவற்றின் மீன்பிடித் திறன்களையோ கருத்தில் கொள்ளாமல் அனைத்தையும் ''மீன்பிடிக் கலன்'' என ஒரே வார்த்தையில் வரையறுத்து, அனைவரையும் மீனவர்கள் என்று பொதுவில் வகைப்படுத்தி விதிமுறைகளையும் தண்டனைகளையும் வகுத்துள்ளது.

இச்சட்டப்படி, எல்லா வகைப் படகுகளும் மத்திய அரசிடம் கட்டணம் செலுத்தி அனுமதி பெற வேண்டும். அவ்வாறு அனுமதி பெறும்போதே பிடிக்கப் போகும் மீன் இனங்கள், எந்த இடத்தில் எத்தனை மாதங்கள் மீன்பிடிக்கப்படும், எந்த முறையில் மீன் பிடிப்பு நடக்கும் முதலான அனைத்தையும் அரசுக்குத் தெரிவிக்க வேண்டும்; என்ன நோக்கத்துக்காக மீன் பிடிக்கப்படுகிறது என்பதையும் குறிப்பிட்டாக வேண்டும்; இதற்கான அனுமதிகளையும் மீனவர்கள் குறிப்பிட்ட இடைவெளியில் காலந்தோறும் புதுப்பித்துக் கொண்டிருக்க வேண்டும். பிழைப்புக்கா, வணிகத்துக்கா, ஆய்வுக்கா என்றெல்லாம் துருவிக் கொண்டிருக்கப் போகிறது அரசு. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக ஆண்டு அனுபவித்து வரும் கடலை மீனவர்களிடம் இருந்து பிரித்து, அவர்களை நாட்டினுள் ஊடுருவியிருக்கும் பயங்கரவாதிகளைப் போல கேள்வி மேல் கேள்வி கேட்டு மீனவர்களின் பாரம்பரிய உரிமையைப் பறித்தெடுக்கத் துடிக்கிறது, அர .

நாட்டின் பாதுகாப்புக் காரணத்தையோ அல்லது அரசு தீட்டும் கடல் அல்லது மீன்வளம் சார்ந்த திட்டத்தைக் காட்டியோ மீனவர்களுக்குத் தரப்படும் அனுமதிகளையும் சலுகைகளையும் ரத்து செய்யும் அதிகாரமும் அர க்கு அளிக்கப்பட்டுள்ளது. திடீரென சில குறிப்பிட்ட வகை மீனினங்களைப் பிடிக்கக் கூடாது எனக் கட்டுப்பாடுகளை விதிக்கவும் அர க்கு அதிகாரம் தரப்பட்டுள்ளது.

மீன்பிடித் தொழில் ஒழுங்குமுறை மசோதாவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, மீனவப் பெண்கள் சென்னையில் நடத்திய பேரணி. (கோப்புப் படம்)



இந்த விதிமுறைகளை மீறும் மீனவர்களுக்குத் தரப்படவுள்ள தண்டனைகளையும் இச்சட்டம் பட்டியலிட்டுள்ளது. மீன்பிடிப் படகில் பத்தாயிரம் ரூபாய்க்கு மேல் மீன்கள் இருக்குமானால், படகு பறிமுதல் செய்யப்படும். படகை விடுவிக்க வேண்டுமானால் படகின் மதிப்பில் பாதியைப் பிணையாகக் கட்ட வேண்டும். அப்படகில் இருந்த அனைத்து தொழிலாளர்களுக்கும் 25 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்படும். சோதிக்க விடாமல் தடுப்பவர்களுக்கு, பத்து லட்சம் ரூபாய் வரை அபராதம்; பன்னிரண்டு கடல்மைல் தாண்டினால் ஒன்பது லட்சம் அபராதம்; படகின் சொந்தக்காரருக்கு மூன்றாண்டு சிறைத் தண்டனையும் உண்டு. மீன்களும்



படிப்பகம்

www.padippakam.com

பறிமுதல் செய்யப்படும். படகின் நீளம் 12 மீட்டருக்கு மேல் இருந்தாலும் தண்டனை உண்டு.

கரையோரப் பகுதிகளில் மீன்வளம் குறைந்துவருவதால், 12 கடல்மைல்களைத் தாண்டி மீன்பிடிக்கச் செல்லாவிட்டால் பிழைக்கவே முடியாது என்பதுதான் மீனவர்களின் இன்றைய நிலைமையாக உள்ளது. விசைப் படகேறி, கடலில் நெடுந்தொலைவு பயணித்து, பல நாட்கள் தங்கியிருந்து, மீன் பிடிக்க ஒரு முறை போய் வரும் செலவு மட்டுமே ஒன்றரை லட்சம் ரூபாய் வரை ஆகிறது. இந்நிலையில், இவ்வாறான கட்டுப்பாடுகளை அரசு கொண்டுவருமாயின் மீனவர்கள் இனி கடல் இருக்கும் திசைப்பக்கமே தலைவைத்துப் படுக்க முடியாது.

விதிமுறைகளை மீறும் மீனவரைக் கைது செய்தல், படகு மற்றும் மீன்பிடிக் கருவிகளைப் பறித்தல் போன்றவற்றிற்கு இழப்பீடும் கோரமுடியாது. சந்தேகத்தின் பேரில் தவறான நபர்களைப் பிடித்தாலும், அவற்றிற்காக கடலோரக் காவல்படையைக் குற்றம் சாட்ட முடியாத படிக்கு இச்சட்டம் கடலோரக்காவல் படைக்கு எல்லையற்ற அதிகாரத்தைக் கொடுக்கிறது.

ஏற்கெனவே மீனவர்களின் வாழிடங்கள் உல்லாச விடுதிகள் கட்டுவதற்கென கரையோரங்களிருந்து அப்புறப்படுத்தப்பட்டு வருகின்றன. தீவிரமாகியிருக்கும் உலகமயத்தினால் அதிகரிக்கும் கப்பல் போக்குவரத்து, கடலோர நகரங்களிலிருந்து தினமும் கடலில் கொட்டப்படும் நச்சுக்கழிவுகள், சாக்கடைகள், அனல் மின்நிலைய சாம்பல்கள் போன்றவையும், ஏற்கெனவே இருந்த மீன்வளத்தை அழித்துக் கொண்டு வரும் சூழ்நிலையில், மீனவர்களின் மேல் இன்னுமோர் பேரிடியாக ஏன் இந்தக் கெடுபிடிச் சட்டம்?

இதற்கு இந்திய அரசு, ''ஐரோப்பிய யூனியன் உள்ளிட்ட பிற நாட்டு அமைப்புகளுக்கு மீன்களையும் மீன் பொருள்களையும் ஏற்றுமதி செய்வதென்றால், இந்தியாவில் அதற்கான ஒழுங்குபடுத்தும் ஆணையம் இருக்க வேண்டுமென்ற அந்நாடுகளின் எதிர்பார்ப்புக்கிணங்கவும், இந்தியாவின் மீனவர் உரிமைகளை நிலைநாட்டவும் இந்தச் சட்டம் தேவை'' எனக் கூறுகிறது.

வேளாண்மைத் துறை அமைச்சகமோ, கடல்வழியாக பாகிஸ்தானிலிருந்து வந்த பயங்கரவாதிகள் நடத்திய கொடுந்தாக்குதல்கள் போல இனி நடைபெறாமல் தடுக்க, நமக்கு உரிமையுள்ள கடல் பரப்பை நிர்ணயிப்பதும், அதில் நமது ஆதிக்கத்தை நிலைநாட்டுவதும் அவசியம் என்பதால் இந்த மசோதா கொண்டுவரப்படுவதாகச் சொல்கிறது. ஆனால் உண்மையோ வேறு.

1990-களில் நரசிம்மராவ் அரசால் அறிவிக்கப்பட்ட மீன்வளக் கொள்கை, 'கூட்டு முயற்சி' எனும் பெயரில் பன்னாட்டு ஆலைக் கப்பல்கள் இந்தியக் கடல்களில் மீன்பிடிக்க உரிமம் வழங்கியது. இம்முடிவுதான், மீனவர்களின் வாழ்வாதாரத்தின் மீது பன்னாட்டு நிறுவனங்கள் படிப்படியான தாக்குதலைத் தொடுத்திட வழிகோலியது. இந்தியக் கடல் எல்லைக்குள் நிறுத்தப்பட்டுள்ள இந்நிறுவனங்களின் கப்பல்கள், நவீன கருவிகளைக் கொண்டு முட்டை, குஞ்சு வேறுபாடின்றி அப்படியே மீன் ஆதாரங்கள் அனைத்தையும் உறிஞ்சி எடுத்து, மீன்களை இரகம் வாரியாகப் பிரித்தெடுத்து இன்னொரு கப்பலுக்குக் கைமாற்றி விடுகின்றன. எஞ்சிய மீன்குஞ்சுகளையும், முட்டைகளையும், சில சமயங்களில் துடுப்பு வெட்டப்பட்ட சுறாவின் உடல்களையும் கழிவாகக் கடலில் கொட்டிவிடுகின்றன. மீன் வளத்தின் ஆதாரமான முட்டைகளைத் துப்புரவாகத் துடைத்தொழித்து வரும் இவற்றின் அகோரப் பசிக்கு இடையூறாக இருக்கும் இந்திய மீனவர்களை முற்றிலுமாக கடலிலிருந்து துரத்துவதுதான் ஏகாதிபத்தியத்தின் அடுத்த இலக்கு.

**மீனவர்களைக் கடற்கரையில் இருந்து அப்புறப்படுத்தி வரும் அர , அவர்களை மீன்பிடித் தொழிலில் இருந்தும் விரட்டியடிப்பதற்காகவே இக்கருப்புச் சட்டத்தைக் கோண்டு வந்துள்ளது.**

அந்த நோக்கத்திற்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டிருக்கும் இந்த சட்டம், அதற்காகக் கடுமையான நிபந்தனைகளையும், தண்டனைகளையும் வரையறுத்துள்ளது. அதே நேரத்தில் மீனவர்களை அத்தொழிலில் இருந்து அப்புறப்படுத்தும் நோக்கில் மாற்றுத் தொழில் கற்றுத் தரும் -றுக்கணக்கான தன்னார்வக் குழுக்கள், சுனாமி பேரழிவுக்குப் பிறகு இந்தியக் கடற்கரை நெடுக வலை விரித்துள்ளன. ரொட்டி தயாரிப்பு, உள்ளீடற்ற செங்கல் தயாரிப்பு போன்ற சிறுதொழில்களுக்கு மீனவர்களை மாற்றும் சதித்திட்டத்தில் நாகை, காஞ்சிபுரம் மாவட்டங்களின் கரையோரங்களில் இவை இயங்கி வருகின்றன. ஒரே நேரத்தில் அடக்குமுறை சட்டம் மூலமும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலமும் மீனவர்கள் மீது ஏகாதிபத்தியமும் இந்திய அரசும் போரைத் தொடுத்துள்ளன.

இச்சட்டத்திற்கு மீனவர்கள் மத்தியில் எழுந்துள்ள பரவலான எதிர்ப்புக்கூட ஏகாதிபத்திய உலகமயமாக்கத்தின் சதிகளுக்கெதிராகப் போராடாமல், இலக்கற்ற போராட்டங்களாகவே உள்ளன. அனைத்து பிரிவு உழைக்கும் மக்களுடன் இணைந்து, நமது கடல்வளத்தைக் கொள்ளைகொண்டு போகவரும் ஏகாதிபத்தியங்களை விரட்டியடிக்கும் திசையில் மீனவர்களின் போராட்டம் முன்னேறாவிடில், நமது கடல் இனி நம்முடையதாக இருக்காது.

● கதிர்



படிப்பகம்

www.padippakam.com

# ஹெய்தி நிலநடுக்கம்:

# பிணந்திண்ணி அமெரிக்கா!

**நிவாரணம் என்ற பெயரில், ஹெய்தியை முழுமையாக ஆக்கிரமித்துக் கொள்ள முயலுகிறது, அமெரிக்கா.**

**''எங்களுக்கு இராணுவ வீரர்கள் தேவையில்லை!''**

மத்திய அமெரிக்காவில் கியூபாவிற்கு அருகில் அமைந்துள்ள ஹெய்தி தீவைச் சேர்ந்த சாதாரண குடிமகன் தொடங்கி அத்தீவின் முன்னாள் இராணுவ அமைச்சர் உள்ளிட்டுப் பலரும் இவ்வார்த்தைகளைத் தான் இப்பொழுது கூறிக் கொண்டிருக்கிறார்கள். நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ள அந்நாட்டிற்கு நிவாரணம் வழங்குவது என்ற போர்வையில் அமெரிக்க ஏகாதிபத்தியம் நடத்திவரும் அரசியல் சதிராட்டத்தைத் தோலுரித்துக் காட்டும் வார்த்தைகள் இவை.

கடந்த ஜனவரி மாதம் 12 ஆம் தேதி இரவில் (அந்நாட்டு நேரப்படி) ஹெய்தியைத் தாக்கிய நிலநடுக்கம், கடந்த இரு-று ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள மிகப் பெரிய நிலநடுக்கங்களுள் ஒன்றாகக் கூறப்படுகிறது. இந்நிலநடுக்கம் மையம் கொண்டிருந்த ஹெய்தியின் தலைநகர் போர்ட்-ஆஃப்-பிரின்ஸ் (Port-au-Prince) மண்மேடாகவும் பிணக்காடாகவும் மாறிப் போனது. இந்நிலநடுக்கத்தால் இறந்துபோன ஏறத்தாழ 2 இலட்சம் பேரில், 1 இலட்சம் பேர் தலைநகரில் மட்டும் இறந்து போனதாகக் கூறப்படுகிறது. பொருளாதாரச் சீர்திருத்தம் என்ற பெயரில் விவசாயம் அழிக்கப்பட்டு, அந்நியக் கடனில் மூழ்கி மூச்சுத் திணறிக் கொண்டிருக்கும் ஹெய்தி மக்களின் மீது இந்நிலநடுக்கம் இன்னுமொரு இடியாக இறங்கியிருக்கிறது.

ஹெய்தியைத் தாக்கிய நிலநடுக்கம் மிகச் சக்தி வாய்ந்தது என்றாலும், அந்நாட்டில் நடைபெற்று வந்த ஊழல் நிறைந்த, திறமையற்ற ஆட்சிதான் இப்பேரழிவுக்குக் காரணம் என மேற்குலக ஊடகங்கள் குற்றம் மத்தி வருகின்றன. இது, எய்தவனை விட்டுவிட்டு அம்பை மட்டும் குற்றவாளியாக்கு வதைத்தான் நினைவுபடுத்துகிறது.




ஹெய்தியின் இரு-று ஆண்டுகளுக்கும் மேலான வரலாறை எடுத்துக் கொண்டால், அந்நாடு இக்காலக்கட்டத்தில் ஒரு சில பத்தாண்டுகள் மட்டுமே தந்திரமான, இறையாண்மை மிக்க நாடாக இருந்து வந்திருக்கிறது. 18-ஆம் -ற்றாண்டில் ஹெய்தி தீவு பிரெஞ்சுக் குடியரசின் காலனி நாடாக இருந்து வந்தது. பிரெஞ்சுப் புரட்சியால் கவரப்பட்ட அத்தீவின் கருப்பின அடிமைகள், பிரான்சின் ஆதிக்கத்துக்கும் வெள்ளை எஜமானர்களுக்கும் எதிரான விடுதலைப் போரை 1791-இல் தொடங்கினர். பிரெஞ்சுப் படைகளையும், அத்தீவைக் காலனியாக்க முயன்ற இங்கிலாந்து, ஸ்பெயின் படைகளையும் எதிர்த்துப் போரிட்ட கருப்பின அடிமைகள், 1804-ஆம் ஆண்டு அத்தீவை விடுதலை செய்து, கருப்பினக் குடியரசை நிறுவினர். வர்க்கப் போராட்ட வரலாற்றில் இப்புரட்சி மிகுந்த முக்கியத்துவம் உடையதாகக் கருதப்படுகிறது.

எனினும், கருப்பினக் குடியரசை முறியடிக்கும் திட்டத்தோடு, ஹெய்தி தீவின் கடல் வழி அனைத்தையும் மறித்து பிரான் முற்றுகையிட்டது. 1804-ஆம் ஆண்டு தொடங்கிய இந்த முற்றுகை 1863-ஆம் ஆண்டு தான் முடிவுக்கு வந்தது. இம்முற்றுகையை விலக்கிக் கொள்வதற்காக ஹெய்தி பிரான்க்கு இன்றைய மதிப்புப்படி 3,100 கோடி அமெரிக்க டாலர்கள் (1,43,437 கோடி ரூபாய்) கப்பமாகச் செலுத்த ஒப்புக் கொண்டது. ஹெய்தி இக்கப்பத் தொகையை 1947-ஆம் ஆண்டு வரை செலுத்தி வந்தது. ஹெய்தி இக்கப்பத் தொகையைச் செலுத்த அமெரிக்க வங்கிகளிடம் கடன் வாங்கி வந்ததைப் பயன்படுத்திக் கொண்டு, அமெரிக்க ஏகாதிபத்தியம் ஹெய்தியை 1914-இல் தனது காலனி நாடாக்கிக் கொண்டது. அமெரிக்காவின் இந்த நேரடி காலனியாதிக்கம் 1934 வரை நீடித்தது. அதன்பிறகு, அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆசியோடு டுவாலியர் குடும்பம் ஹெய்தியை ஆளத் தொடங்கியது.

1980-களில் டுவாலியரின் சர்வாதிகார ஆட்சிக்கு எதிராக நடந்த கலகத்தையடுத்து, டுவாலியர் குடும்பம் அதிகாரத்தை இழந்து நாட்டைவிட்டு ஓடியது. அதன் பின் நடந்த தேர்தலில், டுவாலியர் ஆட்சிக்கு எதிராக மக்களை அணிதிரட்டிப் போராடிய கிறித்துவப் பாதிரியார் அரிஸ்டைடு நாட்டின் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். நிலச் சீர்திருத்தம், ஹெய்தியில் இயங்கிவரும் அமெரிக்கப் பன்னாட்டு நிறுவனங்களில் வேலை பார்க்கும் தொழிலாளர்களின் சம்பள உயர்வு போன்ற சீர்திருத்தங்களை நிறைவேற்ற முயன்ற அரிஸ்டைடின்



படிப்பகம்

www.padippakam.com



பிணக்காடான போர்ட்-ஆப்-பிரின்ஸ் நகரம்: பிணங்களை உடனடியாக அப்புறப்படுத்திப் புதைக்கக்கூட வசதியற்ற, வறிய நிலையில் ஹெய்தி இருப்பதன் காரணமென்ன?

ஆட்சியை, அமெரிக்க ஏகாதிபத்தியம் 1991-ஆம் ஆண்டு ஒரு அதிரடிப் புரட்சியின் மூலம் கவிழ்த்தது. எனினும், அதன்பிறகு நடந்த பேரங்களையடுத்து அரிஸ்டைடை மீண்டும் அதிபராக அமர்த்தியது, அமெரிக்க ஏகாதிபத்தியம். இதற்கு ஈடாக, ஹெய்தியின் மின் துறையை அமெரிக்க முதலீட்டாளர்களுக்கு விற்கவும், விவசாயப் பொருட்களின் இறக்குமதி விதிக்கப்பட்டு வந்த ங்க வரியை விலக்கிக் கொள்ளவும் அரிஸ்டைடு சம்மதித்தார்.

அமெரிக்க ஏகாதிபத்தியம் அரிஸ்டைடின் வி வா சத்தை முழுமையாக நம்பாததால், 2004-ஆம் ஆண்டு சி.ஐ.ஏ. மூலம் அதிபர் அரிஸ்டைடைக் கடத்திக் கொண்டு போய் தென் ஆப்பிரிக்க அரசிடம் ஒப்படைத்தது. அதன் பிறகு அமெரிக்க வி வாசிகளைக் கொண்ட பொம்மையாட்சியொன்று ஹெய்தியில் நிறுவப்பட்டாலும், அத்தீவின் நிர்வாகம் முழுவதையும் ஐ.நா.வும், அமெரிக்காவும் எடுத்துக் கொண்டன. ஹெய்தியின் இராணுவம் ஏற்கெனவே அரிஸ்டைடால் கலைக்கப்பட்டதைப் பயன்படுத்திக் கொண்டு, அமெரிக்க மற்றும் பிரேசில் வீரர்களைக் கொண்ட ஐ.நா. படை ஹெய்தியில் இறக்கப்பட்டது. அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 2,000 அதிகாரிகளைக் கொண்ட சிவில் நிர்வாகம் ஐ.நா.வின் மேற்பார்வையில் அமைக்கப்பட்டது. அப்பொழுது அமெரிக்க அதிபராக இருந்த ஜார்ஜ் புஷ், அமெரிக்காவின் முன்னாள் அதிபர் பில் கிளிண்டனை ஹெய்தியின் பொருளாதார ஆலோசகராக நியமித்தார். ருக்கமாகச் சொன்னால், ஐ.நா.மன்றத்தின் போர்வையில் அமெரிக்காவின் மறுகாலனியாதிக்கம் ஹெய்தியின் மீது திணிக்கப்பட்டது.

1991-க்குப் பிறகு, அமெரிக்காவால் ஹெய்தி மீது திணிக்கப்பட்ட பொருளாதாரச் சீர்திருத்தங்கள், அந்நாட்டு மக்களால் ''சாவுத் திட்டம்'' என்றே அழைக்கப்பட்டன. 1990-க்கு முன்னதாக அரிசி உற்பத்தியில் தன்னிறைவு அடைந்த நாடாக இருந்து வந்த ஹெய்தி, விவசாய இறக்குமதிக்கு இருந்து வந்த கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதால், தற்பொழுது உணவுப் பொருட்களுக்கு அமெரிக்காவிடம் கையேந்தி நிற்கும் அவலநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. விவசாயம் முற்றிலும் அழிக்கப்பட்டதால் விவசாயிகள் வேலை தேடி நகரங்களுக்கு வந்து குவிந்தனர். ஹெய்தியின் மொத்த மக்கட் தொகையில் (90 இலட்சம் பேர்) மூன்றில் ஒரு பகுதியினர் (30 இலட்சம் பேர்) தலைநகரின் சேரிப் பகுதிகளில் வாழ்ந்து வருவதிலிருந்தே, விவசாய அழிவின் பரிமாணத்தைப் புரிந்து கொள்ள முடியும்.

அமெரிக்கப் பன்னாட்டு நிறுவனங்கள் இவர்களின் உழைப்புச் சக்தியை மிகவும் மலிவான கூலிக்குச் ரண்டிக் கொழுத்து வருகின்றன. இதனாலேயே ஹெய்தியில் உள்ள அமெரிக்கத் தொழிற்சாலைகள், ''வியர்வைக் கூடாரங்கள்'' என அழைக்கப்படுகின்றன. அமெரிக்காவின் வால்-மார்ட் போன்ற பன்னாட்டு நிறுவனங்களுக்குத் தேவைப்படும் நுகர்பொருட்களைத் தயாரித்துக் கொடுக்கும் இயந்திரமாகவும், அமெரிக்காவின் உணவுப் பொருட்களைக் கொண்டு வந்து கொட்டும் குப்பைத் தொட்டியாகவும் ஹெய்தி மாற்றப்பட்டது. இப்படி கடந்த -றாண்டுகளுக்கும் மேலாக ஹெய்தியை மறைமுகமாகவும், நேரடியாகவும் ஆதிக்கம் செலுத்திவரும் அமெரிக்கா, அத்தீவின் கருப்பின மக்களின் நலனுக்காக ஒரு துரும்பைக்கூடக் கிள்ளிப் போட்டதில்லை. கல்வி, மருத்துவம், குடிநீர், குடியிருப்பு என எந்த அடிப்படை வசதியுமற்ற நிலையில் ஹெய்தி இருத்தப்பட்டிருப்பதால்தான், நிலநடுக்கத்தின் பின் பிணத்தை அப்புறப்படுத்தக்கூட பிற நாடுகளின் உதவியை அத்தீவு மக்கள் எதிர்பார்த்தனர். இப்படிபட்ட அவலநிலையை ஏற்படுத்திய குற்றவாளிகளோ, இப்பொழுது வள்ளல்களாக அவதாரமெடுத்துள்ளனர்.

அமெரிக்க ஏகாதிபத்தியம் இந்நிலநடுக்கத்தைப் பயன்படுத்திக் கொண்டு ஹெய்தியை நேரடியாகவே மறுகாலனியாக்கிக் கொள்ளவும், அத்தீவையே தனது இராணுவத் தளமாக மாற்றவும் அடுத்தடுத்து நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. நிலநடுக்கம் ஏற்பட்ட செய்தியை அறிந்தவுடன் மருத்துவர்கள், நிவாரணப் பொருட்களை அனுப்புவதற்குப் பதிலாக, 13,000 இராணுவச் சிப்பாய்களைத்தான் அமெரிக்கா அனுப்பியது. அத்தீவின் ஒரேயொரு விமான தளத்தை ஐ.நா.வின் ஒப்புதலோடு தனது முழுக்கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்த அமெரிக்கா, இதன்மூலம் தனது துருப்புகள் தரையிறங்கிய பிறகே, நிவாரணப் பொருட்களை ஏற்றி வந்த பிற நாட்டு விமானங்கள் தரையிறங்க அனுமதி வழங்கியது; அமெரிக்காவின் உள்துறைச் செயலர்



படிப்பகம்

ஹிலாரி கிளிண்டன் ஹெய்திக்கு வருவதைக் காரணம் காட்டி விமான நிலையத்தை அமெரிக்க இராணுவம் மூடியதால், நிவாரணப் பொருட்களை ஏற்றிவந்த விமானங்கள் ஹெய்திக்கு அருகில் உள்ள டொமினிகன் குடியரசில் தரையிறங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு, நிவாரண உதவி அளிப்பது தாமதமானது.


ஹெய்திக்கு வந்த ஹிலாரி கிளிண்டன் நிவாரண நடவடிக்கைகள் குறித்துப் பேசவில்லை; மாறாக, அத்தீவின் நிர்வாகக் கட்டுப்பாடு முழுவதையும் அமெரிக்க இராணுவத்திடம் ஒப்படைப்பது குறித்தும், மறுகட்டுமானப் பணிகளை அமெரிக்க நிறுவனங்களுக்கு வழங்குவது குறித்தும் பேசிவிட்டுச் சென்றார். அமெரிக்க இராணுவமோ நிவாரண நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்குப் பதிலாக, நிலநடுக்கத்தால் இடிந்துபோன அதிபர் மாளிகையையும் பிற நகரங்களையும் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவதற்குதான் முக்கியத்துவம் கொடுத்தது. ஹிலாரி வந்துபோனவுடனேயே ஹெய்தியில் அவசர நிலையும் பிரகடனப்படுத்தப்பட்டது. சட்டம்-ஒழுங்கை நிலைநாட்டினால்தான் நிவாரண உதவிகளைத் தடையின்றி வழங்க முடியும் என இதற்கு ஏகாதிபத்தியவாதிகள் பொழிப்புரை எழுதினார்கள். இதற்கு ஏற்றாற்போல, மேற்குலக ஊடகங்கள் ஹெய்தியில் திருட்டும் கலகமும் தலைவிரித்தாடுவதாக எழுதித் தள்ளின.

ஐ.நா.வின் மதிப்பீட்டின்படியே, ஹெய்தியில் 2 இலட்சம் பேருக்கு உடனடியாக ஏதாவதொரு வேலை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்; 20 இலட்சம் பேருக்கு உணவு வழங்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும். ஆனால், இதுவரை அந்நாட்டிற்குக் கிடைத்துள்ள உதவிகளை வைத்துக் கொண்டு 6 இலட்சம் பேருக்குத்தான் உணவு வழங்க முடியும்; 12,000 பேருக்குத்தான் வேலைவாய்ப்பினை வழங்க முடியும். தர்மப் பிரபுவாகக் காட்டிக் கொள்ளும் அமெரிக்க ஏகாதிபத்தியம் வழங்கியிருக்கும் நிதியுதவி 10 கோடி அமெரிக்க டாலர்கள்தான்; ஹெய்தியைக் கொள்ளையடித்து வரும் அமெரிக்க முதலாளிகள் வழங்கியிருக்கும் நிதியுதவி 4.3 கோடி அமெரிக்க டாலர்கள்தான். அமெரிக்காவின் ஈராக்-ஆப்கான் போர்ச் செலவுகளையும் இந்த நிவாரண உதவியையும் ஒப்பிட்டால், அமெரிக்காவின் ஆளும் கும்பல்களின் மீது காறிஉமிழத்தான் தோன்றும்.

**சட்டம்-ஒழுங்கை நிலைநாட்டினால்தான் நிவாரண உதவிகளைத் தடையின்றி வழங்க முடியும் என்று கூறி அமெரிக்க இராணுவ ஆக்கிரமிப்பு நியாயப்படுத்தப்படுகிறது.**

ஹெய்தி மக்களின் மறுவாழ்வுக்கு உதவ வேண்டும் என்றால், குறைந்தபட்சம் அந்நாட்டின் அந்நியக் கடன்களை உடனடியாக ரத்து செய்ய வேண்டும் எனப் பலரும் கோரி வருகிறார்கள். இக்கோரிக்கையைப் பரிசீலிக்கக்கூட மறுக்கும் கருப்பினத்தைச் சேர்ந்த அதிபர் ஒபாமா, ஹெய்திக்கு மேலும் கூடுதலாக அமெரிக்கத் துருப்புகளை அனுப்புவதற்கான நிர்வாக உத்தரவைத் தயார் செய்கிறார். ஹெய்தியை மொட்டையடித்த முன்னாள் அமெரிக்க அதிபர்கள் பில் கிளிண்டனையும், ஜார்ஜ் புஷ்ஷையும் நிவாரண உதவி வழங்குவதை மேற்பார்வையிடும் பொறுப்பில் அமர்த்துகிறார். கருப்பினத்தைச் சேர்ந்த ஒபாமா அதிபரானால் அமெரிக்கா தலைகீழாக மாறிவிடும் என்ற பரப்புரை ஹெய்தியில் மீண்டும் அம்மணமாகிவிட்டது.

போர்ட்-ஆஃப்-பிரின்ஸ் நகரில் உணவுக்காக அலைமோதும் மக்கள் கூட்டம்: பல்லிளித்துப் போன ஏகாதிபத்தியங்களின் நிவாரண உதவி!



மத்திய மற்றும் தென் அமெரிக்கப் பகுதியில் தனது ஆதிக்கத்தை மீண்டும் உறுதிப்படுத்திக் கொள்ளவும், தன்னை எதிர்த்துவரும் கியூபா, வெனிலா, பொலிவியா நாடுகளை எதிர்கொள்ளவும் அமெரிக்கா அடுத்தடுத்துப் பல நடவடிக்கைகளை எடுத்துவருகிறது. ஹோண்டுராஸில் ஆட்சிக் கவிழ்ப்பு நடத்திய கையோடு கொலம்பியாவில் இராணுவத் தளங்களை அமைத்துள்ள அமெரிக்கா, அவற்றின் தொடர்ச்சியாக ஹெய்தியைத் தனது நேரடி மறுகாலனி நாடாக மாற்ற முயன்று வருகிறது. அதற்காக ஹெய்தியில் விழுந்த பிணங்களையும், அம்மக்களின் பட்டினியையும் துயரத்தையும் கூச்சமின்றிப் பயன்படுத்தி வருகிறது, அமெரிக்கா.

● குப்பன்

Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGA RAJ.

www.padippakam.com

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

வரவரராவ், பேச்சு வார்த்தை குறித்து இரண்டு நாக்குகளால் பேசுபவர் சிதம்பரம் தான் என்பதை அம்பலப்படுத்தியதுடன், எத்தனை இரத்தம் சிந்தினாலும்,எத்தனை உயிர்களைப் பலியிட்டாலும் காட்டுவேட்டைக்கு எதிரான இந்தப் போராட்டம் தொடரும் என்பதையும் பெருத்த கரவொலிக்கு இடையே கூறி முடித்தார்.

அடுத்துப் பேசிய ம.க.இ.க.வின் மாநிலச் செயலர் தோழர் மருதையன், எண்ணெய் வளத்தைக் கைப்பற்றும் நோக்கத்துக்காக இராக்கின் மீது போர் தொடுத்த அமெரிக்கா, அதற்கு சதாமின் சர்வாதிகாரத்தை ஒழிப்பது என்று ஒரு போலி முகாந்திரத்தைக் கூறியது போலவே, காடுகளையும் கனிம வளங்களையும் கைப்பற்றும் தனது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு மாவோயிஸ்டுகளை முகாந்திரமாக்கியிருக்கிறது மத்திய அரசு என்றார். வளர்ச்சி என்ற பெயரில் பழங்குடி மக்களிடமிருந்து காடுகளைக் கைப்பற்றும் அரசு, அவற்றில் பொதுத்துறை சுரங்க நிறுவனங்களை உருவாக்கவில்லை; மாறாக, பன்னாட்டு நிறுவனங்களுக்குத்தான் காடுகளைத் தாரை வார்க்கிறது. இது, பழங்குடி மக்களுக்கு எதிராக மட்டும் நடக்கவில்லை. காடுகளையும், கடல் வளத்தையும், பொதுத்துறைகளையும், சிறுவணிகத்தையும், விவசாயத்தையும் மக்களிடமிருந்து கைப்பற்றி ஏகாதிபத்திய நிறுவனங்களிடம் ஒப்படைக்கும் இந்த ஆக்கிரமிப்புப் போரின் பெயர்தான் மறுகாலனியாக்கம் என்றார். இந்தியத் தரகு முதலாளி வர்க்கத்துக்கு நம்முடைய வரிப் பணத்திலிருந்து, நாளொன்றுக்கு 700 கோடி ரூபாய் வரிச்சலுகை வழங்கப்படுவது, குஜராத்தில் டாடாவின் கார் கம்பெனிக்கு வழங்கப்பட்டுள்ள சலுகைகள், அனில் அம்பானி விமான நிலையம் அமைக்க மகாராட்டிர அரசு வழங்கியுள்ள நிலம் என்பன போன்ற எடுத்துக்காட்டுகளைக் கூறி, மக்களுடைய சொத்துக்களைப் பறித்து முதலாளிகளிடம் ஒப்படைக்கும் இந்த அரசு, மக்களுக்கு இலவசங்களை வாரி வழங்குவதைப் போல நடிப்பதையும் அம்பலப்படுத்தினார். மஞ்சள் பையில் தனது முகத்தை அச்சிட்டு மக்களுக்கு இலவச அரிசியை வழங்கும் கருணாநிதி, ஃபோர்டுக்கும், ஹூண்டாய்க்கும், நோக்கியாவுக்கும் வழங்கிய சலுகைகளையும் மஞ்சள் பையில் போட்டுத்தான் வழங்கினாரா, என்று எள்ளி நகையாடினார். பயங்கரவாதத்துக்குக் கூறப்படும் இலக்கணத்தின்படி, மன்மோகன்சிங்கும் ப.சிதம்பரமும்தான் முதலாளித்துவப் பயங்கரவாதிகள் என்றும், பயங்கரவாதிகளுடன் நாம் பேசுவதற்கு எதுவுமில்லை என்றும் கூறி முடித்தார்.



பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய தோழர் முகுந்தன், தோழர் பாலன், தோழர் மருதையன்.

தொடர்ந்து ம.க.இ.க. கலைக்குழுவின் கலைநிகழ்ச்சிகள் தொடங்கின. பழங்குடி மக்களின் வாழ்க்கையையும் போராட்டத்தையும் சித்தரிக்கும் இசைச்சித்திரம், போர்க்குணத்தையும் உணர்வெழுச்சியையும் கூட்டத்தினரிடையே தோற்றுவித்தது. ஆளும் வர்க்கங்களும் ஓட்டுக்கட்சி அரசியல்வாதிகளும்தான் இந்த நாட்டைக் காட்டிக் கொடுக்கும் நாய்களென்பதையும், நாட்டைக் காக்கும் நாயகர்கள் நக்சல்பாரிகளே என்பதையும் கலைக்குழுவின் பாடல்கள் வெவ்வேறு கோணங்களில் விளக்கின.

எம்.ஜி.ஆர். நகர் மார்க்கெட் பகுதி முழுவதும் நிறைந்து ததும்பிய மக்கள் வெள்ளம், ஒளி வெள்ளத்தில் தகதகத்த மேடையின் சிவப்பு நிறம், கூட்டத்தில் நிறைந்திருந்த செஞ்சட்டை அணிந்த தோழர்கள், உட்கார இடமில்லாமல் நின்றபடியே கூட்டம் முழுவதையும் மிகுந்த ஆர்வத்துடன் கவனித்து ஆமோதித்த அப்பகுதி மக்கள், ஆளும் வர்க்கத்துக்கும் அரசுக்கும் எதிராக எழுப்பப்பட்ட ஒவ்வொரு கேள்வியும், கேலியும், நக்சல்பாரி என்ற சொல்லும் தோற்றுவித்த கரவொலி - ஆகிய அனைத்தும் நக்சல்பாரி இயக்கம் மக்கள் மத்தியில் பெற்றிருக்கும் செல்வாக்கிற்கும், மறுகாலனியாக்கக் கொள்கைகள் மக்களிடம் தோற்றுவித்திருக்கும் கோபத்திற்கும் நிரூபணமாக அமைந்தன. ஆளும் வர்க்கம் தொடுத்திருக்கும் இந்த மறுகாலனியாக்கப் போரை, மக்களிடமிருந்து தோன்றி எழும் சிவப்புப் பேரலை மூழ்கடிக்கும், முறியடிக்கும் என்ற நம்பிக்கையை விதைத்தது சென்னைப் பொதுக்கூட்டம்.

-பு.ஜ.செய்தியாளர்கள்.



ம.க.இ.க. மையக் கலைக்குழுவின் புரட்சிகர கலைநிகழ்ச்சி






படிப்பகம்

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No: 42648/85
Regd. No: TN/CC(S)Dn/190/09-11 Licenced to Post without pre-payment WPP No: TN/PMG/CCR/WPP-562/09-11



"நக்சல் எதிர்ப்பு நரவேட்டைப் போரை முறியடிப்போம்!" என்ற முழக்கத்துடன்
சென்னை–எம்.ஜி.ஆர்.நகரில் 20.02.2010 அன்று
நக்சல்பாரி புரட்சிகர அமைப்புகள் நடத்திய பொதுக்கூட்டத்தில் திரண்ட மக்கள் வெள்ளம்.